Vol.6, Issue 7 | Annual Subscription ₹ 480
Rotary News, December 2023, Chennai

@NewsRotary
/RotaryNewsIndia

டிசம்பர் 2023

ரோட்டரி நியூஸ்

இந்தியா
www.rotarynewsonline.org

Rotary

ADVT.

To build and groom young Entrepreneurs

CREATE HOPE in the WORLD

RYLA

Be an Entrepreneur

Certification in Entrepreneurship

Rotary

A Comprehensive **ENTREPRENEURSHIP DEVELOPMENT WORKSHOP** in 3500 Minutes

Stop searching jobs
Start producing jobs

A Project by
Rotary Club of Virudhunagar
RI Dist- 3212

Only **32** Participants Per Batch

The Top 2 Performers of Each Batch FLY TO SINGAPORE* (Industrial Visit) Free of Cost.

On Board **934** Through 30 Editions

Who Can PARTICIPATE IN RYLA?

Rotaractors
Third & Fourth Year UG Students
First & Second Year PG Students
Graduates & Post Graduates
between ages 20 and 28

- Formula to Choose the Right Business
- Procuring Investments at Ease
- Productive People Management
- Digital & Organic Marketing Strategies
- Profit Making Techniques
- Showstopper Business Plans

- No. of Participants, Who have Started their Own Enterprises- 158

* Fly to Singapore Winners-60

BUSINESS PLAN | POWER SPEAKERS | CONTINUOUS HANDHOLDING | INVESTORS MEET | LOT MORE SURPRISES

UPCOMING BATCH DATES
Batch 32 : 15th, 16th & 17th DEC, 2023
Batch 33 : 19th, 20th & 21st JAN, 2024
Batch 34 : 16th, 17th & 18th FEB, 2024

INVESTMENT - Rs.2500 Only
(Incl. Accommodation / Food / T-Shirt / Certification / E-Book / CREA Programs)

VENUE - Hotel St. Antony's Residency
Sipcot Industrial Growth Center
Gangaikondan, Tamilnadu

CONTACT FOR REGISTRATION: 94431 66650 / 94433 67248

LEKHA ads/Dec 23/Rotary/1

PG | IDHAYAM PROMISE OF HEALTH AND HAPPINESS | Srinidhi Building Sustainable Relationship | K.V. Ramaswamy MEMORIAL TRUST

உள்ளே

12
KGF-ல் "விஷத்திலிருந்து பழங்களை உருவாக்கும்" பெங்களூரு ரோட்டரியர்கள்

30
தில்லி NCR, குருகிராமில் உள்ள பள்ளிகளுக்கு புத்துயிர் அளிக்கும் RC தில்லி இம்பீரியல்

36
கொல்கத்தாவில் 20 பள்ளிகளில் WASH ஏற்படுத்திய மாற்றம்!

38
மீட்க்கப்பட்ட பெண்களுக்கு திறனளித்தல்

44
தகனக் கூடம் மற்றும் பல்லுயிர் பூங்காவை உருவாக்கிய RC நீல்கிரிஸ்

48
ஏன் இந்தியா ஒரு சிறந்த நாடாக மாற இந்திய அணியை பின்பற்ற வேண்டும்

52
சண்டீகர் ரோட்டரியின் பளிச்சிடும் சேவை!

60
Rosé -ன் உலகளாவிய எழுச்சி: ஒரு திராட்சை பயணம்

64
கலை மூலம் உலகை ஒன்றிணைத்தல்

68
நிலைத்தன்மை உங்கள் ஷாப்பிங் பட்டியலை முடிவு செய்யட்டும்

70
ஆப்பிரிக்க பெண்ணுக்கு முதுகெலும்பு சிதைவு அறுவைச்சிகிச்சை

72
பதற்றம் மற்றும் மனச்சோர்வை சமாளித்தல்

76
சிறை அனுபவம்

சுவாமிநாதன் அவர்களுக்கு உரிய அஞ்சலி

இந்தியாவின் மிக உயர்ந்த வேளாண் விஞ்ஞானி மற்றும் உலகின் இந்தப் பகுதியில் உணவுப் பாதுகாப்பின் சிற்பிகளில் ஒருவரைப் பற்றிய விரிவான கட்டுரைக்கு வாழ்த்துகள். இருப்பினும், நீங்கள் ஒரு முக்கிய புள்ளியை தவறவிட்டீர்கள். RC மெட்ராஸ் ஈஸ்ட் இன் கௌரவ உறுப்பினரான அவர், வாட்டர் எக்ஸ்போ, பயோமாஸ் ஷோ, கிரீன் எர்த் செமினார்-கம்-எக்ஸ்போ மற்றும் ஃபுட் செஃப்டி எக்ஸ்போ போன்ற பல முயற்சிகளுக்கு தலைமை தாங்கினார். ஃபுட் செஃப்டி எக்ஸ்போ, அப்போதைய பிரதமர் தேவ கவுடாவால் தொடங்கி வைக்கப்பட்ட ஒரு வார நிகழ்வாகும். 1995-ம் ஆண்டு முதல் ஒவ்வொரு ஆண்டும் M S சுவாமிநாதனின் பிறந்தநாளில் சுற்றுச்சூழல் பாதுகாப்பு விருதை சங்கம் வழங்கி வருகிறது.

P E ராமகிருஷ்ணன்
RC மெட்ராஸ் ஈஸ்ட் — D 3232

நோபல் பரிசு பெற்ற நார்மன் போர்லாக் வழங்கிய 100 கிலோ கோதுமை விதைகளை 100 மில்லியன் டன் கோதுமையாக மாற்றியதன்

மூலம் இந்தியா உணவு உற்பத்தியில் தன்னிறைவு அடைந்தது சுவாமிநாதனின் சிறந்த மனிதாபிமானத்தின் சான்றாகும். அதிக விளைச்சல் தரும் பாசுமதி, உருளைக்கிழங்கு மற்றும் கோதுமை வகைகளை உருவாக்க அவர் தாவர மரபியலைப் பயன் படுத்தினார். நம்மிடையே இருக்கும் போதே அவருக்கு பாரத ரத்னா விருது கிடைத்திருக்க வேண்டும். ஆயினும்கூட, அரசு அவருக்கு இப்போது ஒன்றை வழங்கவேண்டும்.

பாலு உபாதே
RC லிங்க் டவுன் — D 3142

தலைசிறந்த வேளாண் விஞ்ஞானியை இந்தியா இழந்துவிட்டது என்ற கவர் ஸ்டோரி, இந்தியா பஞ்சத்தை வெல்வதற்காக M S சுவாமிநாதன் ஆற்றிய தன்னலமற்ற சேவையை நன்றாக நினைவுகூர்ந்தது.

M பழனியப்பன்
RC மதுரை வெஸ்ட் — D 3000

நவம்பர் இதழில், M S சுவாமிநாதன் பற்றிய கட்டுரை அற்புதமாக இருந்தது, மேலும் பின்லாந்து மற்றும் ஐஸ்லாந்து பற்றிய தொகுப்பும் நல்ல தகவல்களுடன் நிறைந்திருந்தது. இருப்பினும், சீனிவாச ராகவனின் சக்கர நாற்காலி பற்றிய LBW கட்டுரையில், விமான நிலையத்தில் வழங்கப்படும் சக்கர நாற்காலிக்கு 500 ரூபாய் கட்டணம் விதிக்கப்பட வேண்டும் என்ற அவரது பரிந்துரையில் எனக்கு உடன்பாடு இல்லை. எந்த ஒரு வசதியும் தவறாகப் பயன்படுத்தப் படலாம். உண்மையான பயனர்களை தண்டிக்க அது காரணமாக இருக்கக் கூடாது.

பிரிஜ் கண்தேல்வால்
RC மெட்ராஸ் சென்ட்ரல் — D 3232

மகிழ்ச்சி ஆட்சி செய்யும் இடம்

PRID மனோஜ் தேசாய் தனது தெளிவான கதையின் மூலம் பின்லாந்து மற்றும் ஐஸ்லாந்தில் மகிழ்ச்சி ஆட்சி செய்யும் இயற்கை அழகு மற்றும் கட்டிடக்கலை அற்புதங்களை நம் மனக்கண் முன் கொண்டு வருகிறார்.

V R T துரைராஜா
RC திருச்சிராப்பள்ளி — D 3000

சந்தியா ராவ் (நவம்பர் இதழ்) எழுதிய “தலையில் விழுந்த குட்டு”என்ற கட்டுரையில் அற்புதமாகச் சுட்டிக் காட்டியுள்ளபடி மனிதநேயம் நான்முனை சந்திப்பில் உள்ளது. போர், சண்டை, வறுமை மற்றும் பசி ஆகியவற்றால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மறுவாழ்வு அளிக்க Dr ஆர்ச்சிபால்ட் மெக்ண்டோ மற்றும் M S சுவாமிநாதன் போன்ற குடிமகன்கள் நமக்குத் தேவை. பாதிக்கப்பட்ட வர்களுக்கு நிவாரணமும் உதவியும் வழங்குவது மிகப்பெரிய பணியாகும்.

ராதேஷ்யாம் மோடி
RC அகோலா — D 3030

நூதனமான ரோட்டரி திட்டம்

திறந்தவெளி கல்வியின் மாயம் என்ற அக்டோபர் மாத கவர் ஸ்டோரி பிரமாதமாக இருந்தது.

டேனியல் சிட்டிலப்பில்லி
RC கலூர் — D 3201

வாபியின் ஹரியா L G ரோட்டரி மருத்துவமனையை அமைக்க PRIP பானர்ஜி பெரும் முயற்சி எடுத்துள்ளார். 1982-ல் சாதாரண 25 படுக்கைகள் கொண்ட மருத்துவ மனையாக தொடங்கி, 250 படுக்கைகள் கொண்ட சிறப்பு மருத்துவமனையாக வேகமாக வளர்ந்துள்ளது.

M சுந்தராம்பாள்
RC கும்பகோணம் சக்தி — D 2981

திறந்த வானம் கல்வி கதை படிப்பதற்கு உத்வேகமாக இருந்தது. தாழ்த்தப்பட்ட குழந்தைகளுக்காக இந்தப் புதுமையான வகுப்புகளைத் தொடங்கிய Rtn லலிதா ஷர்மாவின் அர்ப்பணிப்பையே இது காட்டுகிறது.

S முனியாண்டி
RC திண்டுக்கல் ஃபோர்ட் — D 3000

அக்டோபர் தலையங்கம் வானமே எல்லை, சுவாரசியமாக இருந்தது மற்றும் தாக்கத்தை ஏற்படுத்தும் ரோட்டரி திட்டங்களை முன்னிலைப்

படுத்தியது. கிராமப்புற பெண்களின் கல்விக்கு உதவும் திட்டம் மற்றும் மனித கடத்தலுக்கு எதிராக குரல் எழுப்பும் மும்பை ரோட்டராக்டர்கள் போன்ற ஊக்கமளிக்கும் கட்டுரைகளும் இருந்தன.

S N ஷண்முகம்
RC பண்ருட்டி — D 2981

அக்டோபர் இதழில், சென்னையிலிருந்து 100 கிமீ தொலைவில் உள்ள ஒரு புதர்க்காட்டில் வசிக்கும் இருளர்கள் பற்றிய ஒரு சுவாரஸ்யமான கட்டுரையை (இருளா குடும்பங்களுக்கான மாதிரி நகரியம்) கண்டேன். திட்டச் செலவான 8.5 கோடியில் 4 கோடி ரூபாயை நன்கொடையாக வழங்கிய PDG அபிராமி ராமநாதனை வாழ்த்துகிறேன்.

N ஜெகதீசன், RC ஏலூரு — D 3020

பெண்களுக்கு அதிகாரம் அளிக்கும் வகையில் தையல் இயந்திரங்களை விநியோகித்த RID 2982 இன் DG S ராகவன் அவர்களுக்கு வாழ்த்துகள்.

S நடராஜன்
RC கூத்தப்பாக்கம் — D 2981

விமான நிலையங்களில் தேவையில்லாமல் சக்கர நாற்காலிகளைப் பயன்படுத்துவது குறித்த நவம்பர் இதழில் வெளியான 'விமானநிலையங்களில் சக்கர நாற்காலி கலாச்சாரம்' என்ற LBW கட்டுரையை நான் உணர்வற்றதாகக் கருதுகிறேன். ராகவன் என்ன நினைத்தாலும் சரி, உலகெங்கிலும் உள்ள விமான நிலையங்களில் சக்கர நாற்காலிகள் சரியாகதான் இலவசமாக வழங்கப்படுகின்றன.

பலவீனமான பயணிகளுக்கு அவை வரப்பிரசாதம். விமான நிலையங்களுக்குள் நடப்பது மிகவும் சோர்வூட்டும் செயல். சிகாகோ, ஹீத்ரோ போன்ற இடங்களில் இதை நான் அனுபவித்திருக்கிறேன். 7 கிலோ எடை கொண்ட கைப்பையையும், ஒரு பெட்டியையும் இழுத்துச் செல்வது எனது (மற்றும் பல சக்கர நாற்காலி பயணிகளின்) உடல் திறனுக்கு அப்பாற்பட்டது. சக்கர நாற்காலியில் பயணிப்பவர்கள் மீது சிந்தனையற்ற அவதுறுகளை பரப்புவது தவறு.

PDG R D பிரபு
RC ஷிமோகா — D3182

ரோட்டரி நியூஸ் புத்துணர்ச்சியளிக்கிறது

நான் ரோட்டரியில் மூன்று தசாப்தங்களுக்கும் மேலாக செலவிட்டுள்ளேன், ஒவ்வொரு முறையும் ரோட்டரி நியூஸ்-ஐ படிக்கும் போது, என் ஆன்மாவை ஒரு மெதுவாக வருடும் புத்துணர்ச்சியான தென்றலை அனுபவிக்கிறேன் மற்றும் இந்த உன்னதமான அமைப்பின் உறுப்பினராக இருப்பதற்கு ஒரு புதிய அர்த்தத்தையும், புதிய பரிமாணத்தையும் எனக்கு அளிக்கிறது. நாடு முழுவதும் உள்ள சங்கங்கள் சமூகங்களை மேம்படுத்துவதற்கு தங்களால் முடிந்த அனைத்தையும் செய்யும் ஒவ்வொரு கதையையும் படிக்கும்போது, நான் நேர்மறையாக உணர்கிறேன் மற்றும் அவற்றைப் பின்பற்ற ஊக்குவிக்கப்படுகிறேன். இது ஒருமையின் உணர்வை என்னுள் நிறுவுகிறது. என்னைப் பொறுத்தவரை இது ஒரு சக்திவாய்ந்த மாதாந்திர உத்வேகம்.

நான்கு தசாப்தங்களுக்கும் மேலாக ஒரு பத்திரிகையாளராக பணிபுரியும் நான், நாம் தேர்ந்தெடுக்கும் மக்களிடமிருந்து மிகப்பெரிய எதிர்மறை மற்றும் நம்பிக்கையற்ற உணர்வைப் பார்க்கிறேன். இந்தப் பத்திரிகையை பக்கம் பக்கமாகப் புரட்டி ரோட்டேரியர்கள் செய்யும் நல்ல வேலையில் நான் மயங்க, அந்த ஏமாற்றம் மறைந்துவிடுகிறது. ஒவ்வொரு வார்த்தையையும் ஒரு ப்ளாட்டிங் பேப்பர் போல உள்வாங்கிக் கொள்கிறேன். இது என் மனதைத் திறக்க, புதிய யோசனைகள் கொட்டத் தொடங்குகிறது.

ரோட்டரி செய்திகளைப் படிப்பது அனைத்து ரோட்டரியர்களுக்கும் மகிழ்ச்சியான நேரம் என்று நான் சொன்னால் மிகையாகாது. ரோட்டரி பற்றியல்லாத கட்டுரைகள் (LBW) இந்த இதழுக்கு முழுமை உணர்வைத் தருகின்றன, மேலும் நம் ரோட்டரியர்கள் அனைவரும் இதழைப் படித்த பிறகு அதை மறுசுழற்சி செய்யுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

மிலிந்த் பலால்,
RC தானே மிட் டவுன் — D 3142

நவம்பர் இதழ் மிகவும் திறமையுடனும் அறிவுசார் அழகியலுடனும் திட்டமிடப்பட்டு தயாரிக்கப்பட்டது என்பதை திருப்தியுடனும் நன்றியுடனும் உங்களுக்குத் தெரிவிக்கிறேன். நான் கிட்டத்தட்ட நான்கு தசாப்தங்களாக இந்த இதழை வாசித்துள்ளேன், 1978-ல் இருந்து இதனை என்னால் முழுவதுமாகப் படிக்கவே முடியவில்லை. ஏனெனில் அது மிகவும் மந்தமாகவும் ஆர்வமற்றதாகவும் இருந்தது. கடந்த இதழுக்கான கட்டுரைகளை தேர்ந்தெடுத்ததில் உங்களின் திறமைக்கும் தேர்வுக்கும் வாழ்த்துகள்.

ID சுக்லா, RC சண்டிகர் — D 3080

அட்டையில்: *பிரிட்டிஷ் காலத்தில் பெங்களூரு அருகே கோலாரில் உள்ள ஒரு தங்கச் சுரங்கத்தின் உள்ளே.*

தங்கள் கருத்துக்கள் வரவேற்கப்படுகின்றன. மேலும் உங்கள் சங்கத்தின் நல திட்டங்கள் புகைப்படங்களுடன் rushbhagat@gmail.com அல்லது rotarynewsmagazine@gmail.com என்ற மின்னஞ்சலிற்கு அனுப்பலாம். WHATSAPP செய்திகள் ஏற்றுக்கொள்ளபடமாட்டாது. மேலும் ரோட்டரி செய்திகளை எங்கள் www.rotarynewsonline.org என்னும் இணைய தளத்தில் Rotary News Plus என்னும் இதழில் காணலாம்.

RI தலைவரிடமிருந்து...

அவை இயற்கைப் பேரழிவுகள் இல்லை

ரோட்டரியின் கூட்டாளரான, பன்னாட்டு நெருக்கடி உதவித் தொண்டு நிறுவனமாகிய ShelterBox சுமார் 100 நாடுகளில் 2.5 மில்லியனுக்கும் மேற்பட்ட மக்களுக்கு நெருக்கடி நேரப் பாதுகாப்பு, அவசியமான வீட்டுப் பொருட்கள், தொழில்நுட்ப ஆதரவை வழங்கி உதவியுள்ளார்கள். நான் என்னுடைய இந்த மாதப் பத்தியை அவர்களுடைய CEO சஞ்ச் ஸ்ரீகாந்தன் அவர்களுடன் பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன். அவர், பேரழிவுகளை விவரிக்க நாம் பயன்படுத்தும் சொற்கள் முக்கியம் என்பதை விளக்குகிறார்.

— கோர்டன் மெக்கினலி

புகைப்படங்கள்: ஷெல்டர்பாக்ஸ்

நெடுங்காலமாக, வெப்ப மண்டலப் புயல்கள், வெள்ளங்கள், நில நடுக்கங்கள், எரிமலை வெடிப்புகளை விவரிக்க "இயற்கை"ப் பேரழிவுகள் என்ற சொல் பயன்படுத்தப்பட்டு வருகிறது. ஆனால், நாம் பயன்படுத்தும் இந்தச் சொல்லில் ஓர் அவசர மாற்றத்தைக் கொண்டுவரவேண்டும்.

பேரழிவுகளை "இயற்கை" என்று பேசும் போது, இயற்கைக்கும் மனிதச் செயல்களின் பங்களிப்புக்கும் இடையிலான சிக்கலான இருதிசைப் பயன் விளைவையும், அது உலகெங்கும் உள்ள சமூகங்களை எப்படிப் பாதிக்கிறது என்பதையும் நாம் கவனிப்பதில்லை.

நில நடுக்கங்கள், சுனாமிகள், எரிமலை வெடிப்புகள், தீவிரப் புயல்கள், பஞ்சங்கள், வெள்ளங்கள் பூமியில் நடைபெறும் இயற்கைச் செயல்முறைகளால் நடக்கின்றன. ஆனால், இவை மக்களை அல்லது சுற்றுச்சூழலை எப்படிப் பாதிக்கின்றன என்பதுதான் அவற்றைப் பேரழிவாக மாற்றும் சாத்தியத்தைக் கொண்டுள்ளது. மக்கள் எங்கு வசிக்கிறார்கள், என்ன வகையான வீடுகளில் வசிக்கிறார்கள், அரசியல் நிலையின்மை, ஆபத்தில் உள்ள சமூகங்களைப் பாதுகாப்பதற்கு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் இன்மை போன்ற மனிதக் காரணிகளால் இந்தப் பலன்கள் பாதிக்கப்படுகின்றன. பேரழிவு என்பது, வளங்கள், ஆற்றலுக்கான அணுகலில் அமைப்புச் சமநிலையின்மைகளின் விளைவாகும். பல நேரங்களில், நாம் எங்கு வசிக்கிறோம், நம்மிடம் எவ்வளவு பணம் இருக்கிறது ஆகியவை நாம் மீளக்கூடிய திறனைத் தீர்மானிக்கின்றன. இதில் மிக மோசமாகப் பாதிக்கப்படுகிறவர்கள், வறுமையில் வாழ்கிறவர்கள்தான், தங்களைப் பாதுகாத்துக்கொள்ள மிகக் குறைவான வழிகளையும், அடுத்து வரக்கூடிய நிகழ்வைத் தாங்க மிகக் குறைவான வளங்களைக் கொண்டிருக்கிறவர்கள்தான்.

ShelterBoxல் நாங்கள் "பேரழிவு" என்ற எளிய சொல்லைத்தான் பயன்படுத்துகிறோம். அல்லது, தீவிர வானிலை, நில நடுக்கம், சுனாமி அல்லது எரிமலை வெடிப்பு போன்ற குறிப்பிட்ட சொற்களை விவரிக்கிறோம். மக்கள் இவ்வளவு மோசமாகப் பாதிக்கப்படுவது ஏன் என்பதைத் துல்லியமாகச் சிந்திக்கின்ற இந்த மொழியை எல்லாரும் பயன்படுத்த வேண்டும், இந்தச் சுழலை உடைக்க உதவவேண்டும் என்று நான் அனைவரையும் கேட்டுக்கொள்கிறேன்.

அதன் பிறகுதான், இந்தச் சமூகங்கள் ஆபத்திற்கு ஆளாவதற்கான அடித்தளக் காரணங்களைக் கையாள்வதற்கான, அனைவருக்கும் இன்னும் நியாயமான, சமமான வருங்காலத்தை நோக்கி, பாதிக்கப்பட்ட சமூகங்களைப் பாதுகாக்க உதவும் சரியான முதலீடு, வளங்கள், முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளுடன் பணியாற்றுவதற்கான வழி அமையும்.

பேரழிவுகள் இயற்கையானவை இல்லை. அவற்றை அவ்வாறு அழைப்பதை நிறுத்துவோம்.

சஞ்ச் ஸ்ரீகாந்தன்
தலைமை அதிகாரி, ஷெல்டர்பாக்ஸ்

நெஞ்சை உருக்கும் தோல்வி

நவம்பர் 19 ஆம் தேதி நடைபெற்ற உலக கோப்பை 2023 இறுதிப் போட்டியில் இந்திய அணியின் தோல்வி, நாட்டில் உள்ள ஒரு பில்லியனுக்கும் மேலான ரசிகர்களின் நெஞ்சங்களை உலுக்கிவிட்டது. இறுதிப் போட்டி வரையிலான 10 போட்டிகளிலும் வெற்றிபெற்று, இறுதிப் போட்டியில் தோல்வி கண்டு, 2011-க்கு பிறகு கோப்பையை இந்தியாவுக்கு கொண்டு வரத் தவறிய இந்திய அணியுடன் எப்படி சமரசம் செய்து கொள்ள முடியும்? தொடர் முழுவதும் தனது சிறப்பான ஆட்டத்தால் மகிழ்வித்த விராட் கோலி சோகத்தில் இருந்ததையும். ரோகித் சர்மா, தனது கண்ணீரை மறைக்க முயன்றதையோ, முகமது சிராஜ் வெளிப்படையாக அழுததையும், அவருக்கு ஜஸ்ப்ரீத் பும்ரா ஆறுதல் கூறி தேற்றியதையும் யாரால் மறக்க முடியும்?

என்ன செய்திருக்க வேண்டும், செய்திருக்கக் கூடாது என்பதை நிபுணர்கள் கூறினார்கள். ஆனால், இந்த முறை புத்துணர்ச்சியூட்டும் வகையில் வித்தியாசமாக இருந்தது நம் வீரர்களுக்கு ரசிகர்கள் அளித்த ஆதரவு, மரியாதை, அன்பு ஆகியவை தான். அது மேலிருந்து தொடங்கியது. பிரதமர் நரேந்திர மோடி இப்படி டுவீட் செய்திருந்தார் — அன்பு மிகுந்த இந்திய அணி வீரர்களே, உலகக் கோப்பை தொடர் முழுவதும் உங்களது திறமையும் மனஉறுதியும் குறிப்பிடத்தக்கது. நீங்கள் தீரத்துடன் விளையாடி தேசத்துக்கு பெருமை சேர்த்துள்ளீர்கள். நாங்கள் உங்களுக்கு எப்போதும் துணை நிற்போம் என்றார்.

அடுத்த நாள் காலை ஹெச்.எஸ்.பி.சி. நிறுவனம் டைம்ஸ் ஆஃப் இந்தியா பத்திரிகையில் மனதுக்கு ஆறுதல் அளிக்கும் வகையில் விளம்பரம் கொடுத்திருந்தது. அதில் எங்கள் இதயங்களை வென்றுவிட்டீர்கள். உங்களுக்கு எங்கள் அன்பும் மரியாதையும் உரித்தாகுக. இது கௌரவமான தோல்விதான். நீங்கள் அசாத்திய துணிச்சல் உள்ளவர்கள். வலுவாக மீண்டு வருவீர்கள் என்பது எங்களுக்குத் தெரியும் என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

இந்த அற்புதமான பதில், பார்வையாளர்களாகிய நாம், முக்கியமான போட்டிகளில் தோல்வி அடைந்த பிறகு, கூச்சலிடுதல், தொல்லை கொடுத்தல், கற்களை வீசுதல் — M S தோனி வீட்டின் மீது கற்களை வீசியதை இங்கு நினைவுபடுத்துகிறேன் — என்பதிலிருந்து வெகுதூரம் வந்துவிட்டோம் என்பதற்கான நல்ல அறிகுறியாகும். நமது கிரிக்கெட் அணி தோல்வியை மனதார ஏற்றுக் கொண்டால், ரசிகர்களாகிய நாமும் அதைத்தானே செய்ய வேண்டும்.

உலகக் கோப்பை போட்டித் தொடரில் ஒன்றன் பின் ஒன்றாக இந்திய அணி ஜெயித்தபோதெல்லாம் அமைதியாக பின்னணியில் இருந்த இந்திய அணியின் தலைமைப் பயிற்சியாளர் ராகுல் திராவிட், சோகமான நாளான ஞாயிற்றுக்கிழமை ரோஹித் உள்ளிட்ட அணி வீர்கள் டிரஸ்ஸிங் ரூமில் முடங்கிக் கிடந்தபோது, ஊடகங்களுக்கு பதிலளித்த விதம் பாராட்டுக்குரியது. நாளை சூரியன் உதிக்கும், அணி தோல்வியிலிருந்து பாடம் கற்றுக்கொண்டு முன்னேறும் என்று அவர் கூறியிருந்தார்.

ஆனால், நமக்கு நாமே முதுகில் தட்டிக் கொள்வதற்கு முன் நாம் ரோட்டரியின் நான்குவழி சோதனையில் இரண்டு முக்கிய அம்சங்களை ஆய்வு செய்ய வேண்டும். உலகக் கோப்பை போட்டித்தொடர் குறித்தும், ரசிகர்கள் குறித்தும் சர்வதேச ஊடகங்கள் மற்றும் சமூக ஊடகங்கள் என்ன கூறின என்பதை உண்மையுடனும் நேர்மையுடனும் சிந்தித்து பார்க்க வேண்டும். சர்வதேச அளவிலான போட்டிகள் நடக்கும்போது சர்வதேச உணர்வுகள் இல்லை என்று அவை குறிப்பிட்டிருந்தன. பெவிலியனில் இருந்தவர்கள் இந்தியாவின் கொடியைத் தவிர வேறுகொடிகளை அசைக்கவில்லை. மேலும் எதிர் அணி ஆதரவாளர்களை நிறைய காணமுடியவில்லை. இந்திய அணி வீரர்கள் பந்தை பவுண்டரிக்கு தட்டிய போது ஆரவாரம் செய்தவர்கள், எதிரணியினப் பந்தை சிக்ஸருக்கும் பவுண்டரிக்கும் அடித்த போது ஏன் மௌனமாகிவிட்டனர் என்று தெரியவில்லை என்றும் தங்கள் ஆதங்கத்தை வெளிப்படுத்தியிருந்தனர்.

இந்த விமர்சனங்களையும் நாம் ஆராய வேண்டும். இந்திய கிரிக்கெட் அணி சிறந்த அணியாக இருக்கலாம். ஆனால், பார்வையாளர்களாகிய நாம் உண்மையான உணர்வை வெளிப்படுத்த தவறிவிட்டோமா? பாரம்பரியமான, வண்ணமயமான வரவேற்புகள் ஒருபக்கம் இருந்தாலும், மற்ற அணியினரை நாம் அதிதி தேவோ பவ என்னும் உண்மையான உணர்வுடன் வரவேற்றோமா? நம் இதயங்களை ஆராய்ந்து உண்மையா பதிலுடன் வருவோம்!

ரஷீதா பகத்

முன்கூட்டியே பதிவு செய்வதற்கான முக்கியக் காரணங்கள்

உங்கள் நாட்காட்டியில் பதிவாகியுள்ள ஒரு பயணத்தைப்பற்றிப் பகல் கனவு காண்பது, வாழ்க்கையின் சிறு பரிசுகளில் ஒன்று. குறிப்பாக, அந்தப் பயணம், ஆசியாவின் பளபளக்கும் பூங்கா நகரம், பண்பாடும் தனித்துவமான ஈர்ப்புகளும் நிறைந்த சிங்கப்பூரில் நடைபெறும் 2024 ரோட்டரி இன்டர்நேஷனல் மாநாட்டிற்கு முன்கூட்டியே பதிவு செய்வதற்கான சில காரணங்கள், இதோ.

- உங்களுக்கு ஒரு நல்ல விடுமுறையைப் பரிசளிக்கலாம். நீங்கள் இங்கு முதன்முறை வந்தாலும் சரி, மறுபடி வந்தாலும் சரி, சிங்கப்பூரில் உங்களுக்கு ஊக்கமும் வியப்பும் நிறைந்திருக்கும்.
- நிறையப் பணம் சேமிக்கலாம். 15 டிசம்பருடன் முன்கூட்டியே பதிவு செய்கிறவர்களுக்கான தள்ளுபடி முடிந்து விடும். அதன் பிறகு, இதை விடக் குறைந்த கட்டணம் கிடைக்காது.
- சிறந்த விமானக் கட்டணம், விடுதிகளைப் பெறலாம். 25 முதல் 29 மே வரையிலான மாநாட்டுக்கு அருகில் செல்லச் செல்ல, விமானக் கட்டணம் உயர்வது கிட்டத்தட்ட உறுதி. அதனால், இப்போது பதிவு செய்தால் குறைந்த கட்டணத்தைப் பெறலாம். சிங்கப்பூர், அருகிலுள்ள நாடுகளின் மறைந்துள்ள முத்துகளைப் பார்ப்பதற்கான பயணத் திட்டங்களை ஏற்பாட்டாளர்கள் சிறப்பாகத் தொகுத்துள்ளார்கள்.
- எந்த இரண்டு மாநாடுகளும் ஒன்றில்லை. அதனால், நீங்கள் ஏற்கெனவே ஒரு மாநாட்டில் கலந்து கொண்டிருந்தாலும், நண்பர்களுடன் மீண்டும் இணைந்து ஊக்கம் பெற இது ஒரு வாய்ப்பு. உறுப்பினர்கள் உலகில் நம்பிக்கையைப் பகிர்ந்துகொள்வதற்கு யோசனைகளைச் செயலாக மாற்றும் இடம் இந்த மாநாடு.

மேலும் தெரிந்துகொள்ள பதிவு செய்ய:
convention.rotary.org

ஆளுநர் குழு

2981 செங்குட்டுவன் G
2982 ராகவன் S
3000 ஆனந்த ஜோதி R
3011 ஜீதேந்தர் குப்தா
3012 ப்ரியதோஷ் குப்தா
3020 சுப்பாராவ் ராவுரி
3030 ஆஷா வேணுகோபால்
3040 ரீத்து க்ரோவர்
3053 பவன் கண்டேல்வால்
3055 மேஹுல் ரத்தோட்
3056 நிர்மல் ஜெயின் குனாவத்
3060 நிஹிர் தாவே
3070 விப்பன் பாசின்
3080 அருண் குமார் மோங்கியா
3090 கன்ஷியாம் கன்சல்
3100 அஷோக்குமார் குப்தா
3120 சுனில் பன்சல்
3131 மஞ்சு ஃபாட்கே
3132 ஸ்வாதி ஹெர்கல்
3141 அருண் பார்கவா
3142 மிலின்த் குல்கர்னி
3150 சங்கர் ரெட்டி
3160 மணிக் பவார்
3170 நாசிர் போசத்வாலா
3181 கேஷவ் H R
3182 கீதா B C
3191 உதயகுமார் பார்கவா
3192 ஸ்ரீனிவாச மூர்த்தி V
3201 விஜய்குமார் T R
3203 Dr S சுந்தர்ராஜன்
3204 Dr சேது ஷிவ்ஷங்கர்
3211 Dr G சுமித்ரன்
3212 முத்தையா பிள்ளை R
3231 பரணிதரன் P
3232 ரவி ராமன்
3240 நிலேஷ் குமார் அகர்வால்
3250 பகாரியா S P
3261 மஞ்சித் சிங் அரோரா
3262 ஜெயஸ்ரீ மோஹன்டி
3291 ஹுராலால் யாதவ்

அச்சு மற்றும் பதிப்பாளர் P T **பிரபாகர்** (முகவரி: 15 சிவசாமி சாலை, மைலாப்பூர் சென்னை-4). துகார் டவர்ஸ், 3-வது தளம், 34, மார்ஷல்ஸ் ரோடு, எழும்பூர், சென்னை-600 008-யில் இயங்கும் ரோட்டரி நியூஸ் ட்ரஸ்ட் சார்பில் ராசி கிராபிக்ஸ் பி லிட், 40, பீட்டர்ஸ் ரோடு, ராயப்பேட்டை, சென்னை- 14 என்ற முகவரியில் அச்சிடப்படுகிறது. ஆசிரியர்: **ரஷீதா பகத்.**

கட்டுரைகளை திருத்தவோ/சுருக்கவோ ஆசிரியருக்கு முழு உரிமை உண்டு. இதழில் வெளியாகும் கட்டுரைகளை RNT அனுமதியுடன் மட்டும் மறுபதிப்பு செய்யலாம்.

Printed and published by PT Prabhakar, 15 Sivaswamy Street, Mylapore, Chennai 600004, on behalf of Rotary News Trust and printed at Rasi Graphics Pvt Ltd, 40, Peters Road, Royapettah,Chennai - 600 014, India, and published at Rotary News Trust, Dugar Towers, 3rd Floor, 34, Marshalls Road, Egmore, Chennai 600 008. Editor: Rasheeda Bhagat.

அறங்காவலர் குழுவினர்

அனிருதா ராய்சௌத்ரி RI இயக்குனர் மற்றும் RNT தலைவர்	RID 3291
T N சுப்ரமணியன் RI இயக்குனர்	RID 3141
Dr பரத் பாண்ட்யா TRF அறங்காவலர் துணை தலைவர்	RID 3141
ராஜேந்திர K சாபூ	RID 3080
கல்யாண் பானர்ஜி	RID 3060
சேகர் மேத்தா	RID 3291
அசோக் மஹாஜன்	RID 3141
P T பிரபாகர்	RID 3232
Dr மனோஜ் D தேசாய்	RID 3060
C பாஸ்கர்	RID 3000
கமல் சங்வி	RID 3250
Dr மகேஷ் கோட்பாகி	RID 3131
A S வெங்கடேஷ்	RID 3232
குலாம் A வஹன்வதி	RID 3141

செயற்குழு உறுப்பினர்கள் (2023–24)

ஸ்வாதி ஹெர்கல் தலைவர், ஆளுநர் குழு	RID 3132
ஹீராலால் யாதவ் செயலாளர், ஆளுநர் குழு	RID 3291
முத்தையா பிள்ளை R பொருளாளர், ஆளுநர் குழு	RID 3212
மிலின்த் குல்கர்னி ஆலோசகர், ஆளுநர் குழு	RID 3142

ஆசிரியர்
ரஷீதா பகத்

துணை ஆசிரியர்
ஜெய்ஸ்ரீ பத்மநாபன்

நிர்வாகம் மற்றும் விளம்பர மேலாளர்
K விஸ்வநாதன்

ரோட்டரி நியூஸ், துகார் டவர்ஸ்,
3-வது தளம், 34, மார்ஷல் சாலை,
எழும்பூர், சென்னை-8, இந்தியா
தொலைபேசி: 044 42145666
rotarynews@rosaonline.org
www.rotarynewsonline.org

Contributions are welcome but will be edited. Content can be reproduced with permission and attributed to RNT.

நேர்மறை ஆரோக்கியத்தை வெல்வோம்!

அன்புள்ள ரோட்டரி குடும்பத்தினரே

நாம் டிசம்பர் மாத கொண்டாட்டத்தில் இருக்கும் போது RI இயக்குநர் என்கிற முறையில் நான் பணிவுடன் இருக்கிறேன். நாடு முழுவதும் உள்ள மாவட்டங்கள் மற்றும் சங்கங்களில் நடக்கும் நம்பமுடியாத புதுமையான முயற்சிகளைக் காண எனக்கு இந்த பதவி அசாதாரணமான வாய்ப்பை வழங்கியுள்ளது.

உறுப்பினர் சேர்க்கை மேம்பாடு, திட்டங்களை பூர்த்தி செய்தல், அறக்கட்டளை மற்றும் போலியோ நிதிப் பங்களிப்புகள், இந்த ஆண்டு தொடக்கத்தில் கோடிட்டு காட்டப்பட்ட இலக்குகளை அடைவதில் எடுக்கப்பட்ட முன்னேற்றங்களைப் பாருங்கள். ஒரு சிறந்த உலகத்துக்கான நமது பார்வை, செயல்பாடுகளுடன் ஒத்துப்போகிறதா என்பதை உறுதிசெய்ய வேண்டும்.

ரோட்டேரியன்கள் மாற்றத்தின் சக்திகள். நமது சக்தி எண்ணிக்கையில் மட்டுமல்ல, பலதரப்பட்ட வாழ்க்கைத் திறனை உருவாக்குவதிலும் உள்ளது. நேர மேலாண்மை, பிரதிநித்துவம் மற்றும் கண்ணோட்டத்தை இலக்குகளாக மாற்றும் திறன் ஆகியவற்றுடன் நமது பின்னணி அமைந்துள்ளது. இந்த திறன்கள் நமது தனிப்பட்ட மற்றும் தொழில் வாழ்க்கையில் மிகவும் முக்கியமானவை. ரோட்டரியின் கட்டமைப்புக்குள் இவற்றுக்கு புதிய நோக்கம் இருக்க வேண்டும்.

டிசம்பர், நோய்த்தடுப்பு மற்றும் சிகிச்சை மாதமாக வரையறுக்கப்பட்டுள்ளது. உலகெங்கிலும் சுமார் 400 மில்லியன் பேர் அடிப்படை சுகாதார வசதிகள் இல்லாமல் இருக்கிறார்கள். அனைவரும் ஆரோக்கியமாக இருக்கவேண்டும் என்பதில் நாம் இன்னும் அர்ப்பணிப்புடன் முழுகவனம் செலுத்தவில்லை. போலியோ, நீரிழிவு, மறதிநோய் (அல்சைமர்), போன்ற நோய்களைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவோம்.

இந்த உறுதிப்பாட்டுக்கு இணங்க நமது நோய்த் தடுப்பு விழிப்புணர்வு பிரசாரம் அமையட்டும். நேர்மறையான ஆரோக்கியம், அதாவது ஒரு தேக்கரண்டி குறைவான சர்க்கரை, எண்ணெய், உப்பு மற்றும் நான்கு ஸ்டெப் கூடுதலாக நடப்பது-என்பது வாழ்க்கை முறையில் ஏற்படும் நோய்களை எதிர்த்துப் போராட உதவும். ஒவ்வொரு ரோட்டேரியனின் நல்வாழ்வும் அவர்கள் வழங்கும் சேவைக்கு விலைமதிப்பற்றது என்பதை உணர்ந்து முதலில் நமது சங்கங்கள், மாவட்டங்களுக்குள் இந்த முயற்சியை முன்னெடுப்போம். அத்துடன் சமூகத்தில் உள்ளவர்களின் ஆரோக்கியமான வாழ்க்கைக்கு உதவுவதற்காக விழிப்புணர்வு பிரசாரங்கள் மற்றும் முகாம்களை நடத்துவோம்.

புதிய திட்டங்களை முன்னெடுக்கும் சங்கங்கள், இதர சங்கங்களுடன் இணைந்து செயல்படும் சங்கங்கள், புதிய உறுப்பினர்களை ரோட்டரிக்கு வரவேற்று, ரோட்டரி அறக்கட்டளைக்கு பங்களிப்பு செய்வோம், ரோட்டரிக்காக தங்கள் நேரம், ஆற்றல், உற்சாகம் அல்லது நிதிப் பங்களிப்பை செய்யும் ரோட்டேரியன்களுக்கு மனமார்ந்த நன்றி.

மேலும் ரோட்டரியில் நமது கூட்டுமுயற்சி தொடர்ந்து, உலகில் பிரகாசமான, ஆரோக்கியமான, பாதைக்கு வழிகாட்டட்டும்.

ராஜு சுப்ரமணியன்
RI இயக்குனர் 2023–25

ரோட்டரியின் அடிப்படை

உங்களுடைய விடுமுறை வழங்கலின் போது நீங்கள் நினைவில் கொள்ள வேண்டிய விஷயம், ரோட்டரி அறக்கட்டளைக்கு நீங்கள் தரும் பரிசுகள் ஒரு பரிசுப் பெட்டியில் அழகாகப் பொருந்தாமலிருக்கலாம், ஆனால், அவை ஆண்டு முழுவதும் கொடுத்துக் கொண்டே இருக்கின்றன.

டிசம்பர் நோய்த்தடுப்பு மற்றும் சிகிச்சை மாதமும்கூட. நம் ரோட்டரி குடும்பமாகிய உங்களுடைய தாராள மனப்பான்மை இல்லாவிட்டால் எந்தெந்த ரோட்டரி முயற்சிகள் சாத்தியமாகாது என்று யோசித்துப்பாருங்கள். இளம்பிள்ளைவாதத்தை முடித்துவைப்பதற்கான நம்முடைய போரில் நாம் சாதித்துள்ள மிகச் சிறந்த முன்னேற்றத்தையும், நாம் காப்பாற்றியுள்ள எண்ணற்ற உயிர்களையும், நாம் மீட்டுள்ள நம்பிக்கையையும் கருத்தில் கொள்ளுங்கள். உலகெங்கும் ரோட்டரி மூலம் கருவிகளைப் பெற்றுள்ள மருந்தகங்களை, அறக்கட்டளை நல்கைகளின் வழியாகப் பயிற்சி பெற்று இதய நோயையும் நரம்புச் சிலந்தி நோயையும் எதிர்க்கப் போராடும் மருத்துவ வல்லுநர்களை எண்ணிப்பாருங்கள்.

அறக்கட்டளைக்கு நீங்கள் அளிக்கும் பரிசுகள், பெரிய அளவுத்திட்டங்களின் வழியாக, நலிந்த சமூகங்களுக்குப் பெரிய அளவில் நலப் பராமரிப்பைக் கிடைக்கச்செய்யவும் உதவுகின்றன. தற்போது, இந்த நல்கையைப் பெற்றவர்கள் ஜாம்பியாவில் மலேரியாவை அழிக்கவும், நைஜீரியாவில் தாய்மார்கள் மற்றும் அவர்களுடைய குழந்தைகளின் இறப்பு விகிதத்தைக் குறைக்கவும், எகிப்தில் கருப்பை வாய்ப் புற்றுநோயை நீக்கவும் பணியாற்றிக்கொண்டிருக்கிறார்கள்.

நம் வீச்சானது நோய்த் தடுப்பு மற்றும் சிகிச்சையைத் தாண்டி நீள்கிறது. பேரழிவு நேரங்களில் நாம் விரைவாகச் செயல்பட்டுத் துன்பத்தைத் தணிக்கவேண்டும், ஆதரவு வழங்கவேண்டும். செப்டம்பரில் மொராக்கோ-வில் அழிவை விளைவிக்கும் நில நடுக்கம் ஏற்பட்டபோது, களத்தில் ரோட்டரி உறுப்பினர்களால் வழிநடத்தப்படும் உதவி முயற்சிகளுக்கு உடனடியாக ஆதரவு அளிப்பதற்கென அறங்காவலர்கள் மொராக்கோ நில நடுக்க எதிர்வினை நிதியை அமைத்தார்கள். நீங்கள் நேரடியாகப் பங்களிக்கலாம், உங்கள் மாவட்டங்கள் 21 செப்டம்பர் 2024 வரை அல்லது நிதி முழுக்க ஒதுக்கப்படும்வரை நிதியிலிருந்து நல்கைகளுக்கு விண்ணப்பிக்கலாம். மொராக்கோ நிதிக்கென யார் வேண்டுமானாலும் “Raise for Rotary”-ல் ஒரு நிதி திரட்டலைத் தொடங்கலாம். இதன்மூலம் உங்கள் தாராள மனப்பான்மைக்கு மேலும் வாய்ப்புகள் அமைகின்றன.

நாம் இந்த ஆண்டின் நிறைவை நெருங்கிக் கொண்டிருக்கிறோம். அதனால், 31 டிசம்பருக்குள் உங்கள் பரிசுகளை வழங்கும்படி நான் உங்களை அழைக்கிறேன்.

உங்களுக்கு ஒரு மகிழ்ச்சியான விடுமுறைப் பருவம் அமையவேண்டும் என்று எஸ்தரும் நானும் வாழ்த்துகிறோம். ரோட்டரி அறக்கட்டளைக்கு உங்களுடைய தொடர்ந்த ஆதரவு, அர்ப்பணிப்பு மற்றும் இடைவிடாத உறுதிப்பாட்டுக்கு நன்றி.

பேரி ரஸ்ஸின்
TRF அறங்காவலர் தலைவர்

ROTARY NEWS PLUS

படித்தீர்களா?

அல்லது உங்கள் e-mailல் உள்ள Junk folder-க்கு செல்கிறதா?

ஒவ்வொரு மாதமும் நாங்கள் **Rotary News Plus** என்னும் ஆங்கில ஆன்லைன் வெளியீட்டினை ஒவ்வொரு Rotary News சந்தாதாரர்க்கும் e-mail மூலம் அனுப்புகிறோம்.

உங்கள் பெயர், ரோட்டரி சங்கம், மாவட்டம் மற்றும் ஈமெயில் முகவரி ஆகியவற்றை எங்களுக்கு rotarynews@rosaonline.org என்ற முகவரிக்கு பகிரவும்.

Rotary News Plus இதழை எங்கள் வளைத்தளமான *www.rotarynewsonline.org*-யிலும் காணலாம்.

Rotarians!

Visiting Chennai
for business?

Looking for a
compact meeting hall?

Use our air-conditioned Board Room with a seating capacity of 16 persons at the office of the Rotary News Trust.

Tariff:

₹2,500 for 2 hours
₹5,000 for 4 hours
₹1,000 for every additional hour

Phone: 044 42145666
e-mail: rotarynews@rosaonline.org

உலக ரோட்டரி எண்ணிக்கை

ரோட்டரி சங்கங்கள்	:	37,082
ரோட்டராக்ட் சங்கங்கள்	:	11,244
இன்டராக்ட் சங்கங்கள்	:	14,833
ரோட்டரி கம்யூனிட்டி கார்ப்ஸ் (RCC)	:	13,176
ரோட்டரியினர்	:	1,188,470
ரோட்டராக்டர்கள்	:	170,061
இன்டராக்டர்கள்	:	341,159

As on November 15, 2023

ரோட்டரி உறுப்பினர் எண்ணிக்கை — As on November 1, 2023

RI District	Rotary Clubs	No of Rotarians	Women Rotarians (%)	Rotaract Clubs	Rotaract Members	Interact Clubs	RCC
2981	139	6,109	6.30	73	494	34	254
2982	86	3,840	6.41	35	841	93	172
3000	139	6,052	12.10	116	1,866	220	215
3011	138	5,138	29.19	85	2,337	137	37
3012	154	3,840	22.94	76	819	97	61
3020	86	5,070	7.59	48	1,034	119	351
3030	101	5,748	15.87	128	1,970	502	384
3040	113	2,494	14.72	54	926	77	213
3053	74	2,948	16.25	37	608	42	131
3055	80	2,934	11.90	67	1,096	73	376
3056	89	3,894	25.68	51	586	102	201
3060	105	5,074	16.06	68	2,265	59	143
3070	125	3,351	16.29	49	557	51	63
3080	109	4,270	12.58	130	1,976	158	122
3090	118	2,572	6.38	50	623	193	166
3100	114	2,264	11.57	15	138	36	151
3110	147	3,910	11.15	17	110	45	107
3120	89	3,657	15.72	48	616	27	55
3131	143	5,806	26.70	147	3,345	252	147
3132	90	3,693	13.62	41	595	120	199
3141	115	6,189	27.31	155	5,248	166	223
3142	107	3,995	21.48	96	2,297	112	92
3150	110	4,389	13.08	155	1,884	107	130
3160	84	2,778	9.14	32	228	95	82
3170	150	6,710	15.23	121	1,811	180	179
3181	87	3,658	10.61	42	509	90	118
3182	87	3,706	10.31	47	253	106	103
3191	92	3,541	18.53	109	2,771	135	35
3192	82	3,571	21.14	122	2,562	108	40
3201	174	6,786	9.95	137	2,217	97	93
3203	95	5,034	7.59	92	1,158	176	39
3204	75	2,478	7.26	24	226	17	13
3211	159	5,128	8.21	11	178	19	134
3212	127	4,771	11.36	94	3,688	167	153
3231	97	3,524	7.21	39	437	43	417
3232	188	6,628	19.92	128	7,289	150	100
3240	106	3,615	16.74	74	1,159	67	227
3250	109	4,185	21.39	70	992	65	191
3261	105	3,496	22.63	23	242	23	45
3262	113	3,851	15.89	77	749	644	286
3291	143	3,874	25.48			71	733
India Total	**4,644**	**174,571**		**2,983**	**58,700**	**5,075**	**6,981**
3220	70	2,016	16.57	98	4,780	83	77
3271	180	3,065	18.73	194	3,349	333	28
3272	161	2,231	14.66	97	1,347	25	49
3281	338	8,218	17.92	281	1,952	144	214
3282	182	3,661	9.78	203	1,431	30	47
3292	154	5,607	18.73	185	5,448	120	134
S Asia Total	**5,729**	**199,369**	**15.54**	**4,041**	**77,007**	**5,810**	**7,530**

Source: RI South Asia Office

KGF-ல் “விஷத்திலிருந்து பழங்களை உருவாக்கும்” பெங்களூரு ரோட்டரியர்கள்

ரஷீதா பகத்

உலகில் பல செழுமையான இடங்கள் இருக்க, சமீப காலம் வரை, தூசி நிறைந்த, வறண்ட, தரிசு மற்றும் சயனைட் நிறைந்த மண் ஆட்சி செய்த மற்றும் காற்று வீசும் காலத்தில் நுண்ணிய துகள்கள் சயனைட் விஷத்தை அதன் மேல் வீசிய கோலார் தங்க வயல் (KGF) நகரத்தின் பழைய சயனைட் சேற்று குவியலில் சிங்கப்பூர் செர்ரிகளின் முதல் சுவை எனக்கு கிடைத்தது! என்ன ஒரு சுவை.

ரவிசங்கர் டகோஜு, RC பெங்களூர் ஆர்ச்சர்ட்ஸின் முன்னாள் தலைவர், ஆனால் TRF-க்கு ரூ.100 கோடி நன்கொடை அளித்ததற்காக நன்கு அறியப் பட்டவர், மகிழ்ச்சியுடன் என்னை மீண்டும் தனது சங்கத்தின் இந்த திட்டத்திற்கு அழைத்துச் சென்றார். ரோட்டேரியர்களால் மட்டுமே விஷத்திலிருந்து (சயனைட் குவியல்) இனிப்பான மற்றும் சுவையான செர்ரிகளை வளர்க்க முடியும் என்பதை இத்திட்டம் உலகம் முழுவதும் நிரூபித்தது!

KGF-ன் நன்கு அறியப்பட்ட சயனைட் சேற்று குவியலுக்கு செல்லும் போது, அந்த கரடு முரடான பயணத்தில் SUV-யில் குலுங்கி, குலுங்கி சென்ற போதிலும் அவர் மிகவும் உற்சாகமாக இருந்தார். அப்போது அங்கு பெரிய வாகனங்கள் ஏராளமாக குவிந்து கிடப்பதை நாங்கள் கவனித்தோம், அங்கே மிகப்பெரிய OB வேன் (ஒரு திரைப்பட படப்பிடிப்புக்கு ஜெனரேட்டரை ஏற்றிச் செல்லும் வாகனம்) சாலையோரம் நிறுத்தப்பட்டிருந்தது.

“கடவுளே மீண்டும் வந்துவிட்டார்கள்” என்று புலம்பும் டகோஜு, RC பெங்களூர் ஆர்ச்சர்ட்ஸ் தலைவராக (அதன் பின்னர் அவர் RC பெங்களூரில் சேர்ந்தார்) பெங்களூருவிலிருந்து சுமார் 100 கிமீ தொலைவில் உள்ள இந்தப் பகுதியில் சுற்றுச்சூழல் மாற்றும் திட்டத்தை முன்னெடுத்தார்.

ஆங்கிலேயர் ஆட்சியின் போது, கோலார் தங்க வயல்களில் இருந்து தங்கம் பிரித்தெடுக்கப்பட்டது, மேலும் தங்கத்தைப் பிரித்தெடுக்கும் செயல்முறையானது தரையில் செலுத்தப்பட்ட கொடிய இரசாயனம் சயனைட் நிரம்பிய ஒரு சகதியை விட்டுச் சென்றது என்று டகோஜு விளக்குகிறார். தங்கத்தை எடுத்த பிறகு, இந்தக் குழம்பு அடுக்கடுக்காக அடுத்தடுத்த வயல்களில் கொட்டப்பட்டு, அது காய்ந்ததும், தட்டையான, அடுக்கு மலையைப் போன்ற தட்டையான குவியல் ஒன்று உருவானது. அவர் ஆப்பிரிக்க டேபிள்டாப் மலைகளுடன் அதனை

RC பெங்களூர் உறுப்பினர் ரவிசங்கர் டகோஜு KGF-யில் வளரும் சிங்கப்பூர் செர்ரிகளை காட்டுகிறார்.

ரஷீதா பகத்

ஒப்பிடுகிறார், ஆனால் பழுப்பு மற்றும் தூசி நிறைந்த தட்டையான அந்த மலைகள் ஆப்கானிஸ்தானில் காபூலில் இருந்து பாமியான் வரை, உயரமான, பழுப்பு நிற மணற்கல் பாறைகளுக்கு மத்தியில் அமைந்துள்ள சாலையை எனக்கு நினைவூட்டின. ஆப்கானிஸ்தானின் அந்த வறண்ட நிலப்பரப்பின் வழியாக, 2005ஆம் ஆண்டில் பயணித்து, தலிபான்கள் வெடிப்பொருட்கள் மூலம், தொன்மையான மற்றும் வரலாற்றுமிக்க புத்தர் சிலைகளை அகற்றி, அங்கே விட்டு சென்ற மகத்தான துளைகளின் இதயத்தை உலுக்கும் காட்சியை உள்வாங்கினோம்.

அந்தத் தட்டையான குன்றுகள் சேற்று குவியலால் எப்படி உருவாகியிருக்கும் என்பதை முழுமையாகப் புரிந்துகொள்ள நான் சிரமப்படுகையில், அவர் அதை எளிமையாக விளக்குகிறார்: இது ஒரு தோசையின் மேல் மற்றொரு தோசையை வைப்பது போன்றது, நீங்கள் நூற்றுக்கணக்கானவற்றை அடுக்கினால் அவை குவியலாக மாறும். அதுபோல அந்த சேற்று குழம்பு பரவி, பின்னர் திடப்பட்டுள்ளது.

“நம்மைச் சுற்றியுள்ள பகுதிகள் சயனைட் குவியல்களாகும்; 100-120 ஏக்கர் பரப்பளவு கொண்டது. ஆங்கிலேயர்கள் தங்கத்தைப் பிரித்தெடுப்பதில் சயனைடை ஒரு அங்கமாகப் பயன்படுத்தினர், அது மண்ணுடன் கலந்து, குழம்பு வடிவில் அடுக்கடுக்காக இங்கு கொட்டப்பட்டு, அனைத்தும் உலர்ந்து தட்டையான குன்றுகளாக உருவெடுத்தன. இது ஒரு வறண்ட பகுதி என்பதாலும், இந்த நிலத்தில் மணிச்சத்து இல்லாததாலும், எந்த விதமான தாவரங்களும் இங்கு வளரவில்லை. எனவே வறண்ட மற்றும் காற்று வீசும் காலங்களில், இந்த தூளாக்கப்பட்ட மண்ணில் இருந்து ஒரு மெல்லிய அடுக்கு, விஷ சயனைட்டின் உள்ளடக்கத்துடன், நகரத்திற்குள் வீசும், இது உள்ளூர்வாசிகளுக்கு நுரையீரல், கண்கள் மற்றும் தோல் தொடர்பான உடல்நலப் பிரச்சினைகளையும் ஏற்படுத்துகிறது'' என “KGF-ன் கொலைக் களங்களில்'' கணிசமான பகுதியை பச்சை மண்டலமாக மாற்ற ரோட்டேரியர்களுக்கு உதவிய ஓய்வுபெற்ற வனத்துறை துணைப் பாதுகாவலரான சீனிவாச ராவ் கூறுகிறார்.

சுமார் 5-6 ஆண்டுகளுக்கு முன்பு, MIT பட்டதாரி மற்றும் அற்புதமான பெண்ணான அல்மித்ரா படேலைச் சந்தித்த போது, டகோஜுவின் மனதில் இத்திட்டத்தின் விதை விதைக் கப்பட்டது. “அவருக்கு 90 வயது, ஆனால் ஆற்றல் நிரம்பியவர், ஒரு பெரிய தொழில்துறை குடும்பத்தைச் சேர்ந்தவர், சுற்றுச்சூழலின் மீது மிகுந்த ஆர்வம் கொண்டவர். KGF-ன் சயனைட் குவியல் மிகவும் கவலையளிக்கின்றன என்று அவர் என்னிடம் சொன்னார், மேலும் ஆங்கிலேயர்கள் தரையில் இருந்து தங்கத்தை எடுக்க சயனைடை எவ்வாறு பயன்படுத்தினார்கள் என்பதை எனக்கு விளக்கினார். அவர் மிகவும் கலக்கமடைந்திருப்பதை என்னால் பார்க்க முடிந்தது, மேலும் காற்று வீசும் காலங்களில், இந்த குவியலிலிருந்து சயனைட் தூசியை காற்று எப்படி அருகில் இருக்கும் நகரத்திற்கு எடுத்துச் சென்று, எல்லா வகையான உடல்நலப் பிரச்சினைகளையும் ஏற்படுத்து கிறது என்பதை அவர் எனக்கு விளக்கினார். அவர் சொல்வதைக் கேட்டு, ஆங்கிலேயர்கள் எவ்வாறு தங்கத்தை எடுத்துச் சென்றார்கள் (பெட்டியைப் பார்க்கவும்), ஆனால் எவ்வாறு இந்த சயனைட் குவியல் மூலம் விஷத்தை விட்டுச் சென்றார்கள் என்று நான் ஆச்சரியப் பட ஆரம்பித்தேன் என்கிறார் டகோஜு.

அவரது சங்க உறுப்பினர் நீல் மைக்கேல் ஜோசப், KGF நகர மக்களுக்கு ஏதாவது உதவ வேண்டும் என்று உறுதியாக இருப்பவர். அதுமட்டுமல்லாமல், அவர்கள் இந்த பிரச்சினையை விவாதித்தபோது, சயனைடட் குவியலில் மழை பெய்யும் போது குவியலிலிருந்து இருந்து சயனைட் துகள்களை எடுத்துச் செல்லும் நீர் சமதளமான மலை

ரஷ்தா பகத்

சயனைடு மற்றும் பிற கழிவுகளால் உருவான ஒரு சிறிய மலை.

களில் இறங்கி நிலத்தடி நீர் மற்றும் கிணறுகள் உட்பட நீர் நிலைகளில் ஊடுருவுகிறது என ஜோசப் அவருக்கு விளக்கமளித்துள்ளார். அந்த தண்ணீரை விவசாயத்திற்கு பயன்படுத்த முடியாது, மீன்கள் அத்தகைய தண்ணீரில வாழ முடியாது, பறவைகள் அதை குடிக்க முடியாது. அவ்விடம் முழுவதும் ஒரு சுற்றுச்சூழல் பேரழிவாக இருந்தது. அல்மித்ரா மற்றும் ஜோசப் இருவரும் ஏதாவது செய்ய வேண்டும் என்றார்கள்; தயவு செய்து அங்கு சென்று பாருங்கள் என்றார் அல்மித்ரா.

எனவே அவர் ஜோசப்புடன் அங்கே சென்று திரும்பி வந்து உடனே நோய்வாய்ப்பட்டார். நான் சிறுவயதிலிருந்தே ஆஸ்துமா நோயாளி; நான் காரின் கதவைத் திறந்து, அந்த காற்றை உள்வாங்கிய தருணத்தில், எனக்கு உடல்நலக் கோளாறுகள் ஆரம்பித்தன. எனக்கு சுவாச தொற்று மற்றும் தோல் வெடிப்பு உண்டானது, நான் குணமடைய 4-5 நாட்கள் ஆனது.

அவரது தலைமை ஆண்டிற்கு (2018–19) மிகவும் முன்னரே டகோஜு இந்தத் திட்டத்தைத் திட்டமிடத் தொடங்கிய போது, நீல் ஜோசப் இதில் ஈடுபட வேண்டும் என்பதை அவர் அறிந்திருந்தார், ஏனெனில், அவருக்கு இதுபோன்ற பிரச்சினைகளில் ஆர்வமும் தொலை நோக்கு பார்வையும் இருந்தது. அவருடைய வேர்கள் இங்கே உள்ளன; அவர் முந்தைய தங்க வயல்களைச் சேர்ந்த ஒரு சுரங்கத் தொழிலாளியின் மகன், அவர் KGF பள்ளியில் படித்தார், மேலும் அவரது இதயம் KGF-க்காக துடிக்கிறது; அவருடைய மாமாவின் சிலை இன்னும் அங்கே இருக்கிறது.

தான் சயனைட் குவியலுக்கு அருகில் வளர்ந்ததாலும், அநேகமாக இத்தனை ஆண்டுகளாக அந்த தூசியை சுவாசித்ததாலும் இன்னும் தனக்கு மூச்சுத் திணறுவதாக ஜோசப் கூறுகிறார். நுரையீரல் நோய்கள் மற்றும் சிறுநீரக செயலிழப்பு காரணமாக எனது நண்பர்கள் பலர் இறந்து விட்டனர். இறுதியாக, சில சிறந்த ரோட்டேரியர்களின் உதவியுடன் நான் பிறந்த ஊருக்கு ஏதாவது செய்ய என் முன் ஒரு வாய்ப்பு தோன்றியது.

டகோஜு இந்தத் திட்டத்தைப் பற்றி சிந்திக்கத் தொடங்குகையில், நாங்கள் ஒரு விஷயத்தை முடிவு செய்தோம். ரோட்டரியாகிய நாம் ஒரு நூற்றாண்டுக்கும் மேலாக இருக்கிறோம், எனவே நாம் மரங்களை நடுவதையும், செல்ஃபி எடுப்பதையும் தாண்டி

KGF பகுதியில் ஒரு படப்பிடிப்பு.

ஒரு அஞ்சல் அட்டை பட நகரம்

RC பெங்களூர் ஆர்ச்சர்ட்ஸின் முன்னாள் தலைவர் ரவிசங்கர் டகோஜு, "ஒரு காலத்தில், KGF, அதன் தங்க இருப்புகளுடன், பெங்களூரை விட செழிப்பாக இருந்தது" என்று கூறினார்.

அதன் கடந்தகால பெருமையை ஆராயும்போது பெங்களூரைச் சேர்ந்த பத்திரிக்கையாளர் கீதா ஆராவமுதன் எழுதிய அற்புதமான கட்டுரையை நான் படித்தேன். அதில் 1950களில், தான் வளர்ந்து, பள்ளியில் படித்த KGF, "பெரிய பங்களாக்கள், வண்ணமயமான தோட்டங்கள், செங்குத்தான கோபுரங்களை கொண்ட தேவாலயங்கள் மற்றும் கோல்ஃப் மைதானத்தால் சூழப்பட்ட பரந்த கிளப்ஹவுஸ் என ஒரு அஞ்சல் அட்டை பட காலனித்துவ நகரமாக இருந்தது." ஒரு கணக்காளரான அவரது தந்தை, மைசூர் மகாராஜாவிடமிருந்து நிலத்தை சுரங்கத்திற்காக குத்தகைக்கு எடுத்த பிரிட்டிஷ் சுரங்க நிறுவனமான ஜான் டெய்லர் கோவால் பணியமர்த்தப்பட்ட முதல் இந்திய அதிகாரிகளில் ஒருவர். "உலகின் ஆழமான சுரங்க துளையான சாம்பியன் ரீஃப்பை தொடும் தூரத்தில்" இருக்கும் சுரங்கப்பகுதியில் மரம் நிறைந்த தோட்டத்துடன் கூடிய ஒரு சிறிய பங்களாவில் அவர்கள் வசித்து வந்தனர்.

அங்கே ஆங்கிலேயர்கள் அரச பாணியில் வாழ்ந்தனர்; 1901-ல் ஆண்டில், KGF இல் சுரங்க நடவடிக்கை தொடங்கிய இரண்டு தசாப்தங்களுக்குப் பிறகு, தங்க உற்பத்தி உச்சத்தை அடைந்தது மற்றும் அடுத்தடுத்த ஆண்டுகளில் சிறந்த தரமான தங்கம் வெட்டப்பட்டு இங்கிலாந்துக்கு அனுப்பப்பட்டது. "அந்த 10 ஆண்டுகளில், 170,000 கிலோ தங்கம் பிரித்தெடுக்கப்பட்டது, இவை அனைத்தும் நேரடியாக இங்கிலாந்துக்குச் சென்றன" என்று அவர் எழுதுகிறார்.

1956-ல் தான், அந்த சுரங்கங்கள் தேசியமயமாக்கப்பட்டன, ஆனால் அதற்குள் தங்கத்தின் தரம் மற்றும் அளவு கணிசமாக குறைந்திருந்தது. 2001-ல், பொருளாதார மற்றும் சுற்றுச் சூழல் காரணங்களுக்காக சாத்தியமற்றதாகக் கருதப்பட்ட அந்த 120 ஆண்டுகள் பழமையான தங்கச் சுரங்கம் மூடப்பட்டது.

செல்ல வேண்டும், இந்த பழக்கங்கள் துரதிர்ஷ்டவசமாக பல சங்கங்களுக்கு வழக்கமாகி விட்டது, என்றார். இப்போது, திரும்பிப் பார்க்கும் போது, எங்கள் அப்பாவித்தனத்தின் காரணமாகவும், நாங்கள் எதிர் கொள்ளும் பெரிய பிரச்சனைகள் மற்றும் சவாலைப் பற்றிய எந்த யோசனையும் இல்லாத காரணத்தினாலும் இந்தத் திட்டத்தை நாங்கள் கருத்தரித்து செயல்படுத்தினோம் என்பதை நான் உணர்கிறேன்.

இந்த திட்டத்தை எப்படி செய்வது, எப்படி கையாள்வது என்று அவர்கள் விவாதித்துக் கொண்டிருந்த போது, அவர்களுக்கு சிறந்த DCF (காடுகளின் துணைப் பாதுகாவலர்) சீனிவாச ராவை சந்திக்கும் வாய்ப்பு கிடைத்தது. "நான் இன்னும் 18 மாதங்களில் ஓய்வு பெறுகிறேன், அதற்கு முன் சுற்றுச்சூழலுக்கு கணிசமான அளவில் நல்லது செய்ய விரும்புகிறேன். அந்த கனவை அடைய எனக்கு உதவுங்கள், மேலும் இந்த பகுதியை பசுமையாக்குவதன் மூலம் KGF மக்களுக்கு உதவும் இந்த சவாலை நாம் கூட்டாக ஏற்றுக்கொள்வோம்' என்று சீனிவாச ராவ் கூறியுள்ளார்.

120 ஏக்கர் பரப்பளவில் உள்ள சயனைட் குவியல்களில் பசுமை போர்வையை உருவாக்க ரோட்டேரியர்கள் மரங்கள், புதர்கள் மற்றும் புல் ஆகியவற்றை நட வேண்டும் என்று அல்மித்ரா பரிந்துரைத்தார். மண்ணில் ஈரப் பதத்தைத் தக்கவைத்து, உலர்ந்த குவியலில் இருந்து தூசி நகரத்தை நோக்கி வீசுவதைத் தடுப்பதே இதன் நோக்கம்.

திட்டம் ஒரு மண் பரிசோதனை யுடன் தொடங்கியது. "இங்கு எதுவும் வளர முடியாது" என்று அவர்கள் சொன்னார்கள். எனவே ராவ் 2 அடி x 2 அடி x 14 அடி பிணைக்கப்பட்ட அகழிகளை செய்யும் அற்புதமான யோசனையை முன்வைத்தார். அது போன்ற இணைக்கப்பட்ட அகழிகளில் 14,000 அகழிகள் ரோட்டேரியர்களால் உருவாக்கப் பட்டன - அகழிகளுக்குள் நீர் தேங்கி, நடப்பட்ட தாவரங்களுக்கு

முன்னாள் துணை வனப் பாதுகாவலர் சீனிவாச ராவுடன் டகோஜு, மற்றும் RC பெங்களூர் முன்னாள் தலைவர் V S ரங்கா ராவ்.

கீழே: RC *பெங்களூர் ஆர்ச்சர்ட்ஸ் உறுப்பினர் நீல் மைக்கேல் ஜோசப்.*

தண்ணீரைத் தேக்கி வைக்க தரையில் செய்யப்பட்ட அகழிகள்.

கீழே: *மண்ணை வளப்படுத்த அகழியில் உரம் நிரப்பப்படுகிறது.*

தேவையான ஈரப்பதத்தை வழங்குவதை உறுதிசெய்தது.

அடுத்த பிரச்சனை விஷம் கலந்த மண்; சயனைட் கலந்திருந்த நிலத்தில் எதுவும் வளராது. ஆரம்பத்தில் மரக்கன்றுகளை நடவு செய்த பிறகு வளர்ச்சி நன்றாக இருந்தது, ஆனால் வேர்கள் மண்ணில் உள்ள விஷமான சயனைடைத் தொட்டவுடன் செடிகள் இறக்கத் தொடங்கின என்று டகோஜு நினைவு கூர்ந்தார்.

“ரவி, அகழிகளில் உரம் போட ஏற்பாடு செய்தார். இது கேட்பதற்கு எளிதாக இருந்தாலும் செய்வது கடினம். ஒரு பெரிய அளவு-700 டன் உரம் தேவைப் பட்டது. உரம் துர்நாற்றம் வீசும் என உங்களுக்குத் தெரியும், நாங்கள் அதை பெங்களூரிலிருந்து KGF-க்கு இரவுகளில் திருட்டுத் தனமாக கடத்த வேண்டியிருந்தது என்று சொன்னால் நீங்கள் நம்புவீர்களா? ஏனென்றால், நாங்கள் இங்கு துர்நாற்றம் வீசும் குப்பைகளைக் கொண்டு வருகிறோம் என்று KGF நகர மக்கள் நினைப்பதை நாங்கள் விரும்பவில்லை! என்று ராவ் கூறினார்.

இந்த மகத்தான திட்டத்தின் மூலம், ரோட்டேரியர்கள் ராவின் ஆலோசனையின் கீழ் சிங்கப்பூர்

செர்ரிகள், பாசிகள், செஸ்பேனியா (இது கால்நடைகளுக்கு வளமான தீவனம்), காட்டு புல் மற்றும் மண்ணைப் பிணைக்க பாசிகள், பொங்கமியா (உயிரி எரிபொருளை வழங்குகிறது), மஞ்சள் பூக்களை தரும் மற்றும் பொதுவாக காப்பர் பாட் என்று அழைக்கப்படும் பெல்டோபோரம் (இது மருத்துவ குணங்கள் கொண்டவை) மற்றும் பாபுல் மரங்கள் என அனைத்து வகையான பசுமைகளையும் பயிரிட்டனர். பாபுல் மரங்கள் எதற்கு என்று கேட்டதற்கு, அது பசுமை போர்வை வழங்கு வதற்காக என்று ராவ் கூறுகிறார். மழைநீர் ஈரப்பதத்தையும் மற்றும் உரம் தேவையான ஊட்டச்சத்துக் களையும் வழங்கியதால் மரங்கள் வளர ஆரம்பித்தன.

"தற்போது சயனைட் அளவுகள் குறைந்துவிட்டன. நகர மக்கள் தங்களுக்கு கடுமையான உடல்நலப் பிரச்சினைகள் இருந்ததை கிட்டத் தட்ட மறந்துவிட்டனர்" என்று ராவ் கூறுகிறார். குறைந்தபட்சம் 80 சதவீத குடியிருப்பாளர்களின் உடல்நலப் பிரச்சினைகள் குறைந்து ள்ளது என்று மதிப்பிடுகிறார். இதற்குக் காரணம், இந்தத் திட் டத்தால் மண்ணைப் பிணைத்து, ஊரெங்கும் சயனைட் தூசி வீசு வதைத் தடுத்து நிறுத்திய பசுமை போர்வை தான்.

"இந்தப் பகுதி எவ்வளவு தரிசாக மற்றும் பாலைவனம் போன்று இருந்தது என்பதை இப்போது புரிந்துகொள்வது மிகவும் கடினம்... அப்போது இங்கு எதுவும் இல்லை. நாங்கள் ஃபிகஸையும், செஸ்பேனியாவையும் பயிரிட்டுள்ளோம். அவைகளுக்காக முயல்கள் இங்கு வருகின்றன, அவற்றின் எச்சம் மண்ணில் மட்கி உரத்தை சேர்க்கிறது, இதனால் ஒரு

KGF டவுன்ஷிப் பசுமையால் சூழப்பட்டுள்ளது.

இயற்கை சுழற்சி நிறுவப்பட்டது. செடிகளுக்கு தண்ணீர் பாய்ச்ச எங்களிடம் இருந்து ஒரு சொட்டு தண்ணீர் கூட தேவைப்படவில்லை, அப்படியிருந்தும் உங்களைச் சுற்றி ஒரு செழிப்பான பசுமையைப் பார்க்கமுடியும். நாங்கள் மழையை முழுவதுமாக நம்பியிருந்தோம்; பருவத்தின் முதல் மழையின் போது, நடவு தொடங்கப்பட்டது'' என டகோஜு மேலும் கூறுகிறார்,

இப்போது பலவிதமான பறவைகளும் பசுமைக்காக அங்கே வருகின்றன, குறிப்பாக வௌவால்கள் செர்ரிகளை விரும்புகின்றன. நாங்களும் மூங்கிலும் நட்டிருக்கிறோம்; அவற்றின் வளர்ச்சி அவ்வளவு சிறப்பாக இல்லை, ஆனால் அவை குறைந்தபட்சம் பிழைத்திருக்கின்றன.

இப்போது அந்த இடம் படப்பிடிப்புக்கு ஏதுவாக உள்ளது; KGF 1 படத்தின் வெற்றிக்குப் பிறகு, அனைவரும் இங்கு படப்பிடிப்பை நடத்த விரும்புகிறார்கள்'' என அவர் வசைப்பாங்குடன் கூறுகிறார்,

ஆனால் அடுத்த கணத்திலே அவருக்குள் இருக்கும் மகிழ்ச்சியான நம்பிக்கையாளர் வெளிவருகிறார். நாங்கள் காருக்கு திரும்பியதும் கைகளை சுத்தம் செய்வதற்காக நான் சானிடைசரை எடுக்க, ''ரோட்டேரியர்களான நாங்கள் விஷத்திலிருந்தும் பழங்களை வளர்க்க முடியும் என்பதை நீங்கள் பார்க்கலாம்'' என கேலியுடன் கூறினார். திரும்பும் வழியில், இவர் சிங்கப்பூர் செர்ரிகளிடம் ஓடிச்சென்று, தூசி, மற்றும் சயனைட் என அனைத்துடன் சேர்த்து அப்பழங்களை தின்றுவிட்டார். இப்போது கைகளை சுத்தப்படுத்துகிறார்'' என்று இந்த மறக்கமுடியாத கதையுடன் என்னை கேலி செய்து அவர் அனைவரையும் கவர்ந்தார்.

சரி, கதையை சொல்வதற்கு ஒருவர் வாழும் வரை, எல்லாம் நன்மையே!■

Advt.

“மாவட்ட மற்றும் மண்டல தேர்தல்களில் ரோட்டரி சங்கம் மற்றும் அதன் உறுப்பினர்களின் முக்கிய பங்கு என்ன ?”

மாவட்ட ஆளுநரைத் தேர்ந்தெடுப்பதற்கான ரோட்டரி மாவட்டத் தேர்தல்களில் அல்லது ரோட்டரி இன்டர்நேஷனல் இயக்குனருக்கான மண்டலத் தேர்தல்களில், சங்கத்தின் வாக்கு எந்தவொரு தனிநபருக்கும், தலைவருக்கும் அல்லது வாக்காளர்க்கும் சொந்தமானது அல்ல, அது சங்கத்தில் உள்ள பெருவாரியான உறுப்பினர்களின் ஒருமித்த முடிவாக இருக்கும் – அது **சங்கத்தின் ஓட்டு.**

மாவட்டம் அல்லது மண்டல தேர்தலின் போது யாருக்கு ஓட்டு போட வேண்டும் என்று முடிவு எடுக்கும் சங்க கூட்டத்தில் அனைத்து உறுப்பினர்களும் கலந்து கொண்டு தங்களுடைய கருத்துக்களை பதிவு செய்ய வேண்டும். முடிவெடுக்கும் பொழுது அந்த **வேட்பாளர் என்னென்ன சேவைகளை செய்திருக்கிறார் என்ற பல விஷயங்களை நியாயமான முறையில் ஆராய்ந்து தகுதியின் அடிப்படையில் ஓட்டு போட முடிவு எடுக்க வேண்டும்.**

சங்க உறுப்பினர்கள் தங்கள் கருத்துக்களை சுதந்திரமாக வெளிப்படுத்த சங்கக் கூட்டத்தில் வாய்ப்பு கொடுக்க வேண்டும். **பெருவாரியான உறுப்பினர்கள் கூறும் நபருக்கே ஓட்டு போட முடிவெடுக்க வேண்டும். தேவைப்பட்டால் சங்க உறுப்பினர்கள் தங்கள் கருத்துக்களை பதிவு செய்ய ரகசிய ஓட்டெடுப்பு நடத்த வேண்டும்.**



Advt.

வேட்பாளருக்காக
சங்க
உறுப்பினர்களை
இழந்து விடாதீர்கள்.

உறுப்பினர்கள் சங்க கூட்டத்தில் நடந்த விவாதத்தைப் பற்றியும், **முடிவெடுத்ததைப் பற்றியும் மிகவும் ரகசியமாக வைத்துக்கொள்ள வேண்டும்** அதை வெளிநபர் யாரிடமும் பகிர்ந்து கொள்ள கூடாது.

ரோட்டரியின் **நான்கு வழி சோதனை மற்றும் நேர்மை, நாணயம், ஒற்றுமை, வளர்ச்சி** ஆகியவற்றை மனதில் வைத்து நேர்மையான, தகுதியான ஒருவரை தேர்ந்தெடுக்க வேண்டும்.

தேர்தல்கள் தற்காலிக அம்சமாகும், உறுப்பினர்களே சங்கத்தின் உயிர் நாடி என்பதை மனதில் வைத்துக் கொள்ள வேண்டும்.

அனைத்து சங்க நடவடிக்கைகளிலும் **வெளிப்படைத்தன்மையை கடைப்பிடித்து,** ஏற்கனவே உள்ள **உறுப்பினர்களைத் தக்கவைத்து, ஒற்றுமையாக இருந்து சங்கத்தை வளர்ப்பதில் கவனம் செலுத்துங்கள்.**

Rtn. A. ரங்கராஜன்
ID No:- 2561286
கும்பகோணம் சென்ட்ரல் ரோட்டரி சங்கம்
RI Dist. 2981
Mobile 96009 82402
E-mail : arkjster@gmail.com

தேர்தல் பற்றிய மேலும் விபரங்களுக்கு
QR குறியீட்டை ஸ்கேன் செய்யவும்

ரோட்டரி இரண்டு முன்னாள் RI தலைவர்களை இழந்துவிட்டது

ராஜேந்திர சாபூ

1998–99 ஆண்டில் ரோட்டரி இன்டர்நேஷனல் தலைவராக இருந்த ஜேம்ஸ் லேஸி, 92 வயதில் அக்டோபர் 4-ம் தேதியும், PRIP ரிச்சர்டு கிங் (2001&02) அக்டோபர் 11-ம் தேதியும் காலமானார்கள்.

ஜேம்ஸ் லேஸி, ஜிம் என்றும் அழைக்கப்பட்டார். அர்ப்பணிப்புள்ள பொது ஊழியர். வெற்றிகரமான தொழிலதிபர் மற்றும் குடும்பத்தையும் நன்றாக கவனித்துக் கொண்ட நபர். 1991–92 ஆம் ஆண்டுக்கான ரோட்டரி தலைவராக நான் தேர்ந்தெடுக்கப் படுவது உறுதிசெய்யப்பட்ட நிலையில் 1989-ஆம் ஆண்டு நவம்பரில் அவரை சந்தித்தேன். 1991-இல் மாவட்ட அசெம்பிளியில் உதவி நடுவராக இருந்த சிறந்த நபர். எனது உதவியாளராக தேர்வு செய்யப்பட்டவரும், நண்பருமான ஜார்ஜ் ஆர்சிநாக்ஸ் ஜூனியர், ஜேம்ஸ் லாஸியை பரிந்துரைத்தார். அவரையும், மனைவி கிளாடினையும் நான் சந்தித்தேன். அவரை பிடித்திருந்ததால் ஒப்புக்கொண்டேன். அதன் பிறகு நான் பலமுறை அவரை தொடர்புகொண்டேன். நான் ரோட்டரி தலைவராக பதவி வகித்த ஆண்டில் அவர் நடுவராக இருந்தார்.

ஜிம் லேஸி, அமெரிக்காவில், டென்னியில் குக்கிவில்லி ரோட்டரி சங்கத்தில் 1964-ம் ஆண்டு சேர்ந்தார். 1978–79-ல் சங்கத் தலைவர், 1980–81-ல் மாவட்ட ஆளுநர் மற்றும் 1988–90-ல் ரோட்டரி இயக்குநராகப் பணியாற்றினார்.

ஜிம், நாஸ்வில்லிக்கு கிழக்கே டென்னஸி மாநிலத் தலைநகர் குக்குவில்லியில் பிறந்தார். அங்குள்ள மத்திய உயர் பள்ளியில், கிளாடின் காரிங்டனை சந்தித்தார். இருவரும் 1948-ல் திருமணம் செய்துகொண்டனர். ஜிம் முதன் முதலாக ஆட்டொமொபைல் தொழிலில் ஈடுபட்டார். 1950-ல் அவர் மனைவி கிளாடினுடன், மிச்சிகனில் உள்ள டெட்ராய்ட் நகருக்கு இடம் பெயர்ந்தார். விரைவிலேயே பான்டியாக் ஆட்டோமொபைல் நிறுவனத்தின் இளம் விற்பனை மேலாளர் என்ற பெருமையைப் பெற்றார். 1952-ல் நாட்டின் அழைப்பை ஏற்று இரண்டு ஆண்டுகள் ராணுவத்தில் பணிபுரிந்தார். அப்போது அவருக்கு அதிகாரியாகும் வாய்ப்பு கிடைத்தது. ஆனால், மனைவியிடமிருந்து நீண்டகாலம் பிரிந்திருக்க வேண்டும் என்பதால் அந்த பதவியை மறுத்துவிட்டார்.

1956 வாக்கில் ஜிம் லேஸியும், கிளாடினும் மீண்டும் சொந்த ஊரான குக்கிவில்லிக்கே குடிவந்தனர். ஜிம், ஒரு வெற்றிகரமான ரியல்எஸ்டேட் தொழிலதிபரானார். கிளாடின், வீடுகளை அலங்கரிக்கும் நிபுணராக ஜிம்முக்கு உதவி வந்தார். விரைவிலேயே அனைவரும் மதிக்கும் தொழிலதிபரான ஜிம், டென்னிஸி மாநிலத்தின் பொதுச் சபையின் பிரதிநிதிகள் சபைக்கு போட்டியிட

PRIP *ஜேம்ஸ் லேஸி*, PRIP *ராஜேந்திர சாபூ ஒரு குழந்தைக்கு போலியோ சொட்டு மருந்து வழங்குவதைப் பார்க்கிறார்.*

1997ல் அப்போதைய இந்தியப் பிரதமர் I K குஜ்ரால் உடன் PRIP லேசி (வலமிருந்து 5வது), PRIP சாபூ (இடது), PRID சுதர்ஷன் அகர்வால் (வலது) மற்றும் RI இயக்குனர்கள்.

விரும்பினார். 1965 தேர்தலில் வென்ற அவர், இரண்டு முறை டென்னஸி மாநில மக்கள் பிரதிநிதித்துவ சபை உறுப்பினராகப் பணியாற்றினார்.

1986-ல், ஜிம் கென்டுகியில், படுகா என்னுமிடத்தில் ஒரு மிட்டாய் தயாரிக்கும் நிறுவனத்தை வாங்கினார். அந்த நிறுவனம் கில்லியம் கேண்டி பிராண்ட் இன்கார்பொரேஷன் என பெயரிடப்பட்டு கடினமான இனிப்பு மிட்டாய்கள், வேர்க்கடலை மூலம் தயாரிக்கப்பட்ட மிட்டாய் என பல்வேறு வகையான மிட்டாய்களை தயாரித்து விற்றுவந்தது. காலங்கள் உருண்டன. ஜிம் தொழிலை விரிவு படுத்தினார். நியூயார்க், கான்ஸாஸ், கென்டுகி மற்றும் ஜியார்ஜியாவில் தயாரிப்பு ஆலைகளுடன் இணைந்த மிட்டாய் நிறுவனங்களை நடத்தி வந்தார். ஊழியர்களின் நல்வாழ்விலும் அவர் அக்கறை செலுத்தினார். அவர் கையகப்படுத்திய அனைத்து நிறுவனங்களும் சிறப்பாக நிர்வகிக்கப்பட்டது.

பல ஆண்டுகளாக ஜிம், தனது ரோட்டரி சேவையில் இனிமையான நினைவுகளைக் கொண்டிருந்தார். 1977-ஆம் ஆண்டு குழு ஆய்வு பரிமாற்றத்துக்காக இங்கிலாந்துக்கு (இப்போது மாவட்டம் 1110) குழுவை வழிநடத்திச் சென்றது குறிப்பிடத்தக்கதாகும். 1997-ஆம் ஆண்டு ஜனவரியில் போலியோ பிளஸ்ஸுக்காக ஜிம், சண்டீகருக்கு வந்திருந்தபோது எங்கள் வீட்டுக்கு வந்திருந்தார். எனது மாவட்டத்துக்கு உட்பட்ட அனைத்து முன்னாள் ஆளுநர்களையும் அவர் சந்தித்துப் பேசினார். மறைந்த PRID சுதர்ஷன் அகர்வால், அப்போது பிரதமராக இருந்த I K குஜ்ராலுடனான சந்திப்புக்கு ஏற்பாடு செய்தார். பின்னர் நானும் உஷாவும் ஜிம் மற்றும் கிளாடின் இருவரையும் ஆக்ராவில், தாஜ்மஹலை பார்வையிட அழைத்தோம்.

1997-ஆம் ஆண்டில், புதுதில்லியில், FICCI ஆடிட்டோரியத்தில் நடைபெற்ற 6 ரோட்டரி இந்தியா விருது வழங்கும் விழாவில் ஜிம் மற்றும் கிளாடின் இருவரும் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டனர். 1998-ஆம் ஆண்டு ஜூலையில், நோய்க் கட்டுப்பாடு மற்றும் தடுப்புக்கான அமெரிக்க மையத்தின் செயல் இயக்குநரான டாக்டர் கிளாரிஸ் புரூம், போலியோவை உலகளாவிய அளவில் ஒழிப்பதற்கு சிறப்பாக பங்களித்தமைக்காக நோயத் தடுப்பு சாம்பியன் விருதை ஜிம்முக்கு வழங்கினார்.

2004-ஆம் ஆண்டு ஜனவரியில் தேசிய நோய்த்தடுப்பு தினத்தன்று அப்போது மத்திய சுகாதாரம் மற்றும் குடும்பநலத்துறை அமைச்சராக இருந்த சுஷ்மா ஸ்வராஜ்க்கு, "ரோட்டரி போலியோ ஒழிப்பு சாம்பியன்" விருதை ஜிம் வழங்கினார். கடந்த ஆண்டில் போலியோ ஒழிப்பில் இந்தியா சிறப்பாக செயல்பட்டுள்ளதாக ஜிம் கூறினார். 2002-ஆம் ஆண்டில் 1400 பேர் போலியோவால் பாதிக்கப்பட்ட நிலையில், 2003-இல் 233-ஆக குறைந்திருந்தது.

2005-ஆம் ஆண்டு ஏப்ரலில் ரோட்டரி நூற்றாண்டு சிற்பம் நாக்ஸவில்லி நகருக்கு வழங்கப் பட்டது. ரோட்டரியின் உலகளாவிய போலியோ ஒழிப்பு பிரசாரத்திற்கு சிறப்பாக பங்களிப்புச் செய்த ரோட்டரி மாவட்டம் 6780 தலைவர்களான பில் சார்ஜன்ட் (போலியோ ஒழிப்புப் பிரசாரத்துக்கு தலைமையேற்று வழிநடத்தியவர்), மற்றும் முன்னாள் ரோட்டரி தலைவர்கள் ஜேம்ஸ் போமர் மற்றும் ஜிம் லேஸி (உலகளாவிய குழந்தைகளுக்கான சேவை) ஆகியோர் கௌரவிக்கப்பட்டனர். இவர்கள் மூன்றும் பேரும்தான் போலியோ ஒழிப்புக்கான நடவடிக்கை

களை உச்சத்துக்கு கொண்டுசெல்ல இணைந்து செயலாற்றியவர்கள்.

ரோட்டரி மற்றும் ரோட்டரி அறக்கட்டளை எப்படி ஒரு கனவோடு தொடங்கியது என்று நான் சிந்திக்க தொடங்கினேன். ஒரு கனவு என்பது இதயத்திலிருந்து வரும் ஒன்று. அதை உங்கள் கைகளால் நிறைவேற்றுகிறீர்கள் என்று ஜிம் கூறினார். செயல்கள் மூலம் நிங்கள் உங்கள் கனவுகளை நனவாக்கலாம். ஊழியர்களிடம் பலமுறை அமர்ந்து பேசிய பிறகு, உங்கள் ரோட்டரி கனவுகளை பின்பற்றுங்கள் என்னும் கருபொருளை முடிவு செய்தேன்.

ரிச்சர்டு கிங்

ரிச்சர்டு கிங், 1968-ஆம் ஆண்டு கலிபோர்னியாவில் நைல்ஸ் (ப்ரிமான்ட்) ரோட்டரி சங்கத்தில் சேர்ந்தார். மேலும் அவர் 50 ஆண்டுகளுக்கு மேலாக உறுப்பினராக இருந்த அமைப்பின் மீது அவருக்கு இருந்த ஈடுபாடு எப்போதும் போல் வலுவாக இருந்தது.

ரிக், 2001–02 ஆம் ஆண்டில் ரோட்டரி தலைவராக பொறுப்பேற்ற போது, மனித நேயம்தான் தொழில் ரகசியம் என்ற சார்லஸ் டிக்கன்ஸ் வழியைப் பின்பற்றினார். நாங்கள் இருவரும் ரோட்டரியில் ஒன்றாகவே பயணத்தோம். எங்கள் நட்புக்கு முக்கிய காரணமாக இருந்தவர் உஷா. ரிக் மற்றும் செர்ரி மீது நான் அளவுகடந்த அன்பு கொண்டிருந்தேன்.அவர்களை நண்பர்கள் என்று அழைப்பதில் நாங்கள் அதிர்ஷ்டசாலிகள்.

1980-இல் GSE குழு தலைவர் என்ற முறையில் ரிக் தில்லி ரோட்டரி மாவட்டம் 310-க்கு வந்த போது நாங்கள் முதல் முதலாக சந்தித்துக் கொண்டோம். ஏதோ நேற்று தான் அவரை சந்தித்தது போல் இருந்தது. அப்போது நான் முன்னாள் மாவட்ட ஆளுநர். ஆனாலும் அவரிடம் தலைமைப் பண்புக்கான தகுதி இருந்தது தெரியவந்தது. அவர் முதல் அனுபவத்திலிருந்து முற்றிலும் புதிய மனிதனாக தாயகம் திரும்பினார். எல்லோரும் ரிக், உங்களுக்கு ராஜா சாபூவை சந்திக்கும் வாய்ப்பு கிடைத்தது என்று சொன்னார்கள். நாங்கள் சந்தித்த போது, ரோட்டரி சேவையைப் பற்றி மட்டும் பேசாமல், அதைச் செய்யுங்கள் என்று வலியுறுத்தினார். கடந்த காலங்களில் எனது உரைகள் ரோட்டரி மற்றும் அதன் சேவை களைப் பற்றியே இருந்தது. இது ரிக்கிடமிருந்து நான் கற்றுக்கொண்ட பாடமாகும்.

அடுத்து 1981-ஆம் ஆண்டு RI இயக்குநர் என்ற முறையில் சென்ற போது சான் பிரான்சி ஸ்கோ ரோட்டரி சங்கத்தில் ரிக்கின் உரையை கேட்கும் வாய்ப்பு கிடைத்தது. அடுத்து 1982-இல் நான் RI இயக்குநராக RI ஸ்டான் மெக்காஃப்ரேயை பிரதிநிதித்துவப் படுத்தும் வகையில் ரிக்கின் சங்கத்தில் நடைபெற்ற மாவட்ட மாநாட்டில் உரையாற்றினேன். அப்போது தான் அவருடன் நட்பு ஏற்பட்டது. அதுமுதல் ரோட்டரியில் நாங்கள் இணைந்தே பயணம் செய்தோம். ரிக்கியுடன் இருந்த தோழமையையும் அவருடன் இருந்த நட்பையும் பகிர்ந்து கொள்வதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

1990-ஆம் ஆண்டில் போர்ட்லாண்ட் மாநாட்டில் நீதியை நிலைநாட்டுவதற்காக ரோட்டரி இன்டர்நேஷனல் வாரியத்தின் முடிவான நேர்மையை ரிக் எவ்வாறு பாதுகாத்தார் என்பதை என்னால் மறக்க முடியாது. ஒருவரின் தனிப்பட்ட வெற்றியைவிட மக்களுக்கு உதவுவதுதான் முக்கியம். அதைவிட வேறு எதுவும் முக்கியமில்லை என்று பேசினார்.

நான் 1991-ஆம் ஆண்டு உள்வரும் RI தலைவராக அமெரிக்காவில் அனாஹெமில் நடைபெற்ற சர்வதேச அசெம்பிளி கூட்டத்தில் பங்கேற்ற சம்பவத்தை

1990-ஆம் ஆண்டில் போர்ட்லாண்ட் மாநாட்டில் நீதியை நிலைநாட்டு வதற்காக ரோட்டரி இன்டர்நேஷனல் வாரியத்தின் முடிவான நேர்மையை ரிக் எவ்வாறு பாதுகாத்தார் என்பதை என்னால் மறக்க முடியாது

PRIP *ரிச்சர்ட் கிங் மற்றும் அவரது மனைவி செரி* PRIP *சாபூ மற்றும் உஷா உடன் சண்டிகரில் உள்ள அவர்களது வீட்டில்.*

PRIP *ஜேம்ஸ் லேஸி(இடதுபுறம் அமர்ந்திருக்கிறார்) மற்றும்* PRIP *ரிச்சர்ட் கிங் (வலமிருந்து இரண்டாவதாக நிற்கிறார்) உடன்* PRIP *ராஜேந்திர சாபூ எவன்ஸ்டனில் உள்ள* RI *தலைமையகத்தில்.*

நினைவு கூற விரும்புகிறேன். வடஇந்தியாவிலும், மத்திய இந்தியாவிலும் முதியவர்களுக்கு மரியாதை தெரிவிக்கும் விதமாக அவர்களது கால்களைத் தொட்டு வணங்கி வாழ்த்துப் பெறுவது வழக்கமானது. ரிக் இந்தியா வந்திருந்த போது, இதை உன்னிப்பாக கவனித்துள்ளார். அதன் பின்னர் அவர் என்னை பார்க்கும்போதெல்லாம் எனது காலை தொட்டு வணங்கி வாழ்த்துப் பெருவதை வழக்கமாகக் கொண்டார். தனது சிறப்பான உரை மற்றும் செயல்பாடுகள் மூலம் மக்கள் மனதைக் கவர்ந்தார். அவரது மனிதாபிமானம் மிக்க சேவைகள் அவரது மாவட்டதால் அங்கீகரிக்கப்பட்டது.

பலமுறை ரிக் எங்கள் வீட்டில் தங்கியிருக்கிறார். அதேபோல் நாங்களும் அவரது வீட்டில் தங்கியிருக்கிறோம். ஆப்பிரிக்காவில் என்னை பிரதிநிதிப்படுத்துமாறு நான் அவரிடமும் செர்ரியிடமும் கேட்டேன். எங்களது பயணத்தில் பல சிறப்பு அம்சங்கள் இருந்தன. எங்களிடையே நெருக்கமான நட்பு தொடருவதற்கு அவர் என்னிடமும் உஷாவிடமும் காட்டிய அன்பும் மரியாதையும்தான்.

ரோட்டரி உலகின் சிறந்த பேச்சாளர்களில் ரிக்கியும் ஒருவர். அவர் நடந்து கொள்ளும் விதம், ரோட்டரி உலகிற்கு செய்த சேவைகள் பற்றிய அவரது பேச்சு இவைதான் எங்கள் குடும்பத்தினர், நண்பர்கள், சக ஊழியர்களுக்கு ரோட்டரியை அறிமுகப்படுத்தும் நல்வாய்ப்பை வழங்கியது. புதிய உறுப்பினர்கள் ரோட்டரியைப் பற்றிய ஆழமான புரிதலைப் பெற உதவியது.

ரோட்டேரியன்கள் முக்கிய மானவர்கள். உலகின் நல்ல மனிதர்கள் என்று ரிக் கூறுவார். அவரது மேற்கோளை காட்டி முடிக்கிறேன்: நம் சொந்த வாழ்க்கையில் நாம் என்ன செய்தாலும் சரி நம்மிடம் எத்தனை கார்கள் இருந்தாலும் சரி நமது அலுவலகத்தில் எத்தனை பட்டங்களைத் தொங்கவிட்டாலும் சரி அதைப்பற்றி கவலை இல்லை. நாம் செய்யும் வேலைகளுக்கு எத்தனை பாராட்டுகள் பெற்றாலும், தொழில்களில் வெற்றிபெற்றாலும் நாம் மனிதாபிமானத்துடன் செயல்படாவிட்டால் எதுவும் பதிவாகாது. நாம் இந்த உலகை விட்டுச் செல்லும்போது நம்முடன் எடுத்துச் செல்வது நல்ல மனிதர் என்ற பெயரைத்தான்.

நம் சொந்த வாழ்க்கையில் நம்மிடம் எத்தனை கார்கள் இருந்தாலும் நாம் செய்யும் வேலைகளுக்கு எத்தனை பாராட்டுகள் பெற்றாலும், நாம் மனிதாபிமானத்துடன் செயல்படா விட்டால் எதுவும் பதிவாகாது.

ரிச்சர்ட் கிங்
RI தலைவர் (2001–02)

கட்டுரையாளர் முன்னாள் ரோட்டரி தலைவர்.

மதுரா சத்ரபதி: அவரது ஆற்றல் மரபு கடந்தது

உஷா செல்வராஜ்

அக்டோபர் 31 அமைதியான நேரத்தில், நம்பிக்கை நட்சத்திரங்களில் ஒருவரான PDG மதுரா சத்ரபதி காலமாகிவிட்டார் என்னும் இதயத்தை உலுக்கும் செய்தியைக் கேட்டு ரோட்டரி உலகம் அதிர்ச்சி அடைந்தது. நம்பமுடியாத அந்த செய்தி நகரின் உட்பகுதிகளில் எதிரொலித்தது. எப்போதும் புன்னகையுடன், அன்புடன், அவர்களின் இதயங்களில் அழியாத அடையளத்தை ஏற்படுத்திய ரோட்டேரியனின் மறைவு, ரோட்டரிக்கு இழப்பு மட்டுமல்ல, ரோட்டரியை நேசிக்கும் பலரின் மற்றும் சமூகத்தின் உள்ளத்தில் ஆழ்ந்த வெற்றிடத்தை ஏற்படுத்தியது.

பரபரப்பான பெங்களூரு நகரத்தில், மாபெரும் சக்தியாக இருந்த அவர், மதுரா என்று அன்புடன் அழைக்கப்பட்டார். ரோட்டரி, தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் மகளிர்க்கு அதிகாரம் அளித்தலில் அவர் வல்லமையுடன் முன்னிலை பெற்றிருந்தார்.

ரோட்டரியின் தடைகளைக் கடந்து ரோட்டரி மாவட்டம் 3190-ன் முதல் பெண் தலைவரானார். பின்னர் 1998–99ல் தெற்காசியாவில் முதல் பெண் மாவட்ட ஆளுநராக வரலாறு படைத்தார்.

ரோட்டேரியன் ஆவதற்கு முன்னரே, ரோட்டரி நியூஸ் ஆசிரியராக இருந்தார். மறைந்த PRID M K பாண்டுரங்க செட்டி வழி காட்டு தலில் RID 3190ல் மதுரா தலைமையிலான சங்கம் நிறுவப்பட்ட ஆண்டிலேயே TRF-க்கு நிதி அளிக்கும் சங்கமாக இருந்தது. நடமாடும் கழிப்பறைகள், புதுமையான பேருந்து நிறுத்தங்கள், மரங்கள் கணக்கெடுப்பு, சர்வேதச இளம் தொழில் முனைவோர் மாநாடு, மணிமார்ட் போன்ற பல நடவடிக்கைகள் அவரது தொலை நோக்கு உணர்வை வெளிப்படுத்தின.

2004-ம் ஆண்டு அனாஹெமில் நடந்த சர்வதேச அசெம்பிளியில் சர்வதேச பயிற்சித் தலைவர்களில் ஒருவராக பணியாற்றினார். மாவட்ட ரோட்டரி அறக்கட்டளை தலைவராக அவர், இதுவரை இல்லாத அளவாக 3,00,000 டாலருக்கு மேல் பங்களிப்புச் செய்து சாதனை படைத்து முத்திரை பதித்துள்ளார். தொடர்ந்து இரண்டு ஆண்டுகளாக உலக போலியோ நிதிக்காக ரூ.10 லட்சம் திரட்டுவதில் முக்கியப் பங்காற்றியுள்ளார்.

PDG மதுரா சத்ரபதி

ஒரு உண்மையான தொலை நோக்கு கொண்ட தலைவரான மதுராவின் செல்வாக்கு ரோட்டரியைக் கடந்தது. 1981-ம் ஆண்டு அவர் ஃபுட் அசோசியேட்ஸ் பெங்களூரு என்ற நிறுவனத்தை நிறுவினார். உள்ளூர் மற்றும் உலகளாவிய சந்தைகளுக்கு பயன்படும் நீரேற்ற உணவுப் பொருள்களை தயாரிக்கும் ஆலை. AWAKE (Association of Women Enrepreneurs of Karnataka) என்னும் அமைப்பை உருவாக்கி நிறுவனத்தலைவர் ஆனார். AWAKE பின்னர் சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்ட ஆதார மையமாக விளங்குகிறது. இந்த மையம் 30,000-த்துக்கும் மேலான புதிய தொழில் முனைவோர் (ஸ்டார்ட் அப்ஸ்) மற்றும் முதல் தலைமுறை பெண் தொழில் முனைவோரையும் உருவாக்கியுள்ளது. பெல்காம் மாவட்டத்தில் உள்ள அதானியில் கைவினைக் கலைஞர்களால் தயாரிக்கப் படும் காலணி நிறுவனமான ToeHold உருவாக மதுரா காரணமாக இருந்தார். அந்த நிறுவனத்தின் மூலம் கோலாபுரி காலணிகள் தயாரிப்பு மற்றும் சந்தைப் படுத்துதலில் புரட்சியை ஏற்படுத் தினார். இதனால், நூற்றுக்கணக்கான கலைஞர்களின் வாழ்க்கையில் ஒளியேற்றினார்.

UNDP, ILO, UNIDO, WORLD BANK, UN ESCAP மற்றும் ஆப்பிரிக்காவுக்கான பொருளாதார ஆணையம் உள்ளிட்ட பலவற்றுக்கு தொழில்வள நிபுணராக செயலாற்றியுள்ளார்.

குழந்தை பருவத்துக்குப் பின் உயர்ந்து அதிக பயணம் இல்லாத பாதையைத் தேர்ந்தெடுத்து, நட்சத்திரம் போல மின்னி, பிறருக்கு ரோல் மாடலாக

PRIP K R *ரவீந்திரனுடன்.*

உயர்ந்து நின்றவர் மதுரா. அவருடன் இணைந்து பணியாற்றியதை ரோட்டரி குடும்பத்தினர் பெருமையாக கருதுகின்றனர். அவரின் மறைவு மூலம் உலகம் ஒரு சமூக மேம்பாட்டு ஆதரவாளரை இழந்துவிட்டது என்று சொல்லலாம். ஆனாலும் அவரது செல்வாக்கும் தாக்கமும் தொடர்ந்து அனைவருக்கும் வழிகாட்டும். இந்த நெருக்கடியான நேரத்தில் நாங்கள் அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறோம். மதுராவை நாங்கள் இழந்துவிட்டோம். ஆனால், அவரது திறமையான செயல்பாடுகள் எங்களின் மனதில் எதிரொலித்துக் கொண்டே இருக்கும்.

கட்டுரையாளர்
பெங்களூர் டௌன்டவுன்
ரோட்டரியின் தலைவர் (RID 3191).

கொடைக்கானலில் ஒரு RYLA

ரோட்டரி செய்திக்குழு

RC கொடைக்கானல், RID 3000 நடத்திய, RYLA தலைவர் சுகுமார், செயலாளர் கிரிபா சோவான்ஸ் ஒருங்கிணைத்த STARS (தயாராகுங்கள், செழியுங்கள், திட்டமிடுங்கள், வளருங்கள், ஒளிருங்கள்) என்ற மூன்று நாள் RYLA-ல் 45 குழந்தைகள் பங்கேற்றார்கள். பல பயிற்சியாளர் களுடைய அமர்வுகளை Rtn நிக்கோலஸ் ஃபிரான்சிஸ் வழிநடத்தினார்.

இதில் பங்கேற்ற குழந்தைகள் தங்கள் திறமைகளை, மேடைப் பேச்சுத் திறன்களை, குழுப்பணியை வெளிக் காண்பித்தார்கள், பரிவு, ஒழுக்கத்தைக் கொண்ட, 'முன்னேற்றத்துடனான மாற்றத்துக்கான தலைவர்களாக மாறக் கற்றுக்கொண்டார்கள் என்கிறார் கிரிபா.

PDG கோபாலகிருஷ்ணன் RYLA-வைத் தொடங்கி வைத்தார், நிறைவு அமர்வுகளில் DG ஆனந்த ஜோதி, PDG சாம் பாபு பங்கேற்றார்கள்.

கரூரைச் சேர்ந்த நிக்கோலஸ், யுவராஜ், DGE ராஜா கோவிந்தசாமி, ரோட்டராக்ட் மாவட்டப் பயிற்சியாளர் சஷாங்க், PDG ஜார்ஜ் சுந்தரராஜ், DRR சுனில் கௌதம்ராஜ் ஆகியோர் தலைமைப் பண்புகளைப்பற்றிய பல அமர்வுகளின் மூலம் மாணவர்களை வழிநடத்தினார்கள்.

DG *ஆனந்த ஜோதி (நடுவில்),* PDG *சாம் பாபு (இடதுபுறம்,* DG*க்கு பின்னால்), சங்கத் தலைவர் மதன் கோவிந்தன், செயலாளர் அக்பர் ஷேத், நிக்கோலஸ் பிரான்சிஸ்,* RYLA *தலைவர் சுகுமார் (இடது) மற்றும் செயலாளர் கிருபா சோன்ஸ் (வலது),* RYLA *பங்கேற்பாளர்களுடன்.*

கொடைக்கானல் பன்னாட்டுப் பள்ளியைச் சேர்ந்த இன்டராக்டர்கள் செயற்கை அறிவுபற்றிப் பேசினார்கள். சூரியக் கணாணிப்பகத்துக்குச் சென்றுவந்த பங்கேற் பாளர்கள் அதை மிகவும் விரும்பினார்கள். இந்த RYLA-வின் வெற்றிக்கு முக்கியப் பங்காற்றியவர்கள், சங்கத் தலைவர் மதன் K கோவிந்தன், செயலாளர் அக்பர் சைத், உறுப்பினர் சோபனா சுதாகர்.■

தில்லி NCR, குருகிராமில் உள்ள பள்ளிகளுக்கு புத்துயிர் அளிக்கும் RC தில்லி இம்பீரியல்

ரஷீதா பகத்

அரசுப் பள்ளிகளுக்குப் புத்துயிர் அளிப்பதிலும், நவீனப்படுத்துவதிலும் சிறப்பு கவனம் செலுத்தி வருகிறது இந்த சங்கம். கடந்த சில ஆண்டுகளில், RID 3012-க்கு உட்பட்ட RC தில்லி இம்பீரியல், தில்லி என்.சி.ஆர். பகுதி மற்றும் குருகிராம் சுற்றியுள்ள கிராமங்களில் உள்ள அரசுப் பள்ளிகளுக்கு புத்துயிர் அளிக்க மூன்று சர்வதேச மானியத் திட்டங்களைச் செயல்படுத்தியுள்ளது.

பள்ளிகளுக்கு சுற்றுச்சுவர் கட்டுதல், நூலகம் மற்றும் கணினி ஆய்வகம் அமைத்தல், கை கழுவும் நிலையங்கள் அமைத்தல், தண்ணீர் ஓடும் சுத்தமான கழிப்பறைகளை அமைத்தல், குடிநீர் வசதி, தண்ணீர் தொட்டிகள், சோலார் பேனல்கள், புரொஜெக்டர்கள், பிரின்டர்கள் மற்றும் வளர் இளம் பெண்கள் மாதவிடாய் சுகாதாரத்தை பேண மீண்டும் பயன்படுத்தும் சானிடரி பேடுகளை வழங்குதல் இப்படி பல பணிகளைச் செய்துள்ளது.

சமீபத்தில் 1,92,000 டாலர் மதிப்பிலான சர்வதேச மானிய உதவி திட்டத்தின் மூலம் சங்கம் குருகிராமில் 19 பள்ளிகளைச் சீரமைத்து புதுப்பித்துள்ளது.

பள்ளிகளைப் புதுப்பிக்கும் இந்த திட்டத்துக்கு மூல காரணமாக இருந்தவர் சங்கத்தின் முன்னாள் தலைவர் ராம்சந்த். இந்த திட்டத்தை வெற்றிகரமாக முடித்ததற்கான பெருமை சங்கத்தின் பட்டயத் தலைவரும், பாத்வேஸ் பள்ளிகளின் உரிமையாளருமான பிரவீண் ஜெயினையே சேரும் என்கிறார் ராம்சந்த். அவரும் அவரது குழுவினரும் ஆதரவு தேவைப்படும் அரசுப் பள்ளிகளைக் கண்டறிந்து திட்டம் முழுமையாகச் செயல்படுத்தப்படுவதை மேற் பார்வையிட்டனர். மேலும் அவை முறையாக பராமரிக்கப்படுவதையும் உறுதிசெய்தனர். வசதிகள் செய்து கொடுப்பதும், உபகரணங்கள் வழங்குவதும் எளிதானது. ஆனால்,

குருகிராம் கெர்லா அரசு பள்ளியில் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள்.

சங்கம் வழங்கிய மறுபயன்பாட்டு சானிட்டரி பேட் பாக்கெட்டுகளுடன் மாணவர்கள்.

அவற்றை நிலையாக பராமரிப்பது என்பது கடினமானது. ஆனால், பள்ளிகள் தொடர்ந்து சீராகச் செயல் படுவதை அவர் உறுதிசெய்தார்.

உதாரணத்துடன் விளக்கிய அவர், பள்ளிகள் புதுப்பிக்கப்பட்டதுடன், பர்னிச்சர்களும் வழங்கப்பட்டன. மேலும் கணினி அறைகள் மடிக் கணிகளுடன் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இப்போது பர்னிச்சர்களுக்கு பராமரிப்பு தேவைப்படாது. ஆனால், மடிக்கணினிகள் (லாப்டாப்) போன்றவற்றுக்கு பராமரிப்பு தேவைப்படும். அதற்கு பாத்வேஸ் குழு உதவுகிறது. வாராந்திர மற்றும் மாதாந்திர அடிப்படையில் அவர்கள் மடிக்கணினிகளை சர்வீஸ் செய்து தருகிறார்கள். மென்பொருள்களை அப்டேட் செய்வது, பிரச்னைகள் ஏற்பட்டால் அதை சரிசெய்வது, சுத்தம் செய்வது உள்ளிட்ட பணிகளை செய்து தருகின்றனர். இது கணினி அறையின் நிலைத்தன்மையை உறுதிசெய்கிறது.

தண்ணீர் வடிகட்டிகள் மற்றும் நீர் குளிரூட்டிகளின் பராமரிப்புக்கும் பாத்வேஸ் குழு உதவுகிறது. ஆனால், எங்களுக்கு பெரும் சவாலாக இருப்பது கழிப்பறை பராமரிப்பு தான். நாங்கள் அவர்களுக்கு கை கழுவதல் மற்றும் கழிப்பறை சுத்தம் செய்வதற்கான பொருள்களை கொடுத்துள்ளோம். ஆனால், அவை தொடர்ந்து பராமரிக்கப்படுகிறதா, கழிப்பறைகள் சுத்தமாக இருக்கிறதா என்பதை எப்படி உறுதிசெய்வது? எனவே பெற்றோர் உள்ளிட்டோர் அடங்கிய பள்ளி பராமரிப்புக் குழுவினர்தான் இதை கவனிக்க வேண்டும். கழிப்பறைகளை முறையாகவும் தூய்மையாகவும் பராமரிப்பது அவர்களின் பொறுப்பாகும் என்றார்.

உமாங்க் என்னும் சமீபத்தில் சர்வதேச மானியத் திட்டத்தில் RID 4563 மற்றும் RID 4261 ஆகியோரின் பங்களிப்புடன் தில்லி என்.சி.ஆர். மற்றும் குருகிராம் பகுதிகளில் உள்ள கிராமங்களில் 19 பள்ளிகளை மேம்படுத்த சங்கம் பல சவால்களை சந்திக்க வேண்டியிருந்தது. முன்னர் இரண்டு மானிய உதவித் திட்டங் களைச் செயல்படுத்தும்போது பள்ளிகள் எண்ணிக்கை குறைவாக இருந்தது. இந்த பெரிய திட்டத்துக்கு கடந்த 2019-ம் ஆண்டு டிசம்பரில் சங்க உறுப்பினர்களிடமிருந்து உறுதிமொழியைப் பெற்று நிதி திரட்ட வேண்டியிருந்தது. கடந்த 2020 ஜனவரியில் கோவிட் தொற்று பிரச்னை தலைதூக்கியதால் கவலை ஏற்பட்டது. ஏப்ரல் மற்றும் மே மாதவாக்கில் எங்களுக்கு இரண்டு வழிகள்தான் இருந்தன. ஒன்று நிதி திரட்டுவதைத் தொடர்வது, இரண்டாவது திட்டத்தை ஒட்டுமொத்தமாக கைவிடுவது. அதிர்ஷ்டவசமாக அப்போது மாவட்ட ஆளுநராக இருந்த தீபக் குப்தா எங்களுக்கு ஆதரவு கொடுத்தார். எனவே திட்டத்தை தொடர நாங்கள் முடிவு செய்தோம் என்றார் ராம்சந்த்.

பொது முடக்கம் வந்து சென்ற போதிலும் நாங்கள் மனம் தளராமல் தேவையான நிதியை திரட்டி சர்வதேச மானிய உதவிக்கு விண்ணப்பித்தோம். ஆனால், அந்த சமயத்தில் கோவிட் தொடர்பான திட்டத்துக்கும் ஆதரவு அளிக்க வேண்டியிருந்ததால் TRF அறக்கட்டளைக்கு நிதி ஒதுக்குவதே சவாலாக இருந்தது.

ஆனாலும் ஒருவழியாக 2020-ம் ஆண்டு டிசம்பரில் சர்வதேச மானிய

உதவி கிடைத்தது. திட்டக்குழுவினர் பள்ளிகளுக்குத் தேவையான பர்னிச்சர், கணினிகள் மற்றும் இதர கல்வி உபகரணங்கள் மற்றும் சுற்றுச்சுவர் கட்டுதல், கட்டடங்களை புதுப்பித்தல் உள்கட்டமைப்புத் தேவைகளை ஏற்பாடு செய்வதில் மும்முரமாக ஈடுபட்டனர்.

கணினிகள், பிரின்டர், தண்ணீர் மோட்டார் செயல்படுவதற்கான மின்சாரத் தேவைகளை பூர்த்தி செய்ய சூரிய சக்தி மின்சாரம் உருவாக்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இரண்டு மாவட்ட ஆளுநர்கள் அதாவது தீபக் குப்தா மற்றும் அலோக் குப்தா இருவரும் எங்களுக்கு ஆதரவுக்கரம் நீட்டினர். ஒருவழியாக கோவிட் இரண்டாவது முறை தலைதூக்குவதற்கு முன் திட்டப் பணிகளை துவக்கினோம் என்று நினைவுகூர்ந்தார் ராம்சந்த். மீண்டும் பள்ளிகள் மூடப்பட்டன. 2021-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் வரை எதுவும் செய்ய முடியவில்லை. பின்னர் கோவிட் அச்சுறுத்தல் குறைந்து இயல்புநிலை திரும்பியதும் நிலுவையில் பணிகள் செய்து முடிக்கப்பட்டன.

திட்டத்தின் செயல்பாடுகளையும், அதன் முக்கிய அம்சங்களையும் முன்னாள் தலைவர் அகில் பன்ஸால் எடுத்துரைத்தார். நாங்கள் தேர்ந்தெடுத்த பள்ளிகள் உண்மையிலேயே மிகவும் மோசமான நிலையிலும், இடிந்து விழும் நிலையிலும் இருந்தன. குடிநீர் வசதி, மின்சார வசதி இல்லை. பள்ளியில் ஜெனரேட்டர் இருந்தது. ஆனால், அதற்காகும் டீசல் செலவை யார் ஏற்பது? பள்ளியில் பணம் இல்லை. ஆரம்பத்தில் நாங்கள் குடிநீர்வசதி செய்து கொடுத்து நீர் குளிரூட்டிகளை நிறுவினோம். ஆனால், மின்சாரம் இல்லாமல் அவை பயனற்றவையாக இருந்தது. எனவே சூரியசக்தி மின்சாரம் தயாரிக்க நினைத்தோம்.

மற்றொரு பெரிய பிரச்னை என்னவென்றால் கழிப்பறைகள் பரிதாபகாரமான நிலையில் இருந்தது. அங்கு தண்ணீர் வசதி இல்லை. எனவே மாணவிகள் மாதவிடாய் காலத்தில் பள்ளியைத் தவற விட்டனர். இந்தப் பிரச்னைக்கு

1

2

1. RC டெல்லி இம்பீரியல் உறுப்பினர்கள், PDGs அலோக் குப்தா, தீபக் குப்தா மற்றும் லலித் கன்னா பாத்வேஸ் பள்ளியில்.

2. குழந்தைகளுடன் சஞ்சீவ் ஜெயின், அகில் பன்சால், ராம் சந்த், PDG கணேஷ் பட், பிரவீன் ஜெயின், வித்யா பட், மனோஜ் குப்தா மற்றும் திவ்யா சந்த்.

3. PDG கணேஷ் பட் குழந்தைகளுடன் உரையாடுகிறார்.

4. PDG அலோக் குப்தா மற்றும் தீபக் குப்தா டீக்லி பள்ளியில் சங்கம் நிறுவிய சோலார் ஆலையை திறந்து வைக்கிறார்கள்.

4

தீர்வுகாண மாதவிடாய் சுகாதார மேலாண்மை திட்டத்தை கையிலெடுத்தோம். இதற்காக மாணவிகளுக்கு மாதவிடாய் சுகாதாரம் பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்த பயிலரங்குகள் நடத்தினோம். அவர்களுக்கு மீண்டும் பயன்படுத்தக்கூடிய நாப்கின்கள் பள்ளிகளில் வழங்கப்பட்டன.

பன்ஸால் மேலும் கூறுகையில், இந்த அரசுப் பள்ளிகள் சில விசித்திரமான நிர்வாக் கொள்கையின் அடிப்படையில் நடத்தப்படுகின்றன. அவர்களுக்கு அரசாங்கத்திடமிருந்து முதலீட்டுச் செலவுக்கு நிதி கிடைக்கிறது. ஆனால், பராமரிப் பதற்கு நிதி தருவதில்லை. ஆனால், அவர்களிடம் உள்ள ஒரு நல்ல விஷயம் என்னவென்றால், பள்ளி நிர்வாகத்தினர், ஆசிரியர்கள், பெற்றோர்கள் அடங்கிய நிர்வாகக் குழுவினர். நாங்கள் ஏற்படுத்திக் கொடுத்த வசதிகளைப் பராமரிக்க அவர்களை ஈடுபடுத்தி வருகிறோம்.

TRF பிரிவினர், முன்னாள் மாவட்ட ஆளுநர் கணேஷ் பட் ஆகியோரிடம் இந்த சர்வதேச மானிய உதவித் திட்டத்தை மேற்பார்வையிடும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டு ஆகஸ்ட் மாதம் மத்தியில் புனரமைக்கப்பட்ட பள்ளிகளை பார்வையிட்டோம். இந்த திட்டம் உண்மையிலேயே மாணவர்கள், ஆசிரியர்களிடையே மாற்றத்தை ஏற்படுத்தியிருப்பது தெரியவந்தது. நான் பள்ளி முதல்வர், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்களுடன் பேசினேன். கெர்லாவில் உள்ள மகளிர் அரசு ஆரம்பப் பள்ளி மாணவிகள், கழிப்பறைகள் புதுப்பிக்கப்பட்டு தண்ணீர் வசதி செய்துதரப்பட்ட பிறகு மாதவிடாய் காரணத்துக்காக நாங்கள் பள்ளியை தவறவிடுவதில்லை என்று கூறினர்.

குழந்தைகளின் ஆரோக்கியத் திலும் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதை அவர் கண்டார். அவர்கள் இப்போ தெல்லாம் மதிய உணவு சாப்பிடு வதற்கு முன்னதாக முறையாக தங்கள் கைகளை சோப்பு போட்டு கழுவுகின்றனர். தண்ணீரால் பரவும் நோய்களால் பாதிக்கப்படுவதில்லை. மாணவர்கள் தரையில் உட்காராமல்

பந்த்வாரி அரசு முதுநிலைப் பள்ளியில் மாதவிடாய் சுகாதாரம் குறித்த அமர்வு.

இப்போது பெஞ்சில் உட்கார்ந்து கொண்டு மேஜை மீது நோட்டுகளை வைத்துக்கொண்டு எழுதுகின்றனர். இப்போது அவர்கள் கண்ணியமாக இருப்பதாக உணர்கிறார்கள். அவர்களிடம் நம்பிக்கை அதிகரித் துள்ளது. மாணவர்களின் வருகையும் அதிகரித்துள்ளது. அவர்களின் கல்வித் திறனும் அதிகரித்துள்ளது. அவர்களின் சராசரி மதிப்பெண்கள் 65-லிருந்து 85 சதவீதமாக உயர்ந் துள்ளது. வருகையும் 65-லிருந்து 90 சதவீதமாக அதிகரித்துள்ளது என்றார்.

மடிக்கணினிகள் மற்றும் இணைய வசதி மற்றும் புரொஜெக்டர் இருந்ததால் சந்திராயன்-3 நிலவில் தரையிறங்கிய பெருமைக்குரிய காட்சியை மாணவர்கள் கண்டு ரசித்தனர். புதுப்பிக்கப்பட்ட பள்ளிகளில் இன்டராக்ட் சங்கங்கள் தொடங்கப்பட வேண்டும் என்று பட் யோசனை தெரிவித்தார். பராமரிப்பு அம்சத்தை கண்காணிக்க வேண்டும் என்று கூறினார். மாற்றத்தை ஏற்படுத்தும் இந்த திட்டத்தின் மூலம் 6,000 குழந்தைகள் மற்றும் 100 பள்ளி ஊழியர்கள் பயனடைந்துள்ளனர்.

இந்த லட்சியத் திட்டத்தை உருவாக்கி, வழிகாட்டி செயல் படுத்த அயராமல் உழைத்து உதவிய சங்க உறுப்பினர்களின் பங்களிப்பை ராம்சந்த் பதிவு செய்தார். 2019–20 சங்கத்தின் தலைவராக துஷ்யந்த் ஆர்யா இருந்த போது தான் நிதி திரட்டப்பட்டது. 2020–21, 2021–22ம் ஆண்டுகளில் மனோஜ் குப்தா தலைவராக இருந்தபோது தான் திட்டம் செயல்படுத்தப் பட்டது. சர்வதேச மானிய உதவி கிடைக்க விஷால் ஜோதி சிறப்பாக செயலாற்றினார். முன்னாள் தலைவர் அஸ்வினி குப்தா, திட்டங்களுக்குத் தேவையான கருவிகள், உபகரணங்கள் குறைந்த விலையில் கிடைப்பதை உறுதி செய்தார். இந்த திட்டத்தை சிறப்பாகச் செயல்படுத்த பின்னணியில் இருந்து செயல்பட்டவர் முன்னாள் தலைவரும் பாத்வேஸ் பள்ளி உரிமையாளருமான பிரவீண் ஜெயின் மற்றும் அவரது குழுவினர்தான். அவர்கள்தான் இந்த வெற்றிக்கு முக்கிய காரணம். மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் மத்தியில் மகிழ்ச்சி ஏற்படவும் அவர்கள்தான் காரணம். பள்ளி நிர்வாகத்தினர் புதுப்பிக்கப்பட்ட பள்ளிகளை பராமரித்து சீராக நடைபெற ஒத்துழைத்து வருகின்றனர் என்றார் ராம்சந்த்.■

BECOME A DOCTOR IN USA

XAVIER UNIVERSITY ARUBA'S 6 YEAR PROGRAMME TO TRANSFORM YOUR AMERICAN DREAM INTO A REALITY

DOCTOR OF MEDICINE

First 2 years
Start @
KLE, Campus
Karnataka, India

Next 2 years
Continue @
Xavier's Campus
Aruba, Caribbean island - Netherland

Next 2 years
Complete @
Xavier's affiliated Teaching Hospitals
USA / Canada

DOCTOR OF VETERINARY MEDICINE

First 2 years
Start @
KLE, Campus
Karnataka, India

Next 3 years
Continue @
Xavier's Campus
Aruba, Caribbean island- Netherland

Final year
Complete @
Xavier's affiliated Teaching Hospitals
USA / Canada

Limited Seats

The session starts in January 2024

To apply, Visit: **application.xusom.com**

Contact: Uday @+91 91 0083 0083 +91 98 8528 2712
email: infoindia@xusom.com

XAVIER STUDENTS ARE ELIGIBLE FOR H1/J1 Visa PROGRAMME

ADVT.

கொல்கத்தாவில் 20 பள்ளிகளில் WASH ஏற்படுத்திய மாற்றம்!

ஜெய்ஸ்ரீ

கொல்கத்தாவின் கிராமப்பகுதிகளில் 10,000-த்துக்கும் மேலான மாணவர்கள் இப்போது சிறந்த சுகாதார வசதிகளை அனுபவித்து வருகின்றனர். RID 3291-க்கு உட்பட்ட பேளூர் ரோட்டரி சங்கம் செயல்படுத்திய $1,42,600 மதிப்பிலான சர்வதேச மானியத் திட்டத்திற்குதான் நன்றி சொல்ல வேண்டும். இத்திட்டம் 2019-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் தொடங்கப்பட்டு 2023-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் பூர்த்தி செய்யப்பட்டது. சுத்தமான குடிநீர், சுகாதாரம் மற்றும் தூய்மையை வலியுறுத்தும் WASH திட்டம் 6 வருவாய் மாவட்டங்களில் உள்ள 20 பள்ளிகளில் நிறைவேற்றப்பட்டுள்ளது. குழந்தைகளின் எதிர்காலத்திற்கு சிறந்த முதலீடாகும் இந்த திட்டம் என்று புன்னகையுடன் தெரிவித்தார் திட்டத்தின் தலைவர் விஷ்ணு தந்தானியா.

மூர்ஷிதாபாதில் உள்ள புர்பா பரத்பூர் ஆரம்ப பள்ளியில் ரோட்டரி கழிப்பறைகளை கட்டிக் கொடுத்துள்ளதால் உற்சாகத்துடன் இருக்கிறார் ஷஹான்ரா கடூன் என்னும் 9 வயது சிறுமி. பள்ளியில் கழிப்பறை வசதி இல்லாததால், ஒவ்வொரு நாளும் இயற்கை உபாதையை கழிக்க வழியில்லாமல் நான் அதை அடக்கிக் கொண்டு வீட்டுக்கு வந்து நிம்மதி அடைவேன். இப்போது எங்கள் எல்லோருக்கும் நிவாரணம் கிடைத்துள்ளது. பள்ளியில் கழிப்பறை இருப்பதால் நாங்கள் இனி எவ்வளவு தண்ணீர் வேண்டுமானாலும் குடிக்கலாம். விளையாடிவிட்டு அழுக்குபடிந்த கை, கால்களை கழுவிக்கொள்ளவும் முடியும். ரோட்டரி அதற்காக கை கழுவும் வசதியை செய்து கொடுத்துள்ளது என்றார். மூர்ஷிதாபாதில் 20 சதவீதத்துக்கும் குறைவான பள்ளிகளில் பெண்களுக்கு என தனி கழிப்பறை வசதி உள்ளது. ஒரே கழிப்பறையை ஆண்களும், பெண்களும் பயன்படுத்த வேண்டியிருந்ததாலும், அவை பராமரிப்பின்றி மோசமாக இருந்ததாலும் பள்ளிகளின் பெண்களின் வருகை மிகவும் குறைவாகவே இருந்தது என்கிறார் தந்தானியா.

இதில் முக்கியமான அம்சம் என்னவென்றால், மாணவர்களுக்கு பள்ளிகளில் சுகாதார பயிற்சி அளிக்கப்பட்டதால் அவர்களின் செயல்பாட்டிலும் திட்டம் மாற்றத்தை ஏற்படுத்தியது. சோப்புகளைக் கொண்டு கை கழுவுவது, கழிப்பறை பயன்படுத்திய பின் தண்ணீர் ஊற்றுவது, தனிப்பட்ட சுகாதாரம், மற்றும் கழிவு மேலாண்மை போன்றவற்றில் பள்ளிக் குழந்தைகளுக்கு வேடிக்கையான செயல்பாடுகள், கதை சொல்லுதல் மற்றும் கலந்துரையாடல் மூலம் பயிற்சி அளிக்கப்பட்டது.

சாரதாபள்ளி இலவச அரசு பள்ளியைச் சேர்ந்த ஆசிரியர் ஒருவர், இந்த திட்டம் எப்படி பள்ளிக் குழந்தைகளின் நடத்தையில் மாற்றத்தை ஏற்படுத்தியது என்று விவரித்தார். முன்பு மாணவர்கள் கைகளை தண்ணீரில் கழுவிவிட்டு, அணிந்திருக்கும் சட்டையிலேயே துடைத்துக் கொள்வார்கள். ஆனால், இப்போது WASH திட்டம் அறிமுகமான பிறகு, அவர்கள் சோப்புகளை கேட்டு வாங்குவதுடன், கைகளையும் முறையாக கழுவுகின்றனர் என்றார்.

பராய் பாலிகா வித்யாலயா பள்ளித் தலைமை ஆசிரியை நிடா டே WASH திட்டத்தில் ஆர்வம் காட்ட பள்ளி ஊழியர்களை மட்டுமல்லாமல், மாணவர்களின் பெற்றொர்களை எப்படி ஊக்கப்படுத்

PRIP சேகர் மேத்தா பள்ளி ஒன்றில் WASH வசதியை திறந்து வைக்கிறார். PDGகள் ரவீந்திர பிரகாஷ் சேகல் (இடமிருந்து இரண்டாவது) மற்றும் பிரபீர் சாட்டர்ஜியும் (இடமிருந்து மூன்றாவது) உள்ளனர்.

தினார் என்பதை தந்தானியா பகிர்ந்துகொண்டார். பள்ளியில் சில சமயங்களில் சோப்பு உள்ளிட்ட தூய்மை உபகரணங்களுக்குப் பற்றாக்குறை ஏற்படும், நிடா தனது சொந்த பணத்திலிருந்து சோப்புகளை வாங்கி வைப்பார். இதை ஆசிரியர்களும் பின்பற்றினர். இப்போது நாங்கள் சோப்பு வங்கி ஏற்படுத்தியுள்ளோம். மாணவர்கள், பெற்றோர்கள், பள்ளி ஊழியர்கள் சோப்பு மற்றும் இதர தூய்மைப் பொருள்களை வாங்கித் தருகின்றனர். மாணவர்கள் தங்களது பிறந்தநாளை கொண்டாடும் தினத்தில் சோப்பு வாங்கித் தருகின்றனர் என்றார்.

ஒரு வகுப்பறையில் கழிவுப் பிரிவினை பற்றிய ஊடாடும் அமர்வு.

சுகாதாரம் மற்றும் MHM

காளிகாட் கோயிலை ஒட்டியுள்ள மேனிலைப் பள்ளியான மகாகாளி பாடசாலையில் மாணவிகள் மாதவிடாய் சுகாதாரம் பற்றி பேசுவதற்கே தயங்குவார்கள். பயிற்சியாளர்கள் தங்கள் சொந்த அனுபவங்களை விவரித்தபோது தடையை உடைத்தனர். அதன் பிறகுதான் பெண்கள் நம்பிக்கையுடன் பேசினர். சானிடரி பேடுகளின் பயன்பாடு, அதை அகற்றுவது, தங்களுக்கு ஏற்படும் பிரச்னைகள் குறித்து பேசத் தொடங்கினார்கள். இப்போது அந்தப் பள்ளியில் சானிடரி பேடுகள் வழங்கும் தானியங்கி இயந்திரம், உபயோகித்த பேடுகளை எரிக்க எரியூட்டி (இன்சினரேட்டர்) ஆகியவை நிறுவப் பட்டுள்ளன. பெண்கள், தங்களுக்குத் தேவைப்படும்போது நாணயத்தை போட்டு சானிடரி பேடுகளை எடுத்துக் கொள்ளும் அளவுக்கு முன்னேறியுள்ளனர்.

இதேபோல புர்ராபஜாரில் உள்ள ஸ்ரீ மகேஸ்வரி வித்யாலயா மேனிலைப் பள்ளியில் மாணவர்கள் தங்கள் வகுப்புக்கான குப்பைத் தொட்டிகளை அவர்களே தயாரிக்கின்றனர். ஒவ்வொரு வகுப்பிலும் இரண்டு குப்பைத் தொட்டிகள் உள்ளன. ஒன்றில் மக்கும் பொருள்களும் மற்றொன்றில் பிளாஸ்டிக் போன்ற மக்காத பொருள்களும் போடப்படுகின்றன.

சர்வதேச மானிய உதவி திட்டமான WASH திட்டத்தின் ஆண்கள் மற்றும் பெண்களுக்கான 35 கழிப்பறை தொகுதிகள், 21 கை கழுவும் நிலையங்கள், 18 குடிநீர் நிலையங்கள், 9 சானிடரி பேடு வழங்கும் தானியங்கி இயந்திரங்கள் மற்றும் எரியூட்டிகள் நிறுவப்பட்டுள்ளன. பேளூர் ரோட்டரி சங்கம் தலைமையேற்று செயல்படுத்தும் இத்திட்டத்தில் கொல்கத்தா சௌரங்கி ரோட்டரி சங்கம், கொல்கத்தா வடக்கு புறநகர், சந்தனர் நகர் மற்றும் அமெரிக்காவின் டான்வில்லி சைகமோர் பள்ளத்தாக்கு, டான்வில்லி, ரிச்மாண்ட், அலமோ, சான் ராமன், சான் ராமண்ட் பள்ளத்தாக்கு உள்ளிட்ட ரோட்டரி சங்கங்களும் இணைந்துள்ளன.■

ஒரு பள்ளியில் நிறுவப்பட்ட கை கழுவும் நிலையத்தைப் பயன்படுத்தும் மாணவர்கள்.

மீட்க்கப்பட்ட பெண்களுக்கு திறனளித்தல்

ரஷீதா பகத்

இத்திட்டம், ரோட்டரியின் முக்கிய சித்தாந்தமான DEI-பன்முகத்தன்மை, ஈக்விட்டி மற்றும் உள்ளடக்கம் ஆகியவற்றுடன் வெகுவாக பொருந்தும் திட்டமாகும். RC பம்பாய் ஏர்போர்ட் முன்னாள் தலைவர் ராஜேஷ் அகர்வாலின் தீவிர முயற்சியுடன், இரண்டு பெருநிறுவன ஜாம்பவான்களான வேதாந்தா அறக்கட்டளை மற்றும் D-Link அகாடமியின் நீண்டகால ஆதரவுடன் - மும்பை நகரத்தின் விபச்சார வர்த்தகத்தில் இருந்து மீட்கப்பட்ட 20 இளம் பெண்களுக்காக (14 முதல் 24 ஆண்டுகள் வரை) ஒரு அரிய சமூக முயற்சி தொடங்கப்பட்டுள்ளது.

கேய்ம் அறக்கட்டளையுடன் இணைந்து பணியாற்றும், RI மாவட்டம் 3141-ன் தலைமைப் பயிற்சி மற்றும் கற்றல் வசதியாளரான ரோட்டேரியர், கேய்ம் அறக்கட்டளையில் நிறுவப்பட்ட கணினி திறன் மையம் போரிவலியில் செயல்படுவதை வெற்றிகரமாக உறுதி செய்துள்ளார். முதலில், அதில் இந்த பெண்களுக்கு அடிப்படை கணினி திறன்கள் வழங்கப்படும். ரோட்டரி நியூஸ் நிறுவனத்திடம் இந்தத் திட்டம் குறித்த விவரங்களை அளித்த அகர்வால், இந்தப் பெண்களுக்கு கணினி பற்றி மிகக் குறைவாகவே தெரியும்; ஏறக்குறைய அவர்கள் அனைவரும் பள்ளிப் படிப்பை பாதியில் விட்டு வெளியேறியவர்கள் மற்றும் கணினியை எவ்வாறு இயக்குவது என்று கூட தெரியாது. எனவே, பயிற்சியாளர்கள் மூலம் கணினி படிப்பை கற்றுக்கொடுக்கின்றோம்.

இந்த சிறுமிகள், சிறப்பு நடவடிக்கைகளின் மூலம் காவல் துறையினரால் மீட்கப்பட்டு கேய்ம் அறக்கட்டளையிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளனர். கேய்மின் நோக்கம்

மனித கடத்தலில் இருந்து காப்பாற்றப்பட்ட பெண்களுக்கான தொழிற்பயிற்சி நடைபெறுகிறது.

மனித கடத்தலில் இருந்து மீட்கப்பட்டவர்களுக்கு மறுவாழ்வு தருவதாகும். அறக்கட்டளையின் வலைத்தளத்தின்படி, அவ்வாறு மீட்கப்பட்ட ஒவ்வொருவரும் மூன்று வருட மறுவாழ்வு திட்டத்தின் மூலம் பாதுகாப்பான மற்றும் நல்ல முடிவுகளை எடுக்க ஊக்குவிக்கப்படுகிறார்கள், மேலும் ஒழுக்கமான வாழ் வாதாரத்தை சம்பாதிக்க பயிற்சியளிக்கப் படுகிறார்கள். ''மனித கடத்தலில் இருந்து தப்பியவர்களுக்கு மறுவாழ்வு தருவது மட்டுமல்லாமல், மதம், ஜாதி அல்லது பாலினம் ஆகியவற்றைப் பொருட்படுத்தாமல், பிற்படுத்தப்பட்டவர்கள், ஏழைகள், பின்தங்கியவர்களின் நலனையும் நாங்கள் மேம்படுத்துகிறோம்'' என்று அந்த வலைத்தளம் மேலும் கூறுகிறது.

அகர்வால் கூறுகையில், பல ஆண்டுகளாக அவர் கவனம் செலுத்தி வரும் அந்த தொடர் திட்டத்தின் ஒரு தனித்துவமான அம்சம், என்னவெனில் ''இந்த திட்டத்திற்காக ஆதரவளிக்கும் சங்கம் ஒரு ரூபாய் கூட செலவழிக்க வேண்டியதில்லை.'' ஏனென்றால், இந்த சமூக முன்முயற்சிக்குத் தேவையான பெருந்தொகை அனைத்தும் CSR மூலம் இரண்டு கார்ப்பரேட் நிறுவனங்களிடமிருந்தும் வருகின்றன.

வன்பொருள், மென்பொருள், பயிற்சியாளர்கள் மற்றும் பயிற்சி வசதிகளை வேதாந்தா மற்றும் டி-லிங்க் வழங்கும். பிரபுல் சர்மா கவர்னராக இருந்த போது, நாங்கள் இதுபோன்ற 20 மையங்களை தொடங்கி இருந்தார். இந்த இரண்டு நிறுவனங்களும் இது போன்ற பயிற்சிகளை தங்கள் CSR நடவடிக்கையாக மேற்கொள்கின்றன என்பதை அந்த நேரத்தில் அறிந்த பிறகு நான் இந்த மூலோபாய கூட்டாண்மையை ஒன்றாக இணைத்தேன். 2017ம் ஆண்டில், அவர் ஒருமுறை மும்பையில் உள்ள MTNL அலுவலகத்தில் அமர்ந்திருந்த போது, ஒரு D-Link பலகையை பார்த்ததாகவும், அதில் மக்களுக்கு வேலை கிடைக்கும் வகையில் பயிற்சி அளிக்கப் போவதாக கூறியிருந்ததாகவும் அவர் நினைவு கூர்ந்தார். "எனவே நான் ஒரு D-Link நிர்வாகியை அழைத்தேன், அந்த நேரத்திலிருந்து நாங்கள் அவர்களுடன் இந்த கூட்டாண்மை செய்கிறோம்."

மனித கடத்தலில் இருந்து மீட்கப்பட்ட இளம் பெண்கள், எந்தெந்த நகரங்களில் இருந்து வருகிறார்கள் போன்றவற்றைப் பற்றி அகர்வால் கூறுகையில், இது மிகவும் உணர்ச்சிகரமான பிரச்சினை மற்றும் சமூகத்தில் பல விரும்பத்தகாத நபர்கள் இருப்பதாலும், அவர்கள் இவர்களை சுரண்டி பயனடைய விரும்புவதாலும், அப்பெண் களுடன் தொடர்பு கொள்ளவும், அவர்களை பற்றிய விவரங்களை கேட்கவும் அல்லது அவர்களின் புகைப்படங்களை எடுக்கவும் அனுமதிக்கப்படுவதில்லை. நான் பல முறை அங்கு சென்றிருக்கிறேன், ஆனால் 10 முதல் 15 அடி தூரத்தில் இருந்து மட்டுமே அப்பெண்களிடம் வணக்கம் சொல்வேன். மக்களை அவர்களுடன் பேச அனுமதித்தால், அவர்களுக்கு எல்லா வகையான அறிவுரைகளும் வழங்கப்படும், இது விரும்பத்தகாதது, ஏனெனில் அப்பெண்கள் யாருக்கும் தங்கள்



கடந்த காலத்தை பற்றி நினைத்துப் பார்க்க விரும்புவதில்லை.

ஆனால் சமூக சேவகர்கள் மற்றும் தன்னார்வ தொண்டு நிறுவனங்களின் பிரதிநிதிகளிடமிருந்து அந்த மீட்கப்பட்ட பெண்களைப் பற்றி அவர்கள் கேள்விப்பட்ட சில இதயத்தை உருக்கும் கதைகளைப் பகிர்ந்து கொண்டனர். மிகவும் அழகான ஒரு பெண், மும்பையில் காவல்துறையினரால் மீட்கப்படுவதற்கு முன்பு, நான்கு வெவ்வேறு நகரங்களில் நான்கு விபச்சார விடுதிகளில் இருந்ததாக அவர் கூறுகிறார். மற்றொரு வழக்கில், ஒரு சிறிய நகரத்தில், ஒரு பெண் மாலையில் தனது வீட்டை விட்டு வெளியேறியபோது, அவள் நான்கு ஆண்களால் கற்பழிக்கப்பட்டார். அவருடைய குடும்பம் அவரை நிராகரித்தது; நான் உன்னை மும்பைக்கு அழைத்துச் சென்று உனக்கு வேலை வாங்கித் தருகிறேன் என்று யாரோ அவரிடம் கூறியுள்ளனர், இறுதியில் அவர் மும்பைக்கு கடத்தப்பட்டுள்ளார்.

ரோட்டேரியர்கள் பல தன்னார்வ தொண்டு நிறுவனங்களுடன் இணைந்து பணியாற்றுகின்றனர் என்றும், இதுவரை மனித கடத்தலில் இருந்து தப்பியவர்கள் 200 பேருக்கு மறுவாழ்வு அளிக்க உதவியுள்ளதாகவும், அவர்களுக்கு பல்வேறு பகுதிகளில் வேலை கிடைக்க உதவியுள்ளதாகவும் அவர் கூறுகிறார். பெரும்பாலும் கிராமங்களில் உள்ள இத்தகைய மையங்கள் மூலம் வழங்கப்படும் திறன்களில் தையல் மற்றும் பலவிதமான கைவினைப்பொருட்கள் தயாரிப்பு ஆகியவை அடங்கும். ஒரு வழக்கமான பயிற்சி வகுப்பு சுமார் எட்டு வாரங்கள் நீடிக்கும்.

இந்த இரு கார்ப்பரேட் ஜாம்பவான்களுடனான கூட்டு முயற்சியின் மூலம் ரோட்டேரியர்கள் குறைந்த பட்சம் சில கோடி ரூபாய் மதிப்பை ஈட்ட முடிந்தது என்று அவர் மதிப்பிடுகிறார். கடந்த சில ஆண்டுகளாக பல்வேறு தொகுதி இளைஞர்களுக்கு பல்வேறு வகையான திறன்கள் மற்றும் பயிற்சிகள் வழங்க நாங்கள் பெற்றுள்ள அனைத்து கூறுகள் மூலமாகவும் ரூ.9 கோடிக்கு மேல் ஈட்டியுள்ளோம் என்று அவர் கூறுகிறார்

அடுத்ததாக ஆள் கடத்தலில் இருந்து மீட்கப்பட்ட பெண்களுக்கு அழகுக்கலை பயிற்சி அளிக்கும் திட்டத்தை அவர் திட்டமிட்டுள்ளார். அர்பன் கிளாப் அல்லது அர்பன் கம்பெனி போன்ற சேவை வழங்குநர்களுடன் அவர்கள் பதிவுசெய்யப்படலாம் அல்லது இணைக்கப்படலாம், மேலும் ''அவர்கள் சேவை வழங்க வெளியே செல்லும்போது, அவர்களின் பின்னணி யாருக்கும் தெரியாது, அதனால் அவர்களை அவமானப்படுத்தவோ அல்லது சங்கடப்படுத்தவோ முடியாது,'' என்று அவர் மேலும் கூறுகிறார்.■

(வலமிருந்து): DGE *சேத்தன் தேசாய்,* RC *பாம்பே ஏர்போர்ட் முன்னாள் தலைவர் ராஜேஷ் அகர்வால், தலைவர் அக்ஷய் மேத்தா மற்றும் ரிஸ்வான், வேதாந்தா அறக்கட்டளை, பயிற்சியாளர்களுடன் கணினி மையத்தில்.*

100 திறன் மேம்பாட்டு மையங்களை அமைக்கக் கை கோக்கின்றன ரோட்டரி, பாஷ்ச்

ரோட்டரி செய்திக் குழு

RID *ராஜு சுப்ரமணியன் மற்றும் குருபிரசாத் முட்லாபூர், நிர்வாக இயக்குனர்,* Bosch, DG *ஸ்ரீனிவாஸ் மூர்த்தி,* IPDG *ஜீதேந்திர அனேஜா மற்றும்* PDG *நாகேஷ்.*

பெங்களூரில் RI இயக்குநர் ராஜு சுப்ரமணியனும் பாஷ்ச் லிமிட்டெட் மேலாண்மை இயக்குநர் குருபிரசாத் முட்லபூரும் இந்தியாவின் பல பகுதிகளில் 100 திறன் மேம்பாட்டு மையங்களை அமைப்பதற்கான MoUல் கையொப்பமிட்டார்கள்.

மூன்று மாதங்கள் நடைபெறும் இந்தப் பயிற்சியானது கல்லூரியிலிருந்தோ பள்ளியிலிருந்தோ நின்று விட்டவர்களுக்கு மென் கலைகள், வாழ்க்கைக் கலைகளைக் கற்றுத் தந்து ஆற்றலளிக்கும், அவர்களுக்கு வேலை கிடைக்கும் வாய்ப்புகளை மேம்படுத்தும், பொருத்தமானவர்களை நுழைவு நிலைப்பணிகளுக்கு வேலையில் அமர்த்தும். இந்த 100 மையங்களும் சேர்ந்து ஆண்டுதோறும் 10,000 வேலை வாய்ப்புகளை உருவாக்கக் கூடும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

RID 3191 DG ஸ்ரீனிவாஸ் மூர்த்தி, IPDG ஜீதேந்திரா அனெஜா, PDG K P நாகேஷ், RC பெங்களூர் ஜங்க்ஷன் உறுப்பினர்கள், பாஷ்ச் தேசிய HR தலைவர் B R சுரேஷ், CSR தலைவர் சகினா பாகெர் உள்ளிட்ட பாஷ்ச் பிரதிநிதிகள் இந்த நிகழ்ச்சியில் கலந்துகொண்டார்கள்.■

Rotary PEOPLE OF ACTION

மன நலம் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கான பள்ளி

RC லகிம்பூர் சென்ட்ரல், RID 3120, மன நலக் குறைபாடுகளைக் கொண்ட குழந்தைகளுக்கென AASRA என்ற சிறப்புப் பள்ளி ஒன்றை நடத்துகிறது. இந்தப் பள்ளி, இந்தச் சங்கத்தின் உறுப்பினர் ஜஸ்மீத் சிங் அஜ்மானிக்குச் சொந்தமான அஜ்மானி பன்னாட்டுப் பள்ளி வளாகத்தில் நடைபெறுகிறது.

‘சுமார் 20 குழந்தைகள் பல வாழ்க்கைத் திறன்களைக் கற்கிறார்கள்’ என்கிறார் சங்கச் செயலாளர் அமித்குப்தா. பத்து ஆண்டுகளுக்கு முன் தொடங்கப்பட்ட இந்தச் சிறப்புப் பள்ளியின் பணியாளர் சம்பளம், குழந்தைகள், பணியாளர்களுக்கான மதிய உணவு, குழந்தைகள் வீட்டிலிருந்து வந்து திரும்பும் பேருந்து ஆகியவற்றை வழங்கி இந்தச் சங்கம் ஆதரித்துவருகிறது.■

DG *சுனில் பன்சால்* AASRA *பள்ளியில் ஒரு குழந்தையுடன்.*

Rotary
District 3212

CREATE HOPE in the WORLD

ROTARY CLUB OF VIRUDHUNAGAR
District- 3212
PARIKSHAN CHARITABLE TRUST

Rtn. Gordon R. McInally
RI President

Rtn. Er. R. Muthiah Pillai
District Governor

VIGYAN RATH

Science made easy

SUCCESSFUL JOURNEY OF SCIENCE ON WHEELS

CROSSING OVER
435
PROGRAMS
ALL OVER TAMILNADU

Do you want

to have Vignana Ratham travelling to a school in your Town / City / District?
We would love to partnerwith you in this mission.

VIGYAN RATH 435 PROGRAMS STATISTICS AS ON 02.11.2023

PARIKSHAN CHARITABLE TRUST
Empowering society through science...

ADVT.

Total No. of Schools Visited **421**

Total No. of Colleges Visited **14**

Total No.of Students Explored **1,34,396**

Total No. of Days Travelled **312**

Total No. of Teachers Participated **5,639**

Total No. of Kilometres Travelled **23,073**

Started running First Program on : 12.10.2021
Crossing 435th Program on : 2.11.2023

The idea of Vignana Ratham is to kindle student's interest towards Science. It is to aid students in understanding the magic of Science through creative and fun-filled experiments. RID 3212 wondered how good it would be to take the best brains to institutions in all corners of Tamil Nadu. As a result, a tie-up was made with Parikshan Trust of an Indian Scientist, Dr. Pasupathy. Mr. Arivarasan, Mr. Naveen Kumar and Mr. Satheesh were assigned to travel in Vignana Ratham and meet students of various schools every day. Numerous students benefit out of this programme and we believe that we have seeded the fervor required to bring out a Scientist from every institution we visited.

IDHAYAM
PROMISE OF HEALTH AND HAPPINESS

GET IN TOUCH WITH US

Project Chairman
Rtn. R.VADIVEL
94422 48586

Project Concept
Dr. Pasupathy

தகனக் கூடம் மற்றும் பல்லுயிர் பூங்காவை உருவாக்கிய RC நீல்கிரிஸ்

ரஷீதா பகத்

குன்னூர் நகரின் குளிர்ச்சியான சுற்றுவட்டாரத்தில் அமைந்துள்ள RC நீல்கிரிஸ், RID 3203-ன் பழமையான ரோட்டரி சங்கமாகும். 1941-ல் தொடங்கப்பட்டது. RC நீல்கிரிஸ் பல முக்கியமான திட்டங்களை மேற்கொள்வதன் மூலம் அதன் அற்புதமான வரலாற்றை தொடர்கிறது. அதன் குறிப்பிடத்தக்க திட்டங்களில் ஒன்று நீலகிரி மாவட்டம் பெட்டட்டியில் உள்ள ஊராட்சி நடுநிலைப் பள்ளியை ரூ.51 லட்சம் செலவில் புதுப்பித்து, நவீனமயமாக்கி, புரட்சிகரமாக மாற்றியது. அது குறித்து சில மாதங்களுக்கு முன்பு இதழில் வெளியானது.

குன்னூரில் டயாலிசிஸ் மையத்தை அமைத்தல், நடமாடும் ICU மற்றும் எரிவாயு மூலம் தகனம் செய்யும் கூடம் ஆகியவை இந்த சங்கம் செய்த மற்ற குறிப்பிடத்தக்க திட்டங்களில் அடங்கும். அரசு லாலி மருத்துவமனையில் ரூ.2 கோடியில் மரணவலி தணிப்புச் சிகிச்சை மையம் மற்றும் முதியோர் பிரிவு ஆகியவை கட்டும் பணி நடைபெற்று வருகிறது.

ரோட்டரி தகனக் கூடம் திட்டத்தை முன்னின்று நடத்திய இரண்டு முன்னாள் தலைவர்களான லெப்டினன்ட் ஜெனரல் (ஓய்வு) M G கிரிஷ் மற்றும் விஜய தார் உட்பட சங்கத்தின் மூத்த ரோட்டேரியர்கள் குழுவுடன் இணைந்து சென்று அந்த அழகிய தகன அமைப்பை நான் பார்வையிட்டேன். வில்லிங்டன் கன்டோன்மென்ட் போர்டு இத்திட்டத்திற்காக வழங்கிய 2.5 ஏக்கர் நிலப்பரப்பில் RC நீலகிரியால் இந்த தகனக்கூடம் 2005-ம் ஆண்டில் அமைக்கப்படுவதற்கு முன் குன்னூரில் கட்டைகளை வைத்து எரிக்கும் ஒரே ஒரு சுடுகாடு மட்டுமே இருந்தது, அதுவும் பாழடைந்த நிலையில் இருந்தது என்று ஜெனரல் கிரீஷ் என்னிடம் கூறினார். 2005-ம் ஆண்டில் எரிவாயு மூலம் எரியும் தகனக்கூடம் அமைக்கும் திட்டம் சங்கம் மூலம் எடுக்கப்பட்டது மற்றும் நகரத்தில் உள்ள பல்வேறு

Lt. Gen M G கிரிஷ்

சங்கத்தின் முன்னாள் தலைவர் BC குமார், விஜயகுமார் டார், கிரிஷ், சங்கத்தலைவர் CHN குமார் மற்றும் சார்லஸ் நாதன்.

நன்கொடையாளர்களிடமிருந்து 40 லட்சம் ரூபாய் நிதி சேகரிக்கப்பட்டது.

முன்னதாக RC உதகமண்டலம் இந்த திட்டத்தில் பங்குதாரராக இருந்தது, ஆனால் பின்னர் விலகியது. 2005-ம் ஆண்டு LPG எரி வாயு உலையுடன் தகனக்கூடம் செயல்படத் தொடங்கியது.

LPG போன்ற பொருட்களின் விலை எப்போதும் உயர்ந்து கொண்டே இருந்தும், நாங்கள் மிகக் குறைந்த தொகையை (ரூ.2,000) மட்டுமே வசூலித்துக் கொண்டிருந்தோம் மற்றும் துரதிர்ஷ்டவசமாக, யாரும் எந்த ஆதரவையும் வழங்கவில்லை. அதை இயக்குவதற்கு போதுமான நிதி திரட்டுவதை தனிப்பட்ட சவாலாக எடுத்துக்கொண்டு, உள்ளூர் மக்களிடம் இருந்து ரூ.15 லட்சம் வசூலித்தேன், என்றார் கிரிஷ்.

அந்த பணம் தகனக்கூடத்தை சரிசெய்து புதுப்பிக்கவும், சிம்னி மற்றும் தோட்டம் அமைக்கவும் பயன்படுத்தப்பட்டது, ஆனால் அது இன்னும் போதுமானதாக இல்லை. விலை 9,000 ரூபாயாக மாற்றியமைக்கப்பட்டது மற்றும் மைக்ரோலேண்டிலிருந்து (ரூ.20 லட்சம்) CSR நிதி கொண்டு வரப்பட்டது.

தகனக்கூடத்தில் இப்போது 16 LPG சிலிண்டர்கள் உள்ளன என்று ஜெனரல் கிரிஷ் விளக்குகிறார்; ஒவ்வொரு உடலுக்கும் ஒரு சிலிண்டர் பயன் படுத்தப்படுகிறது மற்றும் ஒரு மணி நேரத்தில் தகனம் செய்யப்படுகிறது.

பல்லுயிர் பூங்கா

குடும்ப உறுப்பினர்கள் அமரக்கூடிய அல்லது தகனம் செய்யும் போது பிரார்த்தனை அல்லது நினைவூட்டல் கூட்டத்தை நடத்தக்கூடிய ஒரு ஓய்வறையை உருவாக்கவும். ஒரு பல்லுயிர் பூங்கா அமைக்கவும் சங்கம் திட்டமிட்டுள்ளது.

ஜெனரல் கிரிஷ் என்னை மற்றொரு சங்க உறுப்பினரான சார்லஸ் நாதனிடம் அறிமுகப் படுத்தினார். அவர், இயற்கை, பறவைகள், தேனீக்கள், மரங்கள், தாவரங்கள் மற்றும் விலங்குகள் பற்றி நன்கு அறிந்தவர். அவர் ஆப்பிரிக்காவில் 20 நீண்ட ஆண்டுகளை கழித்துள்ளார், மேலும் இந்த இடத்தை பல்லுயிர் பூங்காவாக மாற்ற முன்வந்துள்ளார்.

2006-ல் இந்திய ராணுவத்தில் இருந்து ஓய்வுபெற்ற தன்னை "புதைபடிவம்" என்று வழக்கமான ராணுவ நகைச்சுவையில் சொல்லிக் கொள்ளும் ஜெனரல் கிரீஷ், இரண்டு முறை சங்கத் தலைவராக இருந்துள்ளார். உதக மண்டலத்தில் உள்ளவர்கள் கூட இந்த சேவையைப் பயன்படுத்து கிறார்கள் என்றும், கட்டணம் செலுத்த முடியாதவர்களுக்கு ரோட்டேரியர்கள் பணத்தை திரட்டுகிறார்கள் என்றும் கூறுகிறார். எனவே குன்னூரில் உள்ள பெரும் பணம்படைத்த எஸ்டேட் உரிமையாளராக இருந்தாலும் சரி, அல்லது தெருவோர ஏழையாக இருந்தாலும் சரி, அவர்கள் அனைவருக்கும் ஒரே மாதிரியான தகனம் தான் இங்கே கிடைக்கும். கோவிட் காலத்தில், ஒரு நாளைக்கு குறைந்தது மூன்று தகனங்கள் இங்கு நடந்தன.

பறவைகளால் இந்த இடம் மிகவும் பரபரப்பாக இருப்பதாகவும், சில மயில்கள் அடிக்கடி வந்து செல்வதாகவும், இப்போது கூடு கட்டும் காலம் என்றும் நாதன் கூறுகிறார்.

வண்ணத்துப்பூச்சிகளை ஈர்க்கும் சில செடிகள் மசினகுடியில் உள்ள ஜங்கிள் லாட்ஜில் இருந்து கொண்டுவரப்பட்டு இங்கு நடப்படும்.

இதையெல்லாம் நாதன் விளக்கும்போது, ஒரு தொழிலாளி காளி, சிறு பட்டாம்பூச்சி முதன் முறையாக சிறகுகளை விரித்து பறந்து சென்றதை கண்டு வியந்து மயங்கியதை விவரிக்கிறார்! அணில், கீரிப்பிள்ளை, முள்ளம்பன்றிகள், குரைக்கும் மான் ஆகியவற்றை தவிர கரடியும் இங்கு வருகின்றன; "நாங்கள் கரடியைப் பார்க்கவில்லை, ஆனால் அதனின் தெளிவான அடையாளங்கள்

அரசு லாலி மருத்துவமனையில் டயாலிஸஸ் மையம்.

இங்கு உள்ளன'' என்று நாதன் மேலும் கூறுகிறார்.

சங்கத்தின் திட்டங்களுக்கு CSR நிதியைப் பெற உதவிய விஜயா டாருக்கு ஜெனரல் கிரீஷ் நன்றி தெரிவித்தார்.

நடமாடும் ICU

இந்த ஆண்டின் தொடக்கத்தில், ஆகஸ்டில், RC நீலகிரிஸ் ஒரு மேம்பட்ட உயிர்காப்பு அவசர ஊர்தியை அறிமுகப்படுத்தியது, இது நடமாடும் இருதய சிகிச்சை ICU ஆகும். "எங்களிடம் ஒரு ஓட்டுநர் மற்றும் ஒரு துணை மருத்துவர் உள்ளனர், மேலும் உள்ளூர் மருத்துவமனை மேம் பட்ட மருத்துவ சிகிச்சைக் காக நகரத்திற்கு நோயாளியை அனுப்ப வேண்டியிருக்கும் போது - முக்கியமாக கோயம்புத்தூருக்கு, இந்த நன்கு பொருத்தப்பட்ட ஆம்புலன்ஸ் அவர்களுக்கு கொடுக்கப்படுகிறது'' என்று இத்திட்ட செலவிற்காக கோடக் மஹிந்திரா வங்கியில் இருந்து CSR நிதியைப் பெற உதவிய டார் கூறுகிறார்.

முன்னதாக, லாலி அரசு மருத்துவமனையில் ரூ.5 லட்சம் செலவில் கோல்ஃப் வண்டி ஒன்றை வழங்கினர். இந்த மருத்துவமனையும் மலைகளில் உள்ள பெரும்பாலான கட்டிடங்கள் போல, மலைசரிவின் பல நிலைகளில் அமைந்துள்ளது. இந்த பேட்டரி மூலம் இயக்கப்படும் வாகனம் நோயாளிகளையும் அவர்களது உறவினர்களையும் ஒரு பகுதியிலிருந்து இருந்து மற்றொரு பகுதிக்கு கொண்டு செல்ல முடியும்.

"குன்னூரில் டயாலிசிஸ் வசதி இல்லாததாலும், டயாலிசிஸ் தேவைப்படும் ஏழைகள் ஒவ்வொரு முறையும் கோவைக்கு செல்ல முடியாமல் இறக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டதாலும், இரண்டு ஆண்டுகளுக்கு முன் டயாலிசிஸ் பிரிவு ஒன்றை அமைத்தோம்.இந்த திட்டத்தை நாங்கள் நீண்ட நாட்களாக திட்டமிட்டு இருந்தோம் ஆனால் எந்த மருத்துவமனையின் ஆதரவும் எங்களுக்கு கிடைக்கவில்லை. எங்களால் அதை அமைக்க மட்டுமே முடியும், நிபுணர்கள் இல்லாமல் அத்தகைய பிரிவை இயக்கமுடியாது.

ஆனால் ஒரு நாள், அரசு லாலி மருத்துவமனை முதன்மை மருத்துவ அதிகாரி உடனான உரையாடலில், அவர் அவர்களுக்கு ஒரு கூடத்தை கொடுக்க முன்வந்த போது, மைக்ரோலேண்ட் மற்றும் சாஞ்செட்டி ஃபேர்ஃபாக்ஸ் நிதியுதவியுடன் ரூ.70 லட்சம் செலவில் ஆறு இயந்திரங்களுடன் ஒரு வசதி அமைக்கப்பட்டது. "அங்கே நாங்கள் அதிநவீன இயந்திரங்களை நிறுவியுள்ளோம், பணம் செலுத்தக்கூடியவர்களுக்கு அரசாங்கம் 500 ரூபாய் மட்டுமே வசூலிக்கிறது, மேலும் முடியாதவர்களுக்கு கட்டணம் எதுவும் வசூலிக்கப்படுவதில்லை'' என்று டார் மேலும் கூறுகிறார்.

லாலி மருத்துவமனையில், வெளி நோயாளிகள் பிரிவு மற்றும் பல் மருத்துவப்பிரிவையும் சங்கம் அமைத்துள்ளது, மேலும் இப்போது மீண்டும் CSR நிதியில் ரூ.2 கோடி செலவில் மரணவலி தணிப்புச் சிகிச்சை மற்றும் முதியோர் பராமரிப்புப் பிரிவை அமைக்க திட்டமிட்டுள்ளது. "நாங்கள் கார்ப்பரேட் நிறுவனங்களுடன் நல்ல உறவைக் கொண்டுள்ளோம்,'' என்று புன்னகையுடன் டார் கூறுகிறார். அதே நேரத்தில் ஒரு தீவிரமான குறிப்பில்," அடிப்படையில் முக்கியமானது நம்பகத்தன்மை, நீங்கள் நிதியை சரியாகப் பயன் படுத்துகிறீர்கள் என்றும், பணம் எதுவும் திருடப்படுவதில்லை என்றும் மக்கள் நம்ப வேண்டும். உறுப்பினர்களின் பணத்தில் சங்கம் நடத்தப்படுவதால், எங்களின் தொண்டு திட்டங்களுக்கான நிர்வாகச் செலவுகள் என ஒன்றுமே இல்லை என கூறினார்.

மற்றொரு முன்னாள் தலைவரும், பெட்டட்டி பள்ளி திட்டத்தின் முக்கிய உறுப்பினருமான தீபிகா உன்னி, இந்த கட்டுரையை நான் எழுதிய அதே தினமான, குழந்தைகள் தினத்தன்று, அந்த பஞ்சாயத்து பள்ளியைச் சேர்ந்த குழந்தைகள் முழுக்க முழுக்க ஆங்கிலத்தில் நாடகம் நடத்திய வீடியோ ஒன்றை பகிர்ந்தார். பெட்டட்டி பள்ளிக் கட்டுரையில் விவரிக்கப்பட்டுள்ள படி, அனைத்து குழந்தைகளும் அவர்களின் பெற்றோர்களும் குழந்தைகள் ஆங்கிலம் கற்க வேண்டும் என்ற விருப்பத்தை வெளிப்படுத்தினர், இதனால் ரோட்டரியர்கள் ஒரு ஆங்கில ஆசிரியரின் சம்பளத்திற்காக தனி நிதியை ஒதுக்கியுள்ளனர். ஒரு ஆங்கில வழி ஆசிரியரின் தாக்கத்தை இந்தக் குழந்தைகளிடம் கற்பனை செய்து பாருங்கள். நாங்கள் மயங்கிவிட்டோம் என்று தீபிகா கருத்து தெரிவித்துள்ளார்.

அந்த காணொளியை பார்த்த நானும் அதை ஒப்புக்கொள்கிறேன்.

புகைப்படங்கள்: ரஷீதா பகத்

Rotary PEOPLE OF ACTION

உதய்பூரில் நடமாடும் திரைப்படங்கள்

கிரண் ஜெஹரா

சமீபத்தில், உதய்பூரில் பல அரசுப் பள்ளிகளுக்கு வெளியில் "நடமாடும் திரைப்படங்கள்" என்ற மிகப் பெரிய கன்டெய்னர் டிரக் நிறுத்தப்பட்டிருந்தது. இந்த டிரக் மாணவர்களுக்கிடையில் அமைதியாக ஒரு மாற்றத்தை முன்னிறுத்தியது, முற்போக்குச் சிந்தனையை வளர்த்தது. வழக்கத்துக்கு மாறான இந்த வகுப்பறையிலிருந்து வெளியில் வந்த 11 வயது மாணவர் ஷாம், "குழந்தைத் திருமணம் மோசமானது. அதேபோல், ஆண்கள் பெண்களைத் தங்களுடைய அடிமைகளைப்போல் நடத்துவதும் மோசமானது" என்றார். அவர் சற்றுமுன்புதான், பொருளுள்ள திரைப்படங்களைக் குளிர்விப்பு வசதி கொண்ட திரையரங்கத்தில், வசதியான இருக்கைகளில் அமர்ந்து, சுவையான நொறுக்குத் தீனிகளுடன் பார்த்து மகிழ்ந்திருந்தார். இவை அனைத்தும் ஒரு டிரக்குக்குள் அமைந்திருந்ததுதான் இன்னும் சிறப்பு. RC உதய்பூர் எலைட், RID 3056, வழங்கும் முன்னெடுப்பான நவ்சேத்னா திட்டம் இப்படித்தான் மாணவர்களை ஈர்க்கிறது. இதன் நோக்கம், அந்தந்தப் பகுதிகளிலும் மற்ற இடங்களிலும் உள்ள முதன்மையான சமூகப் பிரச்சனைகளைத் திரைப்படங்களின் ஆற்றல் வழியாக மாணவர்களுக்குக் கற்றுத்தருவது.

ஜெய்ப்பூர் சென்றிருந்த இந்தச் சங்கத்தின் தலைவர் விகாஸ் சர்மா சிறு திரைப்பட அரங்கமாக மாற்றப்பட்டிருந்த கன்டெய்னர் டிரக் ஒன்றைக் கண்டார். அதைப் பயன்படுத்தி" மாணவர்களுக்கு, குறிப்பாக அரசுப் பள்ளி மாணவர்களுக்குக் குழந்தைத் திருமணம், சமூக ஊடகங்களை, மொபைல் தொலைபேசிகளை முறையாகப் பயன்படுத்துதல், நல்ல மற்றும் மோசமான தொடுகை, இணையக் குற்றம் மற்றும் பாலினச் சமநிலை போன்றவற்றைப்பற்றி விழிப்புணர்வை உண்டாக்கலாம், கற்பிக்கலாம், அவர்களுக்கு மறக்க இயலாத திரைப்பட அனுபவம் ஒன்றையும் வழங்கலாம்'' என்றார்.

குழந்தைகள் தின்பண்டங்களை ரசித்து, சினிமாவில் படம் பார்க்கிறார்கள்.

இதை தொடர்ந்து சங்கம் அருகில் உள்ள பள்ளிகளை அடையாளம் கண்டு பள்ளி முதல்வர்களிடமிருந்து அனுமதி பெற்றது. அவர்கள் "தங்கள் மாணவர்களுக்குக் கிடைக்கவுள்ள இந்தத் தனித்துவமான அனுபவத்தை வரவேற்றார்கள். மாணவர்கள் இந்தப் படக்காட்சிகளை ஊக்கத்துடன் வரவேற்றார்கள், இடைவேளையின்போது நொறுக்குத் தீனிகள், பழரசங்களையும் உண்டு மகிழ்ந்தார்கள்.

இந்தத் திட்டம் நடைபெற்ற காலகட்டம்முழுவதும், ஒவ்வொரு நாளும் 3லிருந்து 4 உறுப்பினர்கள் இதில் பங்கேற்றார்கள், படக்காட்சிகள் நன்கு நடைபெறுவதை உறுதி செய்தார்கள். இந்தத் திட்டத்துக்கான ரூ.2 லட்சம் செலவு, உள்ளூர் தொழிற்சாலை உரிமையாளர்கள், சங்க உறுப்பினர்கள், மற்ற நன்கொடையாளர்களுடைய உதவியால் பெறப்பட்டது. "நடமாடும் திரைப்படங்கள் திரைப்படங்கள் மீதான அன்பையும், மாற்றத்துக்கான ஒரு பொறியையும் தூண்டி விட்டுள்ளதை" எண்ணி சர்மா மிகவும் மகிழ்கிறார்.■

ஏன் இந்தியா ஒரு சிறந்த நாடாக மாற இந்திய அணியை பின்பற்ற வேண்டும்

முடர் பத்ரேயா

உலகின் வலதுசாரி, இந்திய கிரிக்கெட் அணியில் ஒரு அசாதாரண எதிர்ப்பை சந்தித்துள்ளது. பல்வேறு காரணங்களுக்காக.

முதலாவது, இந்திய அணி பல்வேறு வகுப்புகள், சாதிகள், கலாச்சாரங்கள் மற்றும் சமூகங்களைச் சேர்ந்த பலதரப்பட்ட மக்களின் கலவையாகும். இது அனைவருக்கும் பொதுவான இன அடையாளத்தை ஊக்குவிக்கும் வலதுசாரி யோசனைக்கு எதிரானது. ரோஹித் ஷர்மா என்ற பெயர் வட இந்திய பெயர் போல இருந்தாலும் அவர் மும்பையை சேர்ந்தவர். ஸ்ரேயாஸ் ஐயரின் முன்னோர்கள் கேரளாவைச் சேர்ந்தவர்கள், ஆனால் அவர் மகாராஷ்டிராவைச் சேர்ந்தவர். K L ராகுல் மங்களூரைச் சேர்ந்தவர். ஹர்திக் பாண்டியா குஜராத்தி. சூர்யகுமார் மற்றும் குல்தீப் உத்தரபிரதேசத்தை சேர்ந்த யாதவர்கள். அஸ்வின் ஒரு தமிழ் பிராமணர். ரவீந்திர ஜடேஜா மற்றும் ஷர்துல் தாக்கூர் இருவரும் ராஜ்புட்கள் (ஆனால் வெவ்வேறு மாநிலங்களுக்காக விளையாடுகிறார்கள்). தெலுங்கானாவை சேர்ந்தவர் முகமது சிராஜ். கர்நாடகாவை சேர்ந்தவர் பிரசித் கிருஷ்ணா. முகமது ஷமி உத்தரபிரதேசத்தில் இருந்து வருபவர் (ஆனால் வங்காளத் திற்காக விளையாடுகிறார்). சுப்மான் கில் மற்றும் விராட் கோஹ்லி இருவரும் பஞ்சாபியர்கள் (ஒருவர் பஞ்சாப் அணிக்காகவும் மற்றொருவர் டெல்லிக்காகவும் விளையாடுபவர்கள்). ஒரு அணி மிகவும் மாறுபட்டதாக இருக்கும் போது, அதை எளிதில் வகைப்படுத்த முடியாது, யாரேனும் ஒருவருக்காக மட்டும் போராடாது, அனைவருக்கும், அனைத்திற்கும் போராடும். ஒரு கவிஞர் எழுதினார்: "பல்வேறு வண்ணங்கள் மற்றும் வாசனைகளின் கலவையால் தான் தோட்டத்தில் ஒரு உரையாடல் உருவாகிறது; 'நான்' மட்டும் தனியாக இருந்தால், நான் ஒன்றுமில்லை; 'நீ' மட்டும் தனியாக இருந்தால், நீ ஒன்றுமில்லை?" இப்போதைய இந்திய அணி இதன் எடுத்துக் காட்டாக கர்வத்துடன் வாழ்கிறது.

இரண்டாவது, இந்திய கிரிக்கெட் அணி உலகின் மிகப்பெரிய மக்கள் தொகைக் குழுவின் (மனித குலத்தில் ஆறில் ஒரு பங்கு) கேள்விக்கு இடமில்லாத தூதுவர். பிரேசிலில் கால்பந்து மதமாக இருக்கலாம் ஆனால் அந்த தென் அமெரிக்க நாட்டை காட்டிலும் உத்தரபிரதேசத்தில் கிரிக்கெட் பிரியர்கள் அதிகம். அமெரிக்க கால்பந்து அமெரிக்காவின் நம்பர் ஒன் விளையாட்டாக இருக்கலாம், ஆனால் இந்திய கிரிக்கெட் பிரியர்களின் எண்ணிக்கைக்கு இணையாக வர அந்த நாடு அதன் மக்கள்தொகையை நான்கு மடங்காக அதிகரிக்க வேண்டும். கூடைப்பந்து சீனாவில் மிகவும் பிரபலமான விளையாட்டாக இருக்கலாம், அந்த விளையாட்டின் ரசிகர்கள் இந்தியாவின் கிரிக்கெட் ரசிகர் எண்ணிகையில் பாதிக்கும் குறைவானதாக மதிப்பிடப்பட்டுள்ளது. இந்தியாவின் அளவு, இந்திய கிரிக்கெட் அணிக்கு ஒரு பெரிய பொறுப்பை வழங்கியுள்ளது: நன்றாக விளையாட வேண்டும் மற்றும் உலகின் மிகப்பெரிய மற்றும் மிகவும் கோரும் நிகழ்நேர பார்வையாளர்களுக்கு நன்றாக தெரியவேண்டும். இந்திய அணி கடந்த 20 வருடங்களாக இந்த நெறிமுறையை வெளிப்படையுடனும், நிலையான தாகவும் வாழ்ந்து வருகிறது; இதுவே அதன் மிகப்பெரிய மற்றும் மிகக் குறைவாக கொண்டாடப்படும் சாதனையாக இருக்கலாம்.

மூன்றாவது, இந்திய கிரிக்கெட் அணி "அரசாங்கத்தின்" தூய்மையான வடிவத்தை பிரதிநிதித்துவப்படுத்து கிறது. இந்தியப் பொது வாழ்வில் நீதித்துறை உட்பட எந்த அம்சமும் இந்த உயர்ந்த தார்மீகக் கொள்கையுடன் வாழ்வதில் சீராக இருந்திருக்க வாய்ப்பில்லை. நவீன இந்திய கிரிக்கெட்டில் ஒரு தேர்வாளர் செல்வாக்கிற்கு இணங்கி தேர்வு செய்ததாக நான் கேள்விப்பட்டதே இல்லை. தோனி (அல்லது கோஹ்லி அல்லது டெண்டுல்கர் அல்லது கங்குலி அல்லது சேவாக் அல்லது டிராவிட் அல்லது லக்ஷ்மண் அல்லது கும்ப்ளே) வேண்டுமென்றே அல்லது ஏனோதானோவென்று குறைந்த செயல்திறனுடன் விளையாடியதாக எந்த கிசுகிசுப்பும் இல்லை. பல அரசியல்வாதிகள், தொலைக்காட்சி

தொகுப்பாளர்கள், நடிகர்கள் மற்றும் தொழிலதிபர்கள் தார்மீக ரீதியில் கேள்விக்குரியவர்களாகக் கருதப்படும் ஒரு நாட்டில், இந்திய கிரிக்கெட் அணியில் இடம் பெறுவது தார்மீக சான்றிதழைப் பெறுவதற்கு சமம். உலக ஊழல் குறியீட்டில் 85வது இடத்தில் உள்ள ஒரு நாட்டில் இது ஒரு சாதனையாகும்.

நான்காவது, முந்தைய ஆயிரம் ஆண்டுக்காலத்தின் தொடக்கத்தில் இருந்து நடந்த தவறு அனைத்திற்கும் இந்தியா சிறுபான்மையினரை சவுகரியமான குற்றவாளிகளாக சுட்டிக் காட்டுகிறது என்ற கவலை வளர்ந்து வரும் நிலையில், இந்திய கிரிக்கெட் அணியில் இதற்கு நேர்மாறானது உண்மை. இந்திய அணி சிறு பான்மையினரை மரியாதையுடனும் மற்றும் அவர்களது விளையாட்டு தகுதிக்கு ஏற்றாற்போல் நடத்து கிறது. சிறுபான்மை சமூகத்தைச் சேர்ந்த இரண்டு வேகப்பந்து வீச்சாளர்கள் தங்களின் 2023 உலகக் கோப்பை செயல்திறனுக்காக பாராட்டப்படுகின்றனர், இது ஒரு கோட்பாட்டை உறுதிப்படுத்துகிறது: 'மற்ற அனைத்தைக் காட்டிலும் கிரிக்கெட் புனிதமானது'. இங்கு ஒரு பாரசீக வரியை குறிப்பிட நான் ஆசைப்படுகிறேன்: பகுதா தீவானோ பாஷோ, பா ஷமி-சிராஜ் ஹோஷியார்! (கடவுளுக்கு எதிராக நீங்கள் ஏதாவது சொல்லலாம், ஆனால் ஷமி மற்றும் சிராஜுக்கு எதிராக எதையும் சொல்ல கனவிலும் நினைக்காதீர்).

இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு, பாகிஸ்தானுக்கு எதிரான ஒரு நெருக்கமான டி20 போட்டியின் போது (இந்தியா தோல்வியடைந்தது) ஷமி "அதை வேண்டுமென்றே தோற்றதாக" இந்தியர்களில் ஒரு பிரிவினர் குற்றம் சாட்டினார்கள். பெரும்பாலான அணிகள் அந்த விமர்சனத்தை கண்டுக்கொள்ளாமல் இருந்திருக்கும். ஆனால் கோஹ்லி தன் கருத்தை தெரிவித்தார். அவரது வார்த்தைகள்: "அணிக்குள் இருக்கும் எங்கள் சகோதரத்துவம் மற்றும் நட்பு, அதை எவராலும் அசைக்க முடியாது.' "சகோதரத்துவம்" என்ற அந்த வார்த்தையுடன் கோஹ்லி இந்தியர்களின் உணர்ச்சிகரமான மனதைத் தொட்டார். அவர் ஒற்றுமை மற்றும் ஒருமை பற்றி பேசினார். அந்த பொது அறிக்கையை யாரோ ஒருவர் "கோஹ்லியின் மிகப்பெரிய சதம்" என்று அழைத்தார்.

விராட் கோஹ்லி மற்றும் சிராஜ்.

பரிவர்த்தனைதாரர்கள் இந்த இந்திய அணியை 200 ரன்களுக்கு மேல் பெற்ற வெற்றிகளின் எண்ணிக்கையால் அளவிடுவார்கள். ஆனால் பகுத்தறிவோர் வித்தியா சமான ஒன்றை கவனிப்பார்கள்: அணி ஒன்று சேரும் போது விராட் எப்படி சிராஜின் தலையில் கை வைக்கிறார், ஷமி அவுட்ஸ்விங்கருக்குப் பிறகு ராகுல் எப்படி அவரை உற்சாகப் படுத்துகிறார், ஒரு விக்கெட்டை வீழ்த்திய பிறகு அணி எப்படி இருவரையும் கட்டியணைத்து மூழ்கடிக்கிறது மற்றும் ஷமி-சிராஜ் எப்படி பத்திரிகையாளர் சந்திப்புகளில் பாராட்டப்படுகிறார்கள். சிறுபான்மையினர் இதை உணர்வுடன் அவதானித்து வருகின்றனர்; மற்றவை அதை மேலோட்டமாக உள்வாங்கலாம். ஆனால், இந்த இரண்டு நபர்களும் "நமக்காக, இந்தியாவுக்காக" வெற்றி பெறுகிறார்கள் என்ற கருத்தை யாரும் தவறவிடவில்லை. கிரிக்கெட் நாட்டை குணப்படுத்துகிறது.

இன்னொரு நாள் சிராஜின் அடக்கமான ஹைதராபாத் வீட்டில் கோஹ்லி இருக்கும் சமூக ஊடக புகைப்படம் ஒன்றை நான் கவனித்தேன்.

இந்த படம் தொலைநோக்குப் பார்வை கொண்ட இந்தியாவின் இலட்சியத்தை பிரதிநிதித்துவப் படுத்துகிறது. ஒவ்வொரு வீரரும் சமமாக உருவாக்கப்பட்டவர்கள் என்று நம்பும் ஒரு அணியின் நேர்த்தியான நெறிமுறையால் வெவ்வேறு சமூக சுற்றுப்பாதைகள் ஒன்றாக இணைக்கப்பட்டுள்ளன. இந்த உலகக் கோப்பைக்குப் பிறகு, சிறந்த நாடுகளில் முதன்மையாக இருந்த தன் நிலையைத் திரும்ப பெறுவதற்கு இந்தியா தனது 141 கோடி மக்கள் அனைவரிடமும் இந்த நெறிமுறையை பரப்ப வேண்டும், ஆனால் மனிதநேயம் என்ற வேறு ஒரு விளையாட்டில்.

(எகனாமிக் டைம்ஸில் முதலில் வெளியிடப்பட்டது. ஆசிரியரின் அனுமதியுடன் மறுபதிப்பு செய்யப்பட்டது.)

பெண்களின் இரத்தசோகையை போக்குதல்

ஜெய்ஸ்ரீ

பல கிராமப்புற பெண்களால் சாதாரண காலகட்டத்தையும் அசாதாரண கால கட்டத்தையும் வேறுபடுத்தி பார்க்கமுடியாதது வருத்தம் அளிக்கிறது. மாதவிடாய் எவ்வளவு காலம் நீடிக்கும் என்பது அவர்களுக்குத் தெரியாது. இவர்களுக்கு கர்ப்பப்பையில் பிரச்னை இருப்பது தெரியாமல் மாதக்கணக்கில் இரத்தம் வெளியாகும். அதிக இரத்தத்தை இழப்பது அவர்களை இரத்த சோகைக்கு ஆளாக்கிவிடும். மேலும் உடலில் பல்வேறு பிரச்னைகளை ஏற்படுத்தும் என்கிறார் மகப்பேறு மருத்துவரும், சால்ட் லேக் மெட்ரோபாலிடன் ரோட்டரி சங்கத்தின் (RID 3291) உறுப் பினருமான Dr அருணா டான்டியா.

சங்கம் அதன் திட்டமான மாத்ரி ரக்ஷா (பெண்களை காப்பாற்றுதல்) மூலம் சுவிட்சர்லாந்து ரோட்டரி சங்கம் மற்றும் TRF-வுடன் $140,000 மானிய உதவியுடன் மாவட்டத்தில் 20,000 பெண்களுக்கு சிகிச்சை அளிப்பது மற்றும் விழிப்புணர்வை ஏற்படுத்தும் நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது. இந்த திட்டம் மூன்று ஆண்டுகளுக்கு முன்பு தொடங்கப்பட்டாலும், கோவிட் தொற்று காலத்தில் இடை நிறுத்தப்படவேண்டியிருந்தது.

ரோட்டரி சங்கம் அதன் RCC-க்கள் மற்றும் இதர தொண்டு நிறுவனங்களுடன் சேர்ந்து ஆகஸ்ட் மாதம் வரை மேற்கு தீதீவங்கத்தில் சுந்தரவனத்திலிருந்து நாடியா மற்றும் பாங்குரா வரை 26 சிறப்பு முகாம்களை நடத்தியுள்ளது. இந்த முகாம்களில் இதுவரை நாங்கள் 2,600 பேருக்கு பரிசோதனை நடத்தியுள்ளோம் என்கிறார் அருணா. சுவிஸ் சங்கங் களைச் சேர்ந்த 12 மருத்துவர்கள் மற்றும் TRF தொழில்நுட்ப பணியாளர்கள் இதில் கலந்துகொண்டனர்.

சுமார் 80 சதவீத பெண்களுக்கு கடுமையான இரத்த சோகை இருப்பது தெரியவந்தது. இரத்த அணுக்களின் எண்ணிக்கை 4–5 என்ற யூனிட் அளவில் குறைந்திருந்திருந்தது. (வழக்கமான குறியீட்டு எண் 12). 250 பெண்களுக்கு கர்ப்பப்பையில் பிரச்னை இருந்தது. இதன் விளைவாக இரத்தப் போக்கு இருந்தது என்று அவர் கூறினார். கர்பப்பையில் கட்டி இருந்தவர்களுக்கு அறுவைச்சிகிச்சை செய்யப்பட்டது. முகாமில் குடற்புழு நீக்க மாத்திரைகள், மற்றும் வைட்டமின் மாத்திரைகள் விநியோகிக்கப்பட்டன. ஊட்டச்சத்தின் அவசியம் குறித்து பெண்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

கிராமபுற பெண்களுக்கு RC சால்ட் லேக் மெட்ரோபாலிடன் நடத்தும் இரத்த சோகை முகாம்.

இரத்த சோகையை போக்க இரும்புச்சத்து நிறைந்த குலேகரா செடி போன்ற உள்ளூர் வளங்களைப் பயன்படுத்துவது ஒரு உத்தியாகும். இந்த செடியின் இலைகளை தண்ணீரில் கொதிக்க வைத்து சூப் செய்து சாப்பிட வேண்டும். ஒரு பதினைந்து நாட்களுக்கு தினமும் இதை குடித்து வந்தால் உடலில் ஹீமோகுளோபின் அளவு நிச்சயம் அதிகரிக்கும் என்றார் மகப்பேறு மருத்துவர் அருணா டான்டியா. மகளிர் தங்கள் வீட்டின் கொல்லைப் புறத்தில் இந்த மூலிகைச் செடிகளை வைத்திருந்ததால், இதன் மதிப்பை அறிந்திருந்ததால் உடல் ஆரோக்கியத்தை அனுபவித்தனர் என்றார் அவர்.

மருத்துவ முகாமின் சேவைகள் இரத்தசோகை சிகிச்சை யைத் தாண்டி கண்கள், எலும்புகள் மற்றும் பற்களின் ஆரோக்கியம் என விரிவடைந்தது. கிராமப்புற பொது சுகாதார நிலையங்களை நவீன பரிசோதனை வசதிகளுடன் மேம்படுத்தியது மற்றும் சுகாதார ஊழியர்களுக்கு பயிற்சியளிப்பதிலும் சங்கம் ஈடுபட்டிருந்தது. மருத்துவ வசதி இல்லாத சுந்தரவனப் பகுதியில் உள்ள ஐந்து கிராமங்களை ஒன்றிணைத்து ஒரு பொது சுகாதார மையத்தையும் ஏற்படுத்திக் கொடுத்தோம் என்றார் மருத்துவர் அருணா டான்டியா.

முகாம் நடைபெற்ற ஆறு மாதங்களுக்குப் பிறகு பெண்கள் மீண்டும் மதிப்பீடு செய்யப்பட்டனர். அவர்களில் பெரும்பாலானவர்கள் தங்கள் குறைபாடுகளிலிருந்து குணமடைந்திருந்தது எங்களுக்கு மகிழ்ச்சியை அளித்தது. இப்போது அந்த பெண்கள் ஆரோக்கியமான உணவுகளை சாப்பிடுவது மட்டுமல்லாமல், அதன் பயனை மற்றவர்களிடமும் எடுத்துக் கூறி வருகிறார்கள்.

DG ஹீராலால் யாதவ் மாத்ரி ரஷா திட்டத்தை மாவட்டத்திட்டமாக மாற்றியுள்ளார்.■

விழிப்புணர்வு ஏற்படுத்த ஒரு ஸ்கூபா டைவிங்

ரோட்டரி செய்திக்குழு

RC கல்கட்டா சவுத் சர்கிள், RID 3291-ன் உறுப்பினர் சம்யா சென்குப்தா, கடல் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த சங்கம் ஏற்பாடு செய்த "நோ ப்ளூ, நோ கிரீன்" என்ற செய்தியுடன் கடலில் ஸ்கூபா டைவிங் நிகழ்வு ஒன்றை நடத்தினார். சென்குப்தா ஒரு தொழில்முறை ஸ்கூபா டைவர் மற்றும் நீருக்கடியில் புகைப்படம் எடுக்கும் கலைஞர். அவருடன் கொல்கத்தாவைச் சேர்ந்த கௌஸ்துப் முகர்ஜியும், இந்தோனேசியாவைச் சேர்ந்த டெலோன் சுஜயாவும் பங்கேற்றனர்.

இந்தோனேசியாவின் கிழக்கு பாலி கடற்கரையில், உலகின் புகழ்பெற்ற பவள முக்கோணத்தில், இந்தியப் பெருங்கடல் பசிபிக் பெருங்கடலைச் சந்திக்கும் இடத்தில் ஸ்கூபா டைவிங் நடத்தப்பட்டது. இந்த பகுதி அதன் கடல்வாழ் பல்லுயிர் பெருக்கத்திற்கு பெயர் பெற்றது என்று சங்கத்தலைவர் ப்ரோசென்ஜித் குப்தா கூறினார்.■

RI தெற்காசிய அலுவலகத்தின் செய்தி

சாரிட்டி நேவிகேட்டரின் மிக உயர்ந்த மதிப்பீடு

அமெரிக்கத் தொண்டு நிறுவனங்களை மதிப்பிடும் சுதந்தர அமைப்பான சாரிட்டி நேவிகேட்டரின் மிக உயர்ந்த மதிப்பீடாகிய நான்கு நட்சத்திரங்களைத் தொடர்ந்து 15வது ஆண்டாகப் பெற்றுள்ளது TRF.

சங்கம் அல்லது சங்க உறுப்பினர்கள் சார்பாக இணையத்தில் வழங்குங்கள்

சங்கத் தலைவர், அறக்கட்டளைத் தலைவர், உறுப்பினர் தலைவர், செயல்பாட்டுச் செயலாளர்/இயக்குநர், செயலாளர், பொருளாளர் போன்ற அனைத்துச் சங்க அலுவலர்களும், தங்களுடைய My Rotary கணக்கின் வழியாக, தங்கள் credit/debit card அல்லது இணைய வங்கிச் சேவைத் தளத்தைக் கொண்டு, தங்கள் சங்க உறுப்பினர்கள் சார்பாக இணையப் பங்களிப்புகளை வழங்கலாம். இந்தப் பங்களிப்புகள் அந்தந்த உறுப்பினர்கள் பெயரில் சேர்க்கப்படும். ஆனால், 80G ரசீது, பணம் செலுத்தியவரான சங்கத் தலைவருடைய பெயரில் தான் உருவாக்கப்படும்.

மேலும் தகவல்களுக்கு: *http://www.highroadsolution.com/file_uploader2/files/give_online_on_behalf_of_club_or_club_members_sao.pdf*

CSR இந்திய நல்கைகள் அறிக்கையிடல்

CSR முன்னெடுப்புகளின் வெளிப்படைத்தன்மை, பொறுப்பேற்றல், ஒட்டுமொத்தச் செயல்திறனை உறுதிப்படுத்துவதில் CSR நல்கைகள் அறிக்கையிடல் ஒரு முக்கியப் பங்கை ஆற்றுகிறது. செயல்படுத்தும் சங்கங்கள் அனைத்தும், தங்களுடைய திட்டங்களின் நிலையைப் பொறுத்து முன்னேற்ற அறிக்கை அல்லது நிறைவு அறிக்கையைச் சமர்ப்பிக்க வேண்டும். CSR இந்திய நல்கை அறிக்கையிடல் தேவைகளைப் பின்வரும் இணைப்புகளின் வழியாக அணுகலாம்:

CSR பன்னாட்டு நல்கைகள் மற்றும் CSR இந்திய நல்கைகள் அறிக்கையிடல் தேவைகள்
http://www.highroadsolution.com/file_uploader2/files/csr_gg_and_csr_india_grants_reporting_requirements.pdf

அறிக்கையிடல் வார்ப்புரு (template)
http://www.highroadsolution.com/file_uploader2/files/csr_india_grant_reporting_template.pdf

CSR இந்திய நல்கைகளுக்கான ரோட்டரியன்களுடைய பங்களிப்புகளுக்கான பயன்படுத்தல் சான்றிதழ் வடிவமைப்பு
http://www.highroadsolution.com/file_uploader2/files/csr_grant_rotarians_contributions_uc.pdf

CSR இந்திய நல்கைகளுக்கான CSR பங்களிப்புக்கான பயன்படுத்தல் சான்றிதழ் வடிவமைப்பு
http://www.highroadsolution.com/file_uploader2/files csrgrant_csr_contributions_uc.pdf

Rotary PEOPLE OF ACTION

சண்டீகர் ரோட்டரியின் பளிச்சிடும் சேவை!

V முத்துகுமரன்

பஞ்சாப் மற்றும் ஹரியானா மாநிலங்களின் தலைநகராக இருக்கும் யூனியன் பிரதேசமான சண்டீகரின் வளர்ச்சியும், 65 ஆண்டு பழமையான ரோட்டரி மாவட்டம் 3080-க்கு உட்பட்ட சண்டீகர் ரோட்டரி சங்கத்தின் வளர்ச்சியும் இணையாக உள்ளது. முதலாவது 1958-ம் ஆண்டு மே மாதம் நிர்மாணிக்கப்பட்டது. பிரெஞ்சு கட்டடக் கலைஞர் லீ கார்புசியரால் நகர வடிவமைப்பில் தனித்துவமான கட்டடங்கள், சாலைகள் பல தொகுதிகளாக பிரிக்கப்பட்டு செழிப்பான சூற்றுச்சூழலுடன் உருவாக்கப்பட்டது.

இந்த நகரத்தில் ரோட்டரி திட்டங்கள் பின்தங்கிய குடும்பங்களின் வாழ்க்கை நிலையை மாற்றியமைத்துள்ளன. 2017-ம் ஆண்டு மார்ச் மாதம் சண்டீகர் ரோட்டரி சங்கம், சேவா தொண்டு நிறுவனம், பவன் வித்யாலயா இடையே கையெழுத்தான புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் மூலம் ரஹத் திட்டத்தின் (Project Rahat) மூலம் பஞ்சுகுலாவில் உள்ள சாகேடரி கிராமத்தில் குடிசைப் பகுதியில் உள்ள 650 பேர் வளர்ச்சி பெற்றனர். PRIP ராஜேந்திர சாபூ, அவரது மனைவி உஷா தம்பதிகள் இங்குள்ள மக்களுக்கு போர்வைகள் விநியோகிக்க வந்தபோது அவர்களின் மோசமான வாழ்க்கை நிலையை கண்டு மனம் நெகிழ்ந்தனர். பின்னர் சாபூ தம்பதிகள் இந்த காலனியை தத்தெடுத்து அதன் முன்னேற்றத்துக்கான திட்டத்தை வகுத்தனர். சேவா அமைப்பினர் களப்பணியில் இறங்கினர். வீடு வீடாக ஆய்வு செய்து கல்வி, சுகாதாரம், ஆரோக்கியம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த உள்ளூர் மக்கள் 13 பேருக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. ஆசிரியர்களுக்கான சம்பளம் பவன் வித்யாலயாவால் வழங்கப்பட்டது என்று ரஹத் திட்டத்தின் தலைவர் நீனு விஜ்.

கள ஆய்வு நடத்தியபோது சில அதிர்ச்சி தரும் தகவல்கள் கிடைத்தன. சுமார் 100 குழந்தைகள் பள்ளிக்குச் செல்லவில்லை. கர்ப்பிணிகள் மருத்துவமனைக்குச் செல்வதை தவிர்த்தனர். கணவன்மார்கள் வேலைக்குச் செல்லாமல், குடித்து விட்டு, சூதாட்டத்தில் பங்கேற்று வீட்டுக்கு வந்து மனைவிமார்களை அடித்து துன்புறுத்துவதும் தெரிய வந்தது. வீட்டிலும் சுகாதாரமற்ற நிலை. ரோட்டரியின் 5 ஆண்டு சேவை மற்றும் பல்வேறு மருத்துவ

ரஷ்தா பகத்

முகாம்கள் நடத்திய பின்னர் அவர்களின் நிலைமை சீரானது.

ரஹத் திட்டத்தின் மூலம் பெண்களும், குழந்தைகளும் தையல் வகுப்பு, அழகுக்கலை பயிற்சி, கணினி பயிற்சி மற்றும் வயதுவந்தோர் கல்வி என பல்வேறு ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்டனர்.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் ஐந்தாண்டு காலத்தில் வருடாந்திர செலவுகளான ரூ.15 லட்சத்தை PRIP சாபூ மற்றும் ரோட்டேரியன் ஜகேஷ் கைத்தான் மற்றும் ரோட்டரி சங்கம் பகிர்ந்து கொண்டது. இப்போது வருடாந்திர செலவுகள் ரூ.5 லட்சமாக குறைந்துள்ளது என்றார் சங்கத்தின் தலைவர் அனில் சத்தா. பெரும்பாலான பெண்கள் சுயமாக சம்பாதிக்க தொடங்கிவிட்டனர் என்றார்.

வீட்டுவேலை செய்யும் பெண்களின் குழந்தைகள், கட்டுமானத் தொழிலாளர்களின் குழந்தைகள் காப்பகத்தில் பராமரிக்கப்பட்டு வருகின்றனர். அதற்கான செலவை சங்கம் செலுத்துகிறது என்று சங்கத்தின் செயலர் ஓய்வுபெற்ற கர்னல் அலோக் பாத்ரா தெரிவித்தார்.

இடமிருந்து: *சாகேத்ரி கிராமத்தில் உள்ள திறன் மேம்பாட்டு மையத்தில் திட்டத் தலைவர் நீனு விஜ், ஒருங்கிணைப்பாளர் சீமா குப்தா மற்றும் சங்கத் தலைவர் அனில் சத்தா.*

பள்ளிகளில் WASH திட்டம்

2016–17 முதல் RID 3650-க்கு உட்பட்ட சோல் நாம்ஸன் ரோட்டரி சங்கத்துடன் இணைந்து 82,000 டாலர் மதிப்பிலான மருத்துவம் மற்றும் சுகாதார திட்டத்தின் கீழ் 20 அரசு பள்ளி மாணவர்கள் பயன்பெற்று வருகின்றனர். இதுவரை மூன்று பள்ளிகளில் புதிய கழிப்பறை தொகுதிகள் கட்டிக் கொடுக்கப் பட்டுள்ளன அல்லது புதுப்பிக்கப் பட்டுள்ளன. மேலும் 50,000 சானிடரி பேடுகள் விநியோகிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. கடந்த 5 ஆண்டுகளில் சங்கத்தின் மூலம் 1 லட்சத்துக்கும் மேலான சானிடரி பேடுகள் விநியோகம் செய்யப் பட்டுள்ளன.

குத்தா லஹோராவில் உள்ள அரசு மேனிலைப் பள்ளியில் 950 மாணவர்கள் WINS திட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். கடந்த இரண்டு ஆண்டுகளில் கை கழுவுதலின் அவசியம் குறித்து பலமுறை செயற்முறை பயிற்சிகள் நடத்தப்பட்டுள்ளன. பள்ளியில் 2000 மாணவர்களிடம் WINS திட்டம் சென்றடைந்துள்ளது என்று WINS திட்ட ஒருங்கிணைப்பாளர் கன்வல்ஜித் கவுர் தெரிவித்தார்.

தாய்ப்பால் வங்கி

ஹரியானாவில் உள்ள ருசிரா பேப்பர்ஸ் நிறுவனத்தின் CSR திட்டத்தின் கீழ் மொஹாலியில் குறைந்த எடையுடன் பிறக்கும் குழந்தைகளுக்கு வசதியாக ரூ.31 லட்சம் செலவில் சமீபத்தில் தாய்ப்பால் வங்கி ஏற்படுத்தப்பட்டது. பஞ்சாப் அரசு இதற்கென ரூ.1 கோடி மதிப்பிலான இயந்திரங்களை வழங்கியுள்ளது. மீதி தொகை சங்க உறுப்பினர்களிடமிருந்து திரட்டப் பட்டது.

ஆஷியானா திட்டம்

சமூக நலத்துறையால் நடத்தப்படும் கைவிடப்பட்ட குழந்தைகளுக்கான இல்லமான ஆஷியானா, கட்டில்கள், சுவர் ஓவியங்கள், திரைச்சீலைகள், பொம்மைகள் என வண்ணமயாக ரூ.1.5 லட்சம் செலவில் புதுப்பிக்கப்பட்டது. மூன்று வயது வரையிலான 14 குழந்தைகள் இங்கு பராமரிக்கப்பட்டு வருகின்றன. இதற்கென 3 பேர் நியமிக்கப் பட்டுள்ளனர். தொட்டில் குழந்தை திட்டமும் உள்ளது. ஆதரவற்ற பெண்களுக்கான அமைப்பான சினேகாலயாவில் ஆஷியானா அமைந்துள்ளது.

2003-ம் ஆண்டு அப்போது RI தலைவராக இருந்த ஜோனாதன் மஜியாக்பே, சுக்னா ஏரியில் ரோட்டரி அமைதி சின்னத்தை திறந்துவைத்தார்.

உஷா மற்றும் PRIP ராஜேந்திர சாபூ, PRIP பேரி ரசின் மற்றும் எஸ்தர் உடன் PDGs பிரவீன் கோயல், அவரது வலதுபுறத்தில் அவரது மனைவி பாசு, RC சண்டிகர் முன்னாள் தலைவர் விஜய் வாதவான், PDG மதுகர் மல்ஹோத்ரா மற்றும் முன்னாள் தலைவர் மன்மோகன் சிங் கோஹ்லி ரோட்டரி அமைதி நினைவுச்சின்னம் முன்.

தி காட் பாஃதர்

PRIP சாபூவும் உஷாவும் 2015-இல் மொஹாலியில் உள்ள ஃபோர்டிஸ் மருத்துவமனையில் சிகிச்சை பெற்ற ருவாண்டா குழந்தைகளுடன்.

சண்டீகர் ரோட்டரி சங்கத்தின் முன்னாள் தலைவரும், RID 3080-ன் இளம் தலைமுறையினரின் தலைவருமான சரண்ஜித் சிங் கூறுகையில், நான் PRIP ராஜேந்திர சாபூவை, இதயங்களின் ராஜா என அழைக்க விரும்புகிறேன் என்றார்.

அவர் RI இயக்குநராக (1981–83) இருந்த போது எங்களின் RID 3080 தில்லியிலிருந்து உத்தரப்பிரதேசம் வரை பஞ்சாப், ராஜஸ்தான் மற்றும் இமாசலப் பிரதேசத்தை உள்ளடக்கியதாக இருந்தது. குறிப்பிட்ட திட்டங்களை எவ்வாறு செயல்படுத்துவது என்று ரோட்டேரியன்களுக்கு அவர் கூறும் அறிவுரைகள், வழிகாட்டுதல் தனிச் சிறப்பு வாய்ந்தது என்றார் சரண்ஜித் சிங். 1976–77-களில் DG-ஆக இருந்த அவர், RI தலைவர் (1991–92) பதவிக்கு உயர்ந்த இரண்டாவது இந்தியராவார். 1962–63-ம் ஆண்டில் நிதிஷ் லாஹிரி என்பவர் ரோட்டரி உலகிற்கு தலைவராக இருந்தார்.

ரோட்டரி PGI-சராய் என்பது PGIMER மருத்துவமனையில் 1986–87-ல் சண்டீகர் ரோட்டரி சங்கத்தால் கட்டப்பட்ட நோயாளிகள் மற்றும் அவர்களின் உதவியாளர் களுக்கான முதல் தங்கும் விடுதியாகும். சுமார் 40 ரோட்டேரியன்கள் இதற்கு கடை கடையாக, வீடு வீடாகச் சென்று நிதி திரட்டினார்கள். ரோட்டரி PGI-சராய் கட்டுவதற்காக நாங்கள் பொதுமக்களிடம், உறுப்பினர்களிடம் ரூ.20 லட்சம் நிதி திரட்டினோம். ராஜேந்திர சாபூ, இத்திட்டத்துக்காக பின்னணியில் இருந்து எங்களை இயக்கினார் என்றார். ரோட்டரி PGI சராய் இப்போது மூன்று அடுக்கு கட்டடமாக 50 படுக்கைகள் கொண்ட தங்கும் விடுதியாக உள்ளது.

1998-ம் ஆண்டில் ரோட்டரி மருத்துவக்குழுவை உருவாக்கி ஒருங்கிணைப்பதில் ராஜேந்திர சாபூவின் பங்கு பணிகளை, ரோட்டரி உலகம் என்றென்றும் மறக்காது. இது பின்னர் RVTTM-Rotary Vocational Technical Training Mission என பெயர் மாற்றம் பெற்றது. ஆப்பிரிக்கா, கம்போடியா மற்றும் மங்கோலியா நாடுகளுக்கு மருத்துவர்கள், தன்னார்வலர்கள் மற்றும் ரோட்டேரியன்களுடன் மருத்துவக் குழுக்களை தலைமை யேற்று அழைத்துச் சென்றுள்ளார் சாபூ. நாங்கள் இதுவரை 48 RVTTMs செய்துள்ளோம். 2007 முதல் இந்தியாவில் 17 உலகின் பின்தங்கிய, தொலைதூரப் பகுதிகளில் குறிப்பாக ஆப்பிரிக்கா மற்றும் இந்தியாவின் கடைக்கோடி பகுதியில் உள்ள மக்களுக்கு மருத்துவச் சேவை சென்றடைய வேண்டும் என்பதுதான் எங்களின் முதன்மையான நோக்கம் என்றார் சரண்ஜித் சிங்.

சங்கத்தின் பொன்விழாவையொட்டி இந்த நினைவுச்சின்னத்தை பாரத ஸ்டேட் வங்கி ரூ.6 லட்சம் செலவில் அமைத்துக் கொடுத்தது. ஹார்ட்லைன் புராஜெக்ட் (Project Heartline) மூலம் 1996-ம் ஆண்டு முதல் உலகளாவிய மானிய உதவி மூலம் 771 குழந்தை களுக்கு இதய அறுவைச்சிகிச்சை நடத்தப்பட்டுள்ளது. சமீபத்தில் கிடைத்த 98,000 டாலர் சர்வதேச மானிய உதவி மூலம் இந்த ஆண்டு குறைந்தது 20 குழந்தைகளுக்கு இதய அறுவைச்சிகிச்சை நடத்த திட்டமிடப்பட்டு இதுவரை 4 பேருக்கு அறுவைச் சிகிச்சை நடத்தப்பட்டுள்ளது. எங்களது உலகளாவிய பங்குதாரர்

சங்கத் தலைவர் சத்தா, அருண் அகர்வால், சமூக சேவை இயக்குனர் டீனா வீர்க், **(பின் வரிசை)** சங்க செயலாளர் அலோக் பத்ரா, தொழிற்கல்வி மைய இயக்குநர் சர்தாஜ் லம்பா மற்றும் பொருளாளர் பவன் பஹ்வா சங்கத்தின் ரோட்டரி பவனில்.

அமெரிக்காவில் ஜார்ஜியாவில் உள்ள ஹால் கவுன்டி ரோட்டரி சங்கமாகும் (RID 6910) என்று அனில் சத்தா கூறினார்.

ரோட்டரி இரத்த வங்கி

இரத்த வங்கி சங்கத்துடன் (BBS) இணைந்து நவீன இரத்த சேமிப்பு வங்கி, அதாவது ரோட்டரி மற்றும் இரத்த வங்கி சங்கம் சேமிப்பு வங்கி கடந்த 2004-ம் ஆண்டு நவம்பரில் ஏற்படுத்தப்பட்டது. இரத்த வங்கி சங்கம் இரண்டு மாடி கட்டடத்தை நிறுவியது ரோட்டரி சங்கம், ரூ.175 கோடி 3H மானிய உதவி மூலம் இயந்திரங்களை வழங்கியது என்றார் PDG மதுகர் மல்ஹோத்ரா.

கோவிட் காலத்தை நினைவு கூர்ந்த மல்ஹோத்ரா, அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் கோவிட் நோயாளிகளுக்காக 60,000 டாலர் சர்வதேச மானிய உதவி மூலம் 18 படுக்கைகள் கொண்ட அவசர சிகிச்சை பிரிவை ஏற்படுத்தியதாக கூறினார். சங்கம் தொடங்கப் பட்டதிலிருந்து இதுவரை 45 சர்வதேச மற்றும் அதற்கு பொருத்தமான

வலமிருந்து: *திட்டத் தலைவர் நீனு விஜ், அருண் அகர்வால், ஒருங்கிணைப்பாளர் சீமா குப்தா மற்றும் சங்கத் தலைவர் சத்தா சாகேதாரியில் உள்ள ப்ராஜெக்ட் ரஹாட்டின் திறன் மையத்தில்.*

6 மில்லியன் டாலர் மதிப்பிலான மானிய உதவித் திட்டங்களை செயல் படுத்தியுள்ளதாகவும் அவர் மேலும் கூறினார்.

சமூக நடவடிக்கைகள்

தகன மையத்தில் இரண்டு கழிப்பறை தொகுதிகளை ரூ.45 லட்சத்தில் புதுப்பித்தபின், நாங்கள் நகராட்சியுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துகொண்டு சுகாதாரத் தொகுதிகளை பராமரிப்பதற்காக மாதம் ரூ.30,000 செலவழித் துள்ளோம் என்று சமூக சேவைத் துறை இயக்குநர் டீனா விர்க் தெரிவித்தார். ரோட்டரி தம்பதியரான P J சிங் மற்றும் Dr ராஜிந்தர் கவுர் இருவரும் ரூ.16 லட்சம் மதிப்பில் இரத்தக்கூறுகளை பிரிக்கும் கருவிகளை வழங்கியுள்ளனர்.

கடந்த 7 ஆண்டுகளில், தீபாவளியை முன்னிட்டு இந்திய-சீன எல்லைப் பகுதியில் லடாக் மற்றும் சியாச்சின் துணைப் பிரிவுகளில் உள்ள ராணுவ வீரர்களுக்கு 5,000 இனிப்புப் பெட்டிகள் அனுப்பிவைக்கப்பட்டன.

ரோட்டரி ஹவுஸ்

12,300 சதுர அடி பரப்பளவில் இரண்டு மாடி கட்டிடமாக கண்ணைக் கவரும் வகையில் அமைந்துள்ளது ரோட்டரி ஹவுஸ். இங்குள்ள தொழிற்பயிற்சி மையத்தில் கணினி கல்வி, அழகுக்கலை, தையல் பயிற்சிகள் ஒரு தொகுப்புக்கு 65 மாணவர்கள் வீதம் பயிற்சி அளிக்கப்படுகிறது. கடந்த 15 ஆண்டுகளில் 8,500 இளைஞர்கள் திறன் பயிற்சி பெற்றுள்ளனர் என்றார் தொழிற்பயிற்சி மையத்தின் இயக்குநர் சர்தாஜ் லம்பா.

அடுத்த ஆண்டு ஜூன் மாதத் திற்கும் புதிதாக 20 உறுப் பினர்கள் சேர்க்கவும், சங்கத்தின் மொத்த உறுப்பினர்கள் எண்ணிக் கையை 182 ஆக உயர்த்தவும் அனில் சத்தா விரும்புகிறார். கடந்த நான்கு ஆண்டு களில் 20,000 பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களுக்காக 150 RYLA வகுப்புகள் நடத்தப்பட்டுள்ளன. பார்வையற்ற மாணவர்களுக்கு ஒவ்வொரு ஆண்டும் 100 RYLA வகுப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன.

கடந்த காலங்களில் டிரை சிட்டி பகுதியில் எங்களது சங்கம், 9 ரோட்டரி, 6 ரோட்ராக்ட் மற்றும் 54 இன்டராக்ட் சங்கங்களுக்கு நிதியுதவி செய்துள்ளது. இது இப்போது 19 சங்கங்களில் 900 ரோட்டேரியன் களைக் கொண்டுள்ளது.

புகைப்படங்கள்: V முத்துகுமரன்

புனேவில் மாணவர்கள், ஆசிரியர்களுக்கான பயிற்சி முகாம்

கிரண் ஜெஹ்ரா

RC புனே கோத்ருட், RID 3131, அதன் ஆசிரியர் பயிற்சி மற்றும் 'கல்வி மற்றும் வாழ்க்கை மேம்பாட்டு திறன்' பட்டறைகள் மூலம் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களின் வாழ்க்கையில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தி வருகிறது. கடந்த 18 ஆண்டுகளாக, இந்தப் பட்டறைகள் இரண்டாம் நிலை மாணவர்களுக்கு பாடப்புத்தகங்களுக்கு அப்பாற்பட்ட ஆய்வு நுட்பங்களைக் கற்பித்து அவர்களை மேம்படுத்தியுள்ளன.

சங்க உறுப்பினர்கள் ஊர்மிளா ஹல்டன்கர், குழந்தை உளவியலாளர் மற்றும் பேராசிரியை, உஜ்வல் தவாடே, மனித உறவுகள் பயிற்சியாளர் ஆகியோர் இந்தப் பட்டறைகளை முன்னின்று வழிநடத்துகின்றனர். அவர்களின் நோக்கம், "மாணவர்களுக்கு பயனுள்ள படிப்பு நுட்பங்களை வழங்குவது மற்றும் அவர்களின் தேர்வுகளில் சிறந்து விளங்க உதவுவது" என்கிறார் ஊர்மிளா.

சமர்த்த தத்தாத்ரியா கம்கர் (13) தனது எழுத்துத்திறன் மேம்பட்டது மட்டுமல்லாமல், அவரது நம்பிக்கையும் உயர்ந்துள்ளது என்பதை உணர்ந்துள்ளார். "எனது புதிய படைப்பாற்றலை வெளிப்படுத்த எனது நண்பர்கள் மற்றும் குடும்பத் தினருக்காக நான் கவிதைகள் எழுதத் துணிந்தேன்" என்று அவர் புன்னகைக்கிறார். மற்றொரு மாணவி அர்ச்சனா சங்கர் மார்கலே, கல்வி வெற்றிக்கு அறிவியல் ஆய்வு நுட்பங்களின் முக்கியத்து வத்தை இப்போது அங்கீகரிக்கிறார். "பயிலரங்குகள், தேர்வில் சிறந்து விளங்கு வதற்கும் கற்றலை எளிதான மற்றும் வசதியான அனுபவமாக மாற்றுவதற்கும் எனக்கு கருவிகளை வழங்கியுள்ளன'' என்று அவர் கூறுகிறார்.

"இந்த முறைகள் சராசரிக்கு கீழான மாணவர்களிடம் நேர்மறையான தாக்கத்தை ஏற்படுத்துவதை நான் காண்கிறேன், உண்மையிலேயே அவர்களின் கற்றல் அனுபவங்களை இது மாற்றுகிறது" என சதாராவில் உள்ள பாரதிய ஜெயின் சங்கதானா பள்ளியின் முதல்வர் SC பண்டாரி கூறுகிறார்.

ஆனால் அதன் தாக்கம் மாணவர் களிடம் மட்டும் நின்று விடவில்லை. சங்கம் ஆசிரியர்களின் தொழில் வளர்ச்சியிலும் முதலீடு செய்து வருகிறது. அவர்களின் ஆசிரியர்

பயிற்சி கருத்தரங்குகள், ஒரு தசாப்தத்திற்கும் மேலாக, 50 பள்ளிகளைச் சேர்ந்த 200க்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் நவீன கற்பித்தல் முறைகளில் திறமையானவர்களாக மாற உதவியுள்ளது. இந்த கருத்தரங்குகள், சராசரிக்கு கீழான மாணவர்களுக்கு கற்பித்தலில் ஏற்படும் சவால்களை சமாளிப்பதில் உதவ ஆசிரியர்களை வழிநடத்துவதில் கவனம் செலுத்துகின்றன என்கிறார் தவாடே.

ஊர்மிளா ஹல்டன்கர், உஜ்வல் தவாடே மற்றும் ஆசிரியர்கள் மன அழுத்த மேலாண்மை கருத்தரங்கில்.

இந்த ஆண்டு ஊர்மிளா மற்றும் தவாடே ஆகியோர் மாநில மற்றும் மாவட்ட அளவில் நடத்திய மூன்று கருத்தரங்குகளில் 185 ஆசிரியர்கள் பயனடைந்தனர். “மாணவர்களின் கல்வித் தகுதியைப் பொருட்படுத்தாமல் அவர்களுக்கு உதவக்கூடிய புதுமையான கற்பித்தல் நுட்பங்களை நாங்கள் இப்போது பெற்றுள்ளோம்” என பாரதிய ஜெயின் சங்கதானா பள்ளியின் ஆசிரியரான இங்கோல் PV கூறுகிறார்.

இதனுடன் சேர்த்து, ஆசிரியர்களுக்கான மன அழுத்த மேலாண்மை பட்டறையும் நடத்தப்பட்டது, அங்கு அவர்களுக்கு கொலராடோ முறை மன அழுத்த நிவாரணம் போன்ற நுட்பங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன.

RC சதாரா கேம்ப் ஒத்துழைப்புடன், மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கான ஆசிரியர்/பெற்றோர் கருத்தரங்கு சதாராவில் உள்ள நியூ இங்கலீஷ் பள்ளியில் நடத்தப்பட்டது. ஊர்மிளா மற்றும் தவாடே, குழந்தை உளவியலாளர்கள் ஆன்ஸ் சந்தனா சிட்டலே மற்றும் ரூட்டா டேட் ஆகியோரின் உதவியுடன் 78 பங்கேற்பாளர்களுக்கு வழிகாட்டுதலை வழங்கினர்.■

அகமத்நகரில் 100 பள்ளிகளில் நூலகம்

ரோட்டரி செய்திக்குழு

RC அகமத்நகர் மிட்-டவுன், RID 3132, தன்னுடைய ’வித்யா’ (கல்வி) என்ற திட்டத்தின்கீழ் அகமத்நகர் முழுவதும் 100 ஜில்லா பரிஷத் பள்ளிகளில் நூலகங்களை அமைத்தது. இந்தத் திட்டத்தின்மூலம் பலன் பெறக்கூடிய பள்ளிகளை அடையாளம் காண்பதற்கு, நகராட்சிக் கல்வித் துறை இந்தச் சங்கத்துக்கு உதவியது. இந்தச் சங்கம் இந்தப் பள்ளிகளுக்குப் பலவிதமான புத்தகங்களையும் அவற்றை வைப்பதற்கான அலமாரியையும் வழங்கியது., நாள்தோறும் குறைந்தது ஒரு மணிநேரத்துக்காவது இந்த வசதியைப் பயன்படுத்தவேண்டும் என்று மாணவர்களை ஊக்குவிக்கும்படி அங்குள்ள பணியாளர்களைக் கேட்டுக்கொண்டது. “இதன் மூலம் அவர்களுக்குப் படிக்கும் பழக்கம் கண்டிப்பாக உருவாகும், அதன்மூலம் அவர்களுடைய அறிவு மேம்படும், மொழிப் புலமை சிறப்பாகும். இந்த முன்னெடுப்பின்மூலம் குறைந்தது 10,000 மாணவர்கள் பலன் பெறுவார்கள்’’ என்றார் சங்கத் தலைவர் மதுரா ஜவாரெ. எளிய கதைப் புத்தகங்களில்

தொடங்கித் தகவல் நிறைந்த புத்தகங்கள்வரை இந்த நூலகங்களுக்கான நூல்களைத் தேர்ந்தெடுக்க இந்தச் சங்கத்தின் எழுத்தறிவுக்குழு இயக்குநர் பிரசாத் உபாலெ உதவினார்.

இந்தப் பள்ளிகளுக்கு 100க்கும் மேற்பட்ட விதைப் பொட்டலங்களும் வழங்கப்பட்டுள்ளன. குழந்தைகளும் பள்ளிப் பணியாளர்களும் இவற்றைப் பள்ளி வளாகங்களில் விதைக்கவேண்டும் என்று ஊக்குவிக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தின் மொத்தச் செலவு ரூ.6 லட்சம்.■

ரோட்டரி ஆளுநர்

H R கேசவ்
உற்பத்தித்துறை, RC மைசூர் பிருந்தாவன், RID 3181

ரோட்டரி பவனில் டயாலிசிஸ் மையம்

நட்பும் வலைப்பின்னலும்தான் 2002ல் கேசவை ரோட்டரியை நோக்கி ஈர்த்தன. ஆனால், அதன்பிறகு, அவருக்குச் சேவைத் திட்டங்களில் ஆர்வம் பிறந்தது, சமூகங்களை அணுகத் தொடங்கினார். PDGகள் R குரு, G K பாலகிருஷ்ணா ஆகிய இரு ஆளுமைகளும் "என் ரோட்டரி லட்சியத்தைச் செதுக்கினார்கள். நேரந்தவறாமை, மேடைப் பேச்சுத் திறன்கள் போன்ற பண்புகளை நான் அவர்களிடம்தான் கற்றுக்கொண்டேன்."

மைசூரு, குடகு, தக்ஷிண கன்னடா, சாம்ராஜநகர் உள்ளிட்ட கர்நாடகத்தின் நான்கு வருவாய் மாவட்டங்களில் 87 சங்கங்களில் 3,800க்கும் மேற்பட்ட உறுப்பினர்களைக் கொண்டுள்ள மாவட்டம் இது. "நான் 6 புதிய சங்கங்களைத் தொடங்குவேன், 380 ரோட்டரியன்களைச் சேர்ப்பேன், 10% நிகர வளர்ச்சி இலக்கை எட்டுவேன்." இந்த ஆண்டு, சுமார் 150 அங்கன்வாடிகள் புதுப்பிக்கப்படும். ஒவ்வொரு சங்கமும் 2 முதல் 3 மையங்களைத் தேர்ந்தெடுத்துப் பணியாற்றுகின்றன, அவை ஒவ்வொன்றிலும் குறைந்தது ரூ.30,000 செலவழிக்கின்றன.

ஃபாதர் முல்லர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் RC மங்களூர் ஒரு தோல் வங்கியை (GG: 51,651) அமைக்கிறது. பன்ட்வாலில் ஒரு ரோட்டரி ரத்த வங்கி தொடங்கப்படவுள்ளது. தீவிர நீர்ப் பற்றாக்குறை உள்ள கிராமப் பள்ளிகள், விடுதிகளில் கேசவ் ஒன்பது RWH வசதிகளை (தலா ரூ.45,000) அமைப்பார். இவர் TRFக்கு 300,000 திரட்ட இலக்கு அமைத்துள்ளார்.■

ஜீதேந்தர் குப்தா
வழக்கறிஞர், RC தில்லி, RID 3011

ஏழைகளுக்கான மருத்துவமனை

48 வயது ஜீதேந்தர் குப்தா நம் பகுதிகளின் மிக இளைய வயது DGக்களில் ஒருவர். RC ஃபரீதாபாத் டுலிப்ஸின் முன்னாள் தலைவரான தன் மனைவி தீப்தி-தான் தன்னுடைய வெற்றிகரமான ரோட்டரி பயணத்துக்குத் காரணம் என்கிறார். "அவர் ஒவ்வொரு திட்டத்திலும் என்னுடன் பணியாற்றுகிறார். அவருடைய ஆதரவை நான் மிகவும் மதிக்கிறேன்." இவர் தில்லி-NCR பகுதியில் 400 புதிய ரோட்டரியன்களைச் சேர்த்துள்ளார், 10 புதிய சங்கங்களை உருவாக்கியுள்ளார். இதன் மூலம் இந்த எண்ணிக்கைகளை முறையே 5,100க்கு மேலும் 138க்கும் கொண்டுசென்றுள்ளார். ரோட்டரி பிரேம் சாகர் கோயல் இதய மருத்துவமனை (GG+CSR: 850,000) ஏழைகளுக்கான நலப்பராமரிப்பை வழங்கும்.

அல்வாரில் ஒரு தடுப்பணை (GG: 50,000), தில்லியில் டயாலிசிஸ் மையத்தை விரிவுபடுத்தல் (GG: 35,000), நான்கு குர்காவ்ன் சங்கங்கள் ஒரு திறன் மேம்பாட்டு மையத்தை அமைத்தல் (GG: 75,000) ஆகியவை இவருடைய பொறுப்புக் காலத்தின் மற்ற முக்கியத் திட்டங்கள்.

இவர் TRFக்கு 2 மில்லியன் திரட்ட இலக்கு அமைத்துள்ளார். ரூ.2.5 கோடி மதிப்புள்ள பொதுத் தோற்றத் திட்டத்தின்கீழ், சுமார் ஒரு கோடி ரயில் பயணிகள் காகிதக் கோப்பைகள், உணவுப் பட்டியல்களில் ரோட்டரி சக்கரத்தைக் காண்பார்கள். இவர் 2001ல் 26 வயதில் ரோட்டரியில் இணைந்தார்.■

களுடன் சந்திப்பு

V முத்துகுமரன்

நிலேஷ் குமார் அகர்வால்

ராணுவ ஒப்பந்ததாரர், RC கிரேட்டர் தேஜ்பூர், RID 3240

ரோட்டராக்டும் பொதுத் தோற்றமும் ரோட்டரியைச் செலுத்தும்

எட்டு வடகிழக்கு மாநிலங்கள் பரந்து விரிந்துள்ள காரணத்தால், "என்னுடைய இரட்டைக் கவனம் ரோட்டராக்டை வளர்ப்பதிலும் நம்முடைய பொதுத் தோற்றத்தைக் கட்டமைப்பதிலும்தான் இருக்கும். இவை ரோட்டரியை முன்னோக்கிச் செலுத்தும்'' என்கிறார் நிலேஷ் அகர்வால். 30 உறுப்பினர்களைக் கொண்ட குழு ஒன்று ரோட்டரியை அச்சு, எலக்ட்ரானிக் மற்றும் சமூக ஊடகங்களில் காட்சிப்படுத்துகிறது. அத்துடன், "நான் வருங்கால ரோட்டரியன்களை உருவாக்குவதற்கெனக் குறைந்தது 10 ரோட்டராக்ட், 10 இன்டராக்ட் சங்கங்களைத் தொடங்குவேன்.''

வடகிழக்கில் சுமார் 70 ரோட்டராக்ட் சங்கங்கள் உள்ளன. அகர்வால் அடுத்த ஆண்டு ஜூன் 30க்குள் 8 முதல் 10 செயற்கைக்கோள் சங்கங்களைத் தொடங்கி, அதன்மூலம் ரோட்டரி சங்கங்களின் எண்ணிக்கையை 115க்கு உயர்த்த விரும்புகிறார். இவர் ஏற்கெனவே 250 புதிய உறுப்பினர்களைச் சேர்த்துவிட்டார். "நான் மேலும் 250 பேரைச் சேர்த்து உறுப்பினர் எண்ணிக்கையை 4,000க்குமேல் கொண்டுசெல்வேன்'' என்கிறார் இவர்.

இவருடைய TRF இலக்கு, $400,000. முன்னாள் ரோட்டராக்டரான இவர், 2004ல் தன்னுடைய சங்கத்தின் பதிவுத் தலைவராக இணைந்தார்.■

விபன் பாசின்

வழக்கறிஞர், RC அம்ரித்சர் சவுத், RID 3070

அம்ரித்சரில் தோல் வங்கி

விபின் பாசின் 3,600க்கும் மேலுள்ள இப்போதைய உறுப்பினர் எண்ணிக்கையில் 15% நிகர வளர்ச்சியைக் கொண்டுவர இயலும் என்று நம்புகிறார்.

இவர் சங்கங்களை விரிவாக்கும் விஷயத்தில் அவசரப்படப்போவதில்லை. அதற்குப்பதிலாக, "நான் ஏற்கெனவே உள்ள சங்கங்களை உறுதியாக்க விரும்புகிறேன். 15ஐ விடக்குறைவான உறுப்பினர்களைக் கொண்ட சங்கங்களுக்கு இரண்டு வாய்ப்புகள் கொடுக்கப்பட்டன: அவர்கள் தங்கள் உறுப்பினர் எண்ணிக்கையை விரிவாக்க வேண்டும் அல்லது மற்ற சங்கங்களுடன் இணையவேண்டும்.'' முறையான அறிக்கையிடலில் குறைபாடுகளால் இந்த மாவட்டத்தின் Global Grant நிலையை RI இடைநிறுத்தம் செய்து விட்டது. "நான் அனைத்துச் செயல்முறைகளையும் நிறைவுசெய்து, GG நிலையை மீண்டும் செயலுக்குக் கொண்டுவருவேன்.'' இவருடைய விருப்பப் பட்டியலில் உள்ள திட்டங்களில் ஒன்று, அம்ரித்சரில் GG வழியாக (சுமார் $60,000) ஒரு தோல் வங்கியை உருவாக்குவது.

இவருடைய TRF வழங்குதல் இலக்கு, $100,000. பாசின் 1989ல் ரோட்டரியில் சேர்ந்தார். இவர் PRIPகள் ராஜேந்திர சாபூ, கிளிஃப் டாச்டெர்மன் ஆகியோரால் ஊக்கம் பெறுகிறவர்.■

Rosé-ன் உலகளாவிய எழுச்சி: ஒரு திராட்சை பயணம்

எலிசபெத் கேபே

கடந்த தசாப்தத்தில் Rosé (ரோசே) இன் எழுச்சியானது ப்ரோவென்ஸில் பெரும் முதலீடுகளையும், உலகம் முழுவதும் ஊடக கவனத்தையும் ஈர்த்துள்ளது. ஆனால் Rosé-ன் உலகிற்குள், ஸ்பார்க்லிங் பிங்க் என்னும் வகை, உற்பத்தியாளர்கள் மற்றும் நுகர்வோர்கள் என இருவரிடமும் வளர்ச்சி, மதிப்பு மற்றும் வாங்குதல் ஆகியவற்றில் மற்றவை எல்லாவற்றையும் முந்தியுள்ளது.

Rosé Cava (ரோசே காவா) எட்டு ஆண்டுகளுக்கு முன்பு 8 சதவீத காவா அளவிலிருந்து இன்று 10.5 சதவீதமாக மாறியுள்ளது, அதே நேரத்தில் Rosé Champagne (ரோசே ஷாம்பெயின்) 10 சத வீதத்திலிருந்து கிட்டத்தட்ட 13 சதவீதமாக முன்னேறியுள்ளது. சில ஆண்டுகளுக்கு முன்பு, Rosé Prosecco (ரோசே புரோசெக்கோ) ஒரு பாட்டில் கூட உற்பத்தி செய்யப் படவில்லை. இன்று, ஒவ்வொரு ஆண்டும் 75 மில்லியன் பாட்டில்கள் விற்கப்படுகின்றன. புரோசெக்கோ பாரம்பரிய முறையில் தயாரிக்கப் படுவதில்லை, வில்லா சாந்தி போன்ற சில தயாரிப்பாளர்கள் நல்ல உதாரணம் என்றாலும், என் சுவைக்கு மிகவும் இனிப்பாக இருக்கிறது. இருப்பினும், அதன் பழுத்த தன்மையும், மென்மையான கிரீம் தன்மையும் பல நுகர்வோர்களை ஈர்க்கிறது.

இது மதிப்பிலும் குறிப்பிடத்தக்க அதிகரிப்பை சேர்த்துள்ளது. பிங்க் ஷாம்பெயின் பொதுவாக இதேபோன்ற வெள்ளை ஷாம்பெயின்களை விட 15% முதல் 40% அதிக விலையில் விற்கப்படுகிறது. ப்ரெஸ்டீஜ் மற்றும் விண்டேஜ் ஷாம்பெயின்கள் வெள்ளை ஷாம்பெயின்கள் போலவே சிறந்த தரம் வாய்ந்தவை, ஆனால் அவற்றின் நுட்பமான வேறுபாடு சிவப்பு திராட்சைகளின் அளவுகளில் உள்ளது. பதப்படுத்தப்படும் முறை மற்றும் காலம் ஆகியவை வெவ்வேறு வகைகளுக்கு பெரிதும் பங்களிக்கிறது.

பாரம்பரியமாக, வெண்ணிற ஒயின்கள் ஒரு சிறிய அளவு சிவப்பு ஒயின் மூலம் வண்ண மயமாக்கப்படுகின்றன. மொத்தத்தில் 5 சதவிகிதம் சேர்த்தலே அதற்கு இளஞ்சிவப்பு நிறத்தை வழங்க முடியும், அதே சமயம் சிவப்பு பழத்தின் தன்மையும் அதிகமாக இருக்காது. குறிப்பாக ஷாம்பெயினில், மிகவும் பிரபலமாகி வருவது Rosé de Saignée (ரோசே தே செய்னி) ஷாம்பெயின், அவை மெகரேஷன் முறையில் தயாரிக்கப் படும் Rosé. இம்முறையில் திராட்சைப்பழத் தோலை பழரசத்தில் சுமார் எட்டு நாட்கள் உறவைப்பதன் மூலம் அவற்றின் நிறத்தையும் பழச் சுவையையும் பெறுகின்றன. இந்த ஒயின்கள் பொதுவாக கருஞ் சிவப்பாக, மிகவும் கசப்பாகவும் இருக்கும். பழுத்த திராட்சைகளை நேரடியாக அழுத்துவதன் மூலம் வெளிறிய ரோசேவை பெறலாம், இது பிளாங்க்-தே-நோர் (blanc-de-noirs) போலவே இருக்கும்.

Sparkling Rosé-வில் கவனிக்க வேண்டிய முக்கிய குணங்களில் Rosé-வின் பாத்திரமும் ஒன்றாகும். சிவப்பு பெர்ரி பழம் மற்றும் மொறுமொறுப்பான, நுட்பமான கசப்புடன் கூடிய அமிலத்தன்மை ஆகியவை இரண்டு முக்கிய கூறுகளாகும். அதேசமயம் நீட்டிக்கப் பட்ட பதப்படுத்தலில் இருந்து வரும் குறிப்புகள், வெள்ளை அல்லது பிளாங்க்-தே-நோரில் இருப்பதைப் போலவே இருக்க வேண்டும். குமிழ்கள் (bubbles) பாட்டிலின் இரண்டாவது நொதித்தலில் இருந்தும், அதைத் தொடர்ந்து டிஸ்கோர்ச்மென்ட், ரிட்ட்லிங் செய்முறைகளிலிருந்தும் வருகின்றன.

Champagne Drappier NV Rosé (ஷாம்பெயின் டிராப்பியர் NV ரோசே), 100 சதவீதம் Pinot Noir (பினோ நொர்), பாரம்பரிய இளஞ்சிவப்பு நிறத்தில், ஊற்றப்பட்ட தருணத்தில் இருந்து அதன் பாணியை தைரியமாக வெளிப்படுத்துகிறது. அதைத் தொடர்ந்து சிவப்பு ஆப்பிள்கள்,

புளிப்பு கிரான்பெர்ரிகள், கருமை யான பழங்கள் மற்றும் காட்டு ஸ்ட்ராபெர்ரிகள் ஆகிய பழங்களின் சுவை உங்கள் நாவில் வெடிக்கும். சிவப்பு பழத்தின் சேர்க்கை, ஒயினின் அமிலத்தன்மை மற்றும் நேர்கோட்டு துல்லியத்தை சமன் செய்கிறது.

Au Bout du Chemin NV, Champagne Lebrun de Neuville 60 சத விகிதம் Chardonnay (சார்டொன்னே), 25 சதவிகிதம் Pinot Noir பேஸ் ஒயினும் கொண்டுள்ளது, அதனுடன் 15 சதவிகிதம் சிவப்பு ஒயின் இரண்டாவது நொதித்தலுடன் சேர்க் கப்படுகிறது. லீஸில் இருக்கும் போது வழக்கமான கிரவுன் கேப்புக்குப் பதிலாக, கார்க்கின் கீழ் நான்கு வருடங்கள் பதப் படுத்தப்படும் இது, முதிர்ந்த பிரியோச் மற்றும் ஸ்பைஸ், மற்றும் கவர்ச்சியான செழுமையைத் தருகிறது. ஸ்ட்ராபெர்ரி மற்றும் கிரீம், அழகான மலர் குறிப்புகள், துடிப்பான முறுமுறுப்பான சிவப்பு பெர்ரி பழங்கள் மற்றும் சில நீண்ட கடுமையான அமிலத்தன்மையுடனான செழுமையான சுவையை கொண்டிருக்கும்.

La Foret 2015, Champagne Alexandre Bonnet 100 சதவீதம் Pinot Noir ஆகும். ஷாம்பெயின் பகுதியிலிருந்து வரும் இந்த சக்தி வாய்ந்த பழைய ஒயின் அடர் இளஞ்சிவப்பு நிறத்தை கொடுக்க சற்று நீளமான மெக்கரேஷன் செயல்முறைக்கு உட்படுத்தப்படுகிறது. நொறுக்கப்பட்ட ஸ்ட்ராபெர்ரிகள் மற்றும் கிரீம், முறுமுறுப்பான க்ரன்பெர்ரிகள், அழகான அமிலத்தன்மை, நேர்த்தியான எடை மற்றும் அமைப்பு கொண்ட இது வடக்கு பர்கண்டியின் வெகு அருகில் இருந்து வருகிறது என்பதை உங்களுக்கு நினைவூட்டும். தெற்கு இங்கிலாந்தில் இருந்து வரும் ஸ்பார்க்லிங் ஒயின் சமீபத்தில் ஷாம்பெயின் நிறுவனங்களால் கணிசமான கவனத்தைப் பெற்றது, இப்போது அது கலிபோர்னியாவிலிருந்து முதலீட்டையும் பெற்றுள்ளது. பினோ நோர், மியூனியர் மற்றும் சார்டோன்னே ஆகிய ஷாம்பெயி னுடன் பெருமளவில் தயாரிக்கப்படும் இங்கிலீஷ் ஸ்பார்க்லிங் ஒயின் தரத்தில் ஷாம்பெயின் போன்றது, ஆனால் குளிர்ந்த காலநிலையின் புத்துணர்ச்சியுடன் உள்ளது.

Coolhurst's Lady Elizabeth 2019 மேற்கு சசெக்ஸ் (லண்டனின் தெற்கு) பகுதியைச் சேர்ந்த 100 சதவீதம் Pinot Noir ஆகும். 48 மாதங்கள் லீஸில் வைக்கப்பட்ட அது பாரம்பரிய பிரட் சுவையுடன் பழுத்த ஸ்ட்ராபெர்ரிகள், செர்ரிகள் மற்றும் ராஸ்பெர்ரிகளின் சுவை யையும் சேர்த்து இருக்கும். சிறிதளவு புத்துணர்ச்சியான, ரெட்கரன்ட் மற்றும் துடிப்பான அமிலத் தன்மையையும் கொண்டிருக்கும்.

காவா என்பது ஸ்பானிஷ் ஸ்பார்க்லிங் ஒயினுக்கான கொடுக்கப் படும் பொதுவான பெயராகும். ஆனால் சற்று குழப்பும் விதமாக, வடமேற்கு ஸ்பெயினில் உள்ள பெனெடெஸ் நகரத்திலும், சுற்றி உள்ள பகுதியிலும் ஸ்பார்க்லிங் ஒயின் Cava DO (காவா தோ) என அழைக்கப்படுகிறது. Corpinat sparkling wines (கார்பினாட் ஸ்பார்க்லிங் ஒயின்ஸ்) கிளர்ச்சி யாளர்களைப் போன்றவர்கள் -அவர்கள் Cava DO-விலிருந்து பிரிந்த சிறிய தயாரிப் பாளர்கள். அதிகாரப்பூர்வமாக அங்கீகரிக்கப் படாத ஒயின்கள். Cava DO US-Rosé-வில் குறைந்தபட்சம் 25 சதவிகிதம் சிவப்பு திராட்சை தேவைப்படுகிறது, ஆனால் பின் வரும் இரண்டு ஒயின்கள் 100 சதவிகிதம் சிவப்பு திராட்சை வகைகளாகும்.

Trepat 2019, Agusti Torello Mata, Cava DO (ட்ரெபாட் 2019, அகஸ்டி டோரெல்லோ மாதா, காவா தோ) பாரம்பரிய சிவப்பு வகை ட்ரெபாட் பழத்துடன் தயாரிக்கப்படுகிறது. அடர் இளஞ்சிவப்பான இப்பழம் கட்டலோனியாவின் வெப்பமான கோடைகாலத்தை பிரதிபலிக்கிறது. இது இனிமையான மற்றும் உலர்ந்த பூக்கள், தேன் கலந்த ஆப்பிள்கள் மற்றும் பீச் பழத்தின் வாசனை களுடன், செழுமையான, பழுத்த, சிவப்பு திராட்சை பழங்களின் சுவையை கொண்டிருக்கும். இது மிருதுவான, மொறுமொறுப்பான சிவப்பு திராட்சை பழ அமிலத் தன்மையுடன் கூடிய மூலிகை சுவையை கொண்டது.

Intens Rosat 2019, Recaredo, Corpinat (இன்டென்ஸ் ரோசாட் 2019, ரெக்கரேடோ, கார்பினாட்) ஆனது பிங்க் ஸ்பார்க்லிங் ஒயின்னை விட சிவப்பு ஒயினில் பொதுவாகக் பயன்படுத்தப்படும் பழ வகைகளைக் கொண்டு தயாரிக்கப்படுகிறது, இது ஒரு வித்தியாசமான, ஆனால் உற்சாகமான பிங்க் ஸ்பார்க்லரை போல் இருக்கும். இந்த அடர் இளஞ்சிவப்பு ஒயின், செறிவான சிவப்பு திராட்சை பழங்கள் மற்றும்

மூலிகைகளின் குறிப்புகளை கொண்டிருக்கும். இது அதன் அமைப்பில் சிவப்பு ஒயின் போன்றது, இதனை டிகன்டிங் செய்யும்போது மென்மையாகி (ஆம், இந்த செயல்முறை ஸ்பார்க்லிங் ஒயினிலும் வேலை செய்யும்) செழுமையான பழங்களின் சுவைகளை வெளிப்படுத்துகிறது.

ஐபீரியாவின் அட்லாண்டிக் கடற்கரையில் உள்ள போர்ச்சுகல், தரமான ஸ்பார்க்லிங் ஒயின்களை அதிகளவில் உற்பத்தி செய்கிறது. Douro-வின் Quinta dos Castelres Extra Bruto 2020 (குவிண்டா தோஸ் காஸ்தேலரெஸ் எக்ஸ்ட்ரா ப்ரூட் 2020) போர்ட் பிரதேசத்தில் இருந்து வந்தாலும், இந்த 100 சதவிகிதம் Pinot Noir, மிருதுவான சிவப்பு திராட்சை பழத்தால் செய்யபட்ட மற்றும் உப்பு சுவையுடன் கூடிய ஒரு துடிப்பான நாவுறும் ஒயின். இது கசப்பான மண் மற்றும் அதிக உயரமுள்ள திராட்சைத் தோட்டங்களில் விளைவிக்கப்படுகிறது.

மத்திய கிரீஸில் உள்ள Tselepos (செலேபாஸ்) குடும்பம், கிரீஸின் ஸ்பார்க்லிங் ஒயின் தயாரிப்பில் முதலிடம் வகிக்கிறது. அவர்களின் Amalia NV உள்ளூர் சிவப்பு வகை Agioritiko (அகியோரிதிகோ) பழத்தை கொண்டு தயாரிக்கப்படுகிறது. சற்று இளஞ்சிவப்பு நிறத்தில், மொறுமொறுப்பான சிவப்பு பெர்ரி, செர்ரிகள், ப்ளக்கரன்ட்கள், நாவுறும்

புளிப்பு, கிரீமி ஸ்பைஸ், மலர் குறிப்பும் மற்றும் முடிவில் சற்று உப்பு சுவையும் கொண்டிருக்கும்.

வடக்கு பிரான்சுக்குத் திரும்பு கையில், ஸ்பார்க்லிங் ஒயினுக்கு பெரும் பாரம்பரியத்தைக் கொண்ட ஒரு பகுதி Loire (லுவார்) பள்ளத்தாக்கு ஆகும். Couly-Dutheil Brut de Franc NV (கூலி- டுதீல் புரூட் தே ஃபிராங்க் NV) சினோன் பகுதியிலிருந்து வருகிறது, ஆனால் Vin de Franc (வின் டி பிரான்ஸ்) என்று பெயரிடப்பட்டுள்ளது. லீஸில் 24-மாதங்கள் பதப்படுத்தப்பட்ட 100 சதவீதம் Cabernet Franc (கேபர்நெ ஃபிராங்க்) கிரீமி சுவை மற்றும் நட்ஸ் கொண்டிருக்கும். புதிய இலையின் அமிலத்தன்மை, ரோஜாக்கள் மற்றும் லாவெண்டரின் மலர் குறிப்புகளுடன் பழுத்த சிவப்பு திராட்சை பழத்திற்கு மற்றொரு பரிமாணத்தை கேபர்நெ ஃபிராங்க் சேர்க்கிறது. விறுவிறுப்பும் அழகும் கைகோர்த்துச் செல்லும் ஒரு கார்டன் வரவேற்புக்கு ஏற்றது.

சுற்றுசூழல், வகைகள், பதப்படுத் தப்படும் காலம் - இவை அனைத்தும் லைட் அபெரிடிஃப் முதல் செறிவான காஸ்ட்ரோனமிக் ஒயின்கள் என பிங்க் ஸ்பார்க்லிங் ஒயினின் பரவலான மாறுபட்ட பாணிகளுக்கு பங்களிக்கின்றன. விலைகளும் பரவலாக வேறுபடுகின்றன, எனவே பெரிய பெயர் கொண்ட பகுதிகளுக்கு வெளியே ஆராய்வது எப்போதும் பயனுள்ளது. Still Rosé-களை காட்டிலும் பிங்க் ஸ்பார்க்லிங் ஒயின் ஒளி தாக்கலால் எளிதில் பாதிக்கப்படுகிறது:சூரிய ஒளியில் ஓரிரு மணிநேரங்கள் இருந்தால், அதன் UV-கதிர்வீச்சால் ஏற்படும் சிதைவு ஒயினில் கந்தக, தாவர, ரீடக்டிவ் நாற்றத்தை விட்டுச்செல்லும்- ஒரு பல்பொருள் அங்காடியில் வைக்கப்படும் ஒயினுக்கும் இது நேரலாம். இருண்ட கண்ணாடியில் பாட்டிலிங் செய்வதன் மூலம் ஒளி தாக்கலை முற்றிலும் தவிர்க்கலாம். இருண்ட பாட்டில்களில் உள்ள sparkling Rosé-வை வாங்க முற்படுங்கள்.

Sommelier India ஒயின் பத்திரிக்கையிலிருந்து அனுமதியுடன் மறுபதிப்பு செய்யப்பட்டுள்ளது.

Rotary PEOPLE OF ACTION

ரோட்டரியின் மக்கள் நல திட்டங்கள்

ரோட்டரி செய்திக்குழு

குடியரசுத் தலைவர் முர்மு-வுடன் ஒரு சந்திப்பு

PDG விவேக் குமார், DG S P பகரியா மற்றும் சுபம் பகரியா இந்திய ஜனாதிபதி திரௌபதி முர்முவுடன்.

RID 3250 DG S P பகாரியா, PDG விவேக்குமார், RC கல்கத்தா பிரெசிடென்சி, RID 3291, உறுப்பினர் சுபம் பகாரியா ஆகியோர் இந்தியக் குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு அவர்களைக் குடியரசுத் தலைவர் மாளிகையில் சந்தித்தார்கள். DG பகாரியா ரோட்டரி திட்டங்களின் தொகுப்பைக் குடியரசுத்தலைவருக்கு வழங்கினார்.■

RID 3232-ன் பெரிய இதய வடிவம்

DG ரவி ராமன் (நடுவில்), PDG அபிராமி ராமநாதன், DGE N S சரவணன் (RID 3234), DGN வினோத் சரோகி மற்றும் முத்துசாமி, உலக சாதனை சான்றிதழுடன்.

RID 3232 உருவாக்கிய, மனிதர்களால் ஆன பெரிய இதயச் சின்னத்தை உலகச் சாதனை ஒன்றியம் அங்கீகரித்துச் சான்றளித்தது. சென்னை ஒல்காட் நினைவுப் பள்ளியில் நடத்தப்பட்ட இந்த நிகழ்ச்சியில் தமிழ் நாடு சுகாதார அமைச்சர் மா. சுப்ரமணியன் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்றார்.■

உலக இதய நாள் கொண்டாட்டம்

PRID அசோக் மகாஜன் ஒரு குழந்தை நோயாளியுடன். சங்க தலைவர் ராம் பட்நாகர் அவருக்குப் பின்னால் காணப்படுகிறார்.

RC தானே பிரீமியம், RID 3142, ஜூபிடர் மருத்துவ மனையில் தன்னால் ஆதரிக்கப்பட்டு இதய அறுவைச் சிகிச்சைகளைச் செய்துகொண்ட குழந்தைகளுக்குப் பரிசுகளை வழங்கி உலக இதய நாளைக் (செப்டம்பர் 29) கொண்டாடியது.■

கண் மருத்துவமனைக்கான கருவிகள்

உபகரணங்களுடன் புனே ஸ்போர்ட்ஸ்சிட்டி உறுப்பினர்கள்.

புணேயில் ஹடப்சரில் உள்ள சானெ குருஜி ஆரோக்ய கேந்திரா மருத்துவமனைக்கு ரூ.41.4 லட்சம் மதிப்புள்ள கருவிகளைக் கொடையளித்தது RC புணே ஸ்போர்ட்ஸ் சிட்டி, RID 3131. இதற்கு USA-ன் RCகள் ஃபோர்ட் காலின்ஸ், ஃபோர்ட் காலின்ஸ் பிரேக்ஃபாஸ்ட், ஃபோர்ட் காலின்ஸ் ஆஃப்டர் வொர்க், டென்வர் மற்றும் TRF உதவின.■

கலை மூலம் உலகை ஒன்றிணைத்தல்

V முத்துகுமரன்

ரோட்டரியின் சேவைத் திட்டங்களில் ஒரு புதிய வருகை. RID 3080-க்கு உட்பட்ட RC சண்டீகர், ஒரே உலகம், ஒரே குடும்பம் என்ற உணர்வை வலியுறுத்தும் வகையில் அக்டோபர் 16 முதல் 22 வரை ஒருவார கால விழாவை பாரதிய வித்யாபவனில் நடத்தியது. இன்ஃபோஸிஸ் அறக்கட்டளையும், பவன் வித்யாலயாவும் இணைந்து இதற்கு ஏற்பாடு செய்திருந்தது. கலாசார நிகழ்வுகள் சண்டீகரின் காஸ்மோபாலிடன் நெறிமுறைகள் மீதான கவனத்தை திசைத்திருப்பி பாரம்பரிய மற்றும் சமகால கலை வடிவங்களின் உலகளாவிய சங்கமத்தை பிரதிபலித்தது. இது வசுதைவ குடும்பம் (உலகம் ஒரு குடும்பம்) என்ற உண்மையை ஒவ்வொருவர் மனதிலும் பதிய வைக்கும் வகையில் இருந்தது.

மும்பையில் சுதந்திரப் போராட்ட வீரரும், அரசியல்வாதியும், எழுத்தாளருமான K M முன்ஷியால் 1938-ல் நிறுவப்பட்ட இந்த புகழ் பெற்ற கலாச்சார அமைப்பின் தலைவர்-ஆலோசகராக PRIP ராஜேந்திர சாபூவை தலைவராகக் கொண்ட மூத்த ரோட்டேரியன்கள் குழுவினால் பள்ளியும், அதன் தாய் அமைப்பான சண்டீகர் பாரதிய வித்யாபவனும் நடத்தப்படுகிறது. கலை விழாவின் தொடக்க அமர்வில் பேசிய சாபூ, பாரதீய வித்யாபவன் பெங்களூரு மற்றும் இன்ஃபோஸிஸ் அறக்கட்டளையுடன் இணைந்து செயல்படுவதையும் கலை மற்றும் கலாசாரத்தை மேம்படுத்துவதையும் பெருமையாக கருதுகிறோம். இந்திய கலாசாரம் என்பது இசை மற்றும் நடனத்துடன் தொடர்புடையது. வண்ணங்களின் கலைடாஸ்கோப், ஞானத்தில் அறிவுக்களஞ்சியம் என்று குறிப்பிட்ட அவர், இந்தியாவின் பாரம்பரியத்தை இதயபூர்வமாக வெளிப்படும் சிறப்பான நிகழ்வை ஏற்பாடு செய்தவர்களுக்கு நன்றியை என்று கூறினார்.

நாம் முன்னேறும்போது, கலாச்சாரம், பாரம்பரியும் மற்றும் ஒற்றுமையின் இழைகளால் பின்னப்பட்டு ஒற்றுமையாக ஒரு குடும்பமாக இருக்கிறோம் என்றார்.

கலாசாரத்துக்கு ஊக்கம்

கலாசார விழாவை முதன் முதலாக இன்ஃபோஸிஸ் முன்வைத்தபோது, இசை, நடனம், கலைக் கண்காட்சி, நாடகம் மற்றும் இதர கலாசார நிகழ்வுகள் மூலம் இளம் கலைஞர்களை ஊக்குவிக்கும் முயற்சியில் இறங்கினோம். கலாசார நிகழ்வின் இரண்டாவது பதிப்பில் நாடு முழுவதும் உள்ள 150 கலைஞர்களின் பன்முகத் திறமைகளை வெளிப்படுத்தும் 17 நிகழ்ச்சிகளை நடத்தினோம் என்றார் சண்டீகர் பாரதிய வித்யா பவன் செயலரும் PDG-யுமான மதுகர் மல்ஹோத்ரா. சென்ற ஆண்டு நடைபெற்ற கலைவிழா வெற்றிகரமாக நடந்ததை நினைகூர்ந்த அவர், 275 பேர் அமரும்

இன்ஃபோசிஸ்-சண்டிகர் வளாகத் தலைவர் விகாஸ் குப்தா கதக் நடனக் கலைஞர் சமிரா கோசரை, நீனு விஜ், பவன் வித்யாலயா முதல்வர் வினீதா அரோரா, RC சண்டிகர் முன்னாள் தலைவர் மன்மோகன் சிங் கோஹ்லி, PDG மதுகர் மல்ஹோத்ரா மற்றும் பிரசீன் கலா கேந்திராவைச் சேர்ந்த கலைஞர்கள் முன்னிலையில் பாராட்டுகிறார்.

PRIP *ராஜேந்திர சாபூ, சண்டிகரின் ஆலோசகர் தரம்பால் மற்றும் அவரது மனைவி அனிதா இருவரையும் வரவேற்கிறார்.*

இருக்கை வசதி கொண்ட பவன் அரங்கம் அனைத்து நாட்களிலும் நிரம்பி வழிந்தது. ஒவ்வொரு நாளும் சராசரியாக 4,000 பேர் பவன் மற்றும் இன்ஃபோஸிஸ் யூடியூப் சேனல்கள் மூலம் நேரலையில் ஒளிபரப்பிய நிகழ்வுகளை கண்டுகளித்தனர் என்றார்.

கடந்த சில ஆண்டுகளாக சண்டீகரில், CBSE உடன் இணைந்து மூன்று தனித்தனி வளாகங்களைக் கொண்டு 3,000-த்தும் மேலான மாணவர்களுடன் செயல் பட்டு வரும் பவன் வித்யாலயா கல்வித்திறனில் முன்னிலை வகிக்கிறது. ஆனால், கலாசார நட வடிக்கைகளில் பின்தங்கி இருக்கிறது. இந்த ஆண்டு தேசிய அளவில் நடைபெறும் கலாசார விழாவில் வெற்றிடம் நிரப்பப்பட்டு, இளம் கலைஞர்கள் தங்களது திறமைகளை வெளிப்படுத்து வார்கள் என்று நம்புகிறோம் என்று புன்னகையுடன் தெரிவித்தார் மல்ஹோத்ரா.

சண்டிகர் நிர்வாக ஆலோசகர் தரம்பால் விழாவில் உரையாற்றினார். கடந்த ஆண்டு நடைபெற்ற முதல் கலைவிழாவில் 90 நிகழ்ச்சிகள் நடைபெற்றன. 8 மாநிலங்களிலிருந்து சுமார் 1,300 கலைஞர்கள் இதில் பங்கேற்றனர் என்றார் சண்டீகர் இன்ஃபோஸிஸ் மையத்தின் தலைவர் விகாஸ் குப்தா.

உலகின் துடிப்பான பன்முகத் தன்மையை வெளிப்படுத்தும் வகையில் மத்திய ஆசிய குடியரசுகள், ஐரோப்பா, ஆப்பிரிக்கா மற்றும் இந்தியாவின் சில பகுதிகளைச் சேர்ந்த நடனக் கலைஞர்கள் அந்தந்த நாடுகளின் தாளக்கட்டு, இசைக்கு ஏற்ப நடனமாடி உணர்ச்சிப் பெருக்குடன் மரபு, கலாசாரத்தின் தனித்துவத்தை வெளிப்படுத்தினர். 70 ஆண்டு பழமை வாய்ந்த பிராசீன் கலாகேந்திராவை நடத்தி வரும் சமீரா கூறுகையில், வெளிநாட்டினர் உள்பட எங்களின் 20 சீடர்கள் தொடக்க நிகழ்ச்சியில் பங்கேற்றுள்ளனர் என்று தெரிவித்தார்.

முன்னதாக சண்டீகர் ரோட்டரி சங்கத்தின் முன்னாள் தலைவரும், பாரதிய வித்யா பவன் கலாசார குழுவின் தலைவருமான மன்மோகன் சிங் கோலி தனது வரவேற்புரையில், உலகம் ஒரு குடும்பம் என்ற கருத்து இந்தியாவுக்கு புதிது அல்ல. ராஜேந்திர சாபூஜி பல ஆண்டுகளாக உலகளாவிய ரோட்டேரியன் என்ற வகையில் பழமையான கலைகளை ஊக்குவித்து வருகிறார் என்றார்.

புகைப்படங்கள்: V முத்துகுமரன்

மத்திய ஆசிய குடியரசுகளை சேர்ந்த கலைஞர்கள் நடனமாடுகின்றனர்.

RLI மூலம் ரோட்டேரியன்களிடம் ரோட்டரியை வளர்ப்போம்

ஜெய்ஸ்ரீ

சென்னையில் நடைபெற்ற ரோட்டரி தலைமைப் பண்பு (RLI) கழக தெற்காசிய மாநாட்டில் உரையாற்றிய RLI தெற்காசிய தலைவர் PRID கமல் சங்வி பேசுகையில், ரோட்டரியின் லட்சியங்களை, நோக்கங்களை ஒவ்வொருவரிடமும் எடுத்துச் செல்ல வேண்டும். முழுமையான தகவல்கள் அறிந்த ரோட்டேரியன், ரோட்டரியின் சொத்தாக இருப்பார். அவர், தம்மை சுற்றியுள்ளவர்களை ஈர்த்து அவர்களை ரோட்டரிக்கு அழைத்து வருவார். இதன் மூலம் நாம் உலகிற்கு அனைத்து வகையிலும் சேவை செய்ய முடியும். நீங்கள் எதை பேசுவதானாலும் முழுமையாகத் தெரிந்து கொண்டு பேசுங்கள். நீங்கள் என்ன பகிர்ந்து கொள்கிறீர்களோ அது பிராந்திய வேறுபாடு இல்லாமல் உலகளாவியதாக இருக்க வேண்டும் என்றார்.

RID அனிருதா ராய்சௌத்ரி, உறுப்பினர் எண்ணிக்கை குறைந்து வருவது, தொடர்ச்சியான தலைமை, புதிய ரோட்டரி உலகிற்கு ஏற்றவாறு மாற்றிமைத்தல் குறித்து பேசினார். பசுமையான ரோட்டேரியன்களுக்காக RLI நிகழ்வுக்கு ஏற்பாடு செய்யுமாறு பிரதிநிதிகளை வலியுறுத்தி கேட்டுக் கொண்டார்.

RLI சர்வதேச தலைவர் PRID மைக்கேல் மெக்கவர்ன், A V மூலம் விடுத்துள்ள செய்தியில், ரோட்டரிக்கு, ரோட்டரி என்றால் என்ன, அதன் நோக்கங்கள் என்பது பற்றிய புரிதல் உள்ள தலைவர்கள் தேவை. ரோட்டரி பற்றி பேசுபவர்களாக இல்லாமல் செயல்திறன் உள்ளவர்களாக இருக்க வேண்டும் என்றார். RLI என்பது பல மாவட்டங்களில் அடிமட்ட அளவில் தலைமைப் பண்பை வளர்க்கும் திட்டமாகும். இது ரோட்டரி வாரியத்தால் பரிந்துரைக்கப்பட்டு அதற்கு சி.ஓ.எல். (CoL) முத்தரப்பு கூட்டங்களில் ஒப்புதலும் பெறப்பட்டது என்று RID 3232-ன் PDG-யும் மண்டலம் 5-ன் பிராந்திய தலைவருமான A சுப்பிரமணியம் தெரிவித்தார். DGEs மற்றும் இதர மாவட்ட அதிகாரிகளை அவர்களின் பங்கு பணிகளுக்கு ஏற்ப தயார் படுத்துவதற்கு சர்வ தேச அசெம்பிளி முக்கியமானது. PETS மற்றும் SETS-க்கும் இதே நிலைதான். ஆனால், RLI என்பது ஒரு உறுப்பினரை ரோட்டேரியனாக மாற்றுவதற்கும், அவருக்கு ரோட்டரியைப் பற்றிய பல்வேற விஷயங்களைத் தெரிந்து கொள்வதற்குமான அடிப்படை வகுப்பாகும் என்றார்.

இடமிருந்து: PDGs *சந்திர பாப், அமெரிக்காவிலிருந்து ஃபிராங்க் வார்கோ,* RID *அனிருதா ராய்சௌத்ரி,* RLI *தெற்காசியா தலைவர்* PRID *கமல் சங்வி,* RLI *மண்டல தலைவர்* PDG A *சுப்பிரமணியம் மற்றும் துணைத் தலைவர் ஜார்ஜ் சுந்தராஜ் சென்னையில்.*

RLI துணைத் தலைவர் PDG ஜார்ஜ் சுந்தர்ராஜ் பேசுகையில், RLI உறுப்பினர்களைத் தக்கவைத்துக் கொள்ளவும், தலைமைப் பதவிக்கு தயார்படுத்தவும் உதவும் என்றார். RLI இன்டர்நேஷனல் பயிற்சிதலைவர் PDG பிராங்க் வார்கோ (யு.எஸ்.) சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டார். உறுப்பினர் சேர்க்கை திட்டமிடல், TRF, DEI, உத்திகளை வகுத்தல், ரோட்டரி பற்றிய நன்மதிப்பை உயர்த்துதல்,சங்கத் தொடர்பு, ரோட்ராக்டர்களுக்கு அதிகாரம் அளித்தல் உள்ளிட்ட விஷயங்கள் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டன.

பல்வேறு மாவட்டங்களின் ஆளுநர்கள், DGEs மற்றும் DGNs உள்ளிட்ட 175 பிரதிநிதிகள் இந்த கூட்டத்தில் பங்கேற்றனர். மண்டல தலைவர்கள், PDGs சிவராஜ் (மண்டலம்-4), திலீப் பட்நாயக் (மண்டலம்-6) மற்றும் ஜோர்சன் பெர்னாண்டஸ் (மண்டலம்-7), RLI ஆலோசகர்கள் வினோத் கைத்தான், PDG உல்ஹாஸ் கோல்ஹட்கர், செயலாளர்கள் PDG அருண்குமார் குப்தா மற்றும் மோகன்குமார் இதற்கான ஏற்பாட்டாளர்களாக செயல்பட்டனர்.■

ADVT.

ஜேசிஐ - சிகரத்தில் நமது ரோட்டேரியன்

Rtn Jc கவின்குமார் குமரவேல்

உலகளாவிய ஜேசிஐ - யின் 2024 -ம் ஆண்டு தலைவர்

Rotary | ஈரோடு சென்ட்ரல் ரோட்டரி சங்க உறுப்பினர்கள்

Rtn Jc கவின்குமார் K
Junior Chamber International
President - 2024
95432 81000

Rtn Jc பிரேம்சரண் M
Executive Assistant
to JCI President - 2024
94433 28386

Rtn Jc மதிவாணன் S
Member For Asia and Pacific
JCI in Business - 2024
99421 99930

பாராட்டி வாழ்த்தி மகிழ்பவர்கள் ...

ஈரோடு சென்ட்ரல் ரோட்டரி சங்க உறுப்பினர்கள் மற்றும்

Rtn D. கமலநாதன்
தலைவர்
98427 21333

Rtn B. விக்னேஷ்குமார்
செயலாளர்
98429 55333

Rtn P. சுரேஷ்
பொருளாளர்
98427 07233

Rtn JC S. பாலவேலாயுதம்
பயிற்றுனர்
94433 67811

நிலைத்தன்மை உங்கள் ஷாப்பிங் பட்டியலை முடிவு செய்யட்டும்

ப்ரீதி மேஹரா

கொண்டாட்டமான டிசம்பர் மாதத்தில் நீங்கள் ஷாப்பிங் செய்யச் செல்லும் போது நீங்கள் கேட்க விரும்பும் கடைசி விஷயம் அறிவுரை. மனநிலை உற்சாகமாக இருக்க, எல்லோரும் கிறிஸ்துமஸ் மற்றும் புத்தாண்டு விழாக்களுக்காக ஆவலாக காத்திருப்பார்கள்.

எனவே, அனைத்து ஆரவாரம் மற்றும் மகிழ்ச்சிக்கு மத்தியில் நீங்கள் எதை வாங்கத் தேர்வு செய்கிறீர்கள் என்பதைப் பற்றி சிந்திக்க வேண்டுமா? நாம் செய்யும் ஷாப்பிங் உட்பட, நம்மின் அனைத்து செயல்களிலும் நாம் மிகுந்த கவனத்துடன் இருக்க வேண்டும். நீங்கள் சுற்றுச்சூழலுக்கு உகந்தவராக இருந்தால் மட்டுமே, பச்சை நிறத்தை உங்கள் வாழ்க்கை முறையின் நிறமாக மாற்ற முடியும். நாம் அறிந்த ஒரு பழமொழியை சற்றே திரித்து கூறினால், நீங்கள் யார் என்பது நீங்கள் வாங்குவதில் தெரியும்.

கார்கள், ஏர் கண்டிஷனர்கள், குளிர் சாதனப் பெட்டிகள், மின்விசிறிகள் மற்றும் பிற மின்சாதனங்கள் போன்ற பெரிய பொருட்களுடன் ஆரம்பிக்கலாம். இன்றைய உலகில், நீங்கள் ஒரு கடை அல்லது ஷோரூமிற்குள் நுழைவதற்கு முன்பே ஆன்லைனில் தயாரிப்பு களை முழுமையாக மற்றும் எளிதாக ஆய்வு செய்ய முடிகிறது.

எனவே, நீங்கள் தொடங்கும்போது, உங்கள் முடிவில் குறைந்தபட்சம் 70 சதவிகிதம் பங்களிக்கும் காரணியாக நிலைத் தன்மை இருப்பதை உறுதி செய்யுங்கள். 'ஆற்றல் திறன்' சான்றிதழைக் கொண்ட பொருட்களை தேர்ந்தெடுங்கள். 2002-ம் ஆண்டு நிறுவப்பட்ட அரசாங்கத்தின் எரிசக்தித் திறன் பணியகம் (BEE), அவற்றின் விலை மற்றும் ஆற்றல் நுகர்வு ஆகியவற்றிகாக பொருட்களை ஒப்பிட்டுப் பார்த்து, ஏர் கண்டிஷனர்கள், மின்விசிறிகள், ஹீட்டர்கள், குளிர்சாதன பெட்டிகள், பல்புகள் மற்றும் பிற மின்னணுப் பொருட்களுக்கு எனர்ஜி ஸ்டார் மதிப்பீடுகளை வழங்கியுள்ளது என்பது உங்களுக்குத் தெரியும். அவற்றின் ஆற்றல் மற்றும் செலவு சேமிப்புகள், ஆற்றல் மதிப்பீடுகள் போன்றவற்றை ஒப்பிட்டுப் பார்ப்பதற்கு உங்களுக்கு உதவும் ஒரு செயலியை கூட பணியகம் நிறுவியுள்ளது. இது நுகர்வோர் சிறந்த முடிவை எடுக்க உதவும்.

எனவே, நீங்கள் ஷாப்பிங் செய்யச் செல்லும்போது, இந்த அளவுருக்களை சரிபார்த்து, நீங்கள் வாங்கும் பொருட்களில் உள்ள ஸ்டார்களைச் சரிபார்த்து, அது மிகவும் ஆற்றல் திறன் வாய்ந்தது மற்றும் சுற்றுச்சூழல் நட்பு மிகுந்தது என்பதை உறுதிப்படுத்தவும்.

பெரிய பொருட் களைத் தவிர, கிறிஸ்துமஸ் மற்றும் புத்தாண்டு பரிசுகளைத் தேடுபவர்களின் பட்டியலில் ஆடைகள் மற்றும் கலைப் பொருட்களும் அதிகமாக இடம்பெற்றிருக்கும். இதில், ஏழு கடல்களைக் கடந்து வந்து உங்களை அடையும் பொருட்களை வாங்காமல் இருப்பது சிறந்தது. சுருக்கமாக சொன்னால், நம் உள்ளூர் கைவினை கலைஞர்கள், தையல்காரர்களால் தயாரிக்கப்பட்ட மற்றும் நம் குறுந்தொழில் முனைவோர் மூலம் விற்கப்படும் பொருட்களை உள்நாட்டில் வாங்குவது பசுமையான வழியாகும். உலகளாவிய கார்பன் உமிழ்வுகளில் சுமார் 10 சதவீதத்திற்கு ஃபேஷன் துறை பொறுப்பு என்பது உங்களுக்குத் தெரியும்

மற்றும் காலநிலை மாற்றத்தில் அதன் பங்களிப்பு கணிசமாக உள்ளது. எனவே, அணிந்து சில நாட்களில் தூக்கி எறியப்படும் மலிவான மற்றும் வேகமான பேஷன் ஆடைகளைத் தவிர்க்கவும்.

நீங்கள் சில ஆடைகளை அகற்ற வேண்டும் எனில், உங்கள் அலமாரியில் மேலும் பலவற்றைச் சேர்ப்பதற்கு முன் அவற்றை மறுசுழற்சி செய்ய முயற்சி க்கவும். தேவைப்படுபவர்கள் மற்றும் வெள்ளம் போன்ற பேரிடர் தொடர்பான சூழ்நிலைகளுக்காக பழைய துணிகளைச் சேகரித்து அவற்றைப் புதுப்பிக்கும் பல அமைப்புகள் உள்ளன. பழைய ஆடைகளை மீண்டும் புதுப்பித்து அதிசயங்களைச் செய்யும் கூஞ்ச் போன்ற அமைப்பு நம் டெல்லியில் உள்ளது. உங்கள் ஆடைகள் கிழியும் தருவாயில் இருந்தாலும், அவற்றையும் ஸ்டைலான மற்றும் கலையான கார்பெட்கள், ஃபுட் மேட்கள் மற்றும் டேபிள் மேட்களாக மாற்றலாம். வெவ்வேறு வண்ணங்கள் மற்றும் அமைப்புகள் கொண்ட துணி நீண்ட சங்கிலிகளாகப் பின்னப்பட்டு, புதிய தயாரிப்புகளை உருவாக்க ஒன்றாக தைக்கப்படுகிறது.

பசுமையான வாழ்க்கை முறையைப் பின்பற்றும் பெரும்பாலானோர் விரும்பும் நிலையான ஃபேஷன் இயக்கத்தின் ஒரு பகுதியாக இருக்க, நீங்கள் வாங்கும் ஆடைகளின் விநியோகச் சங்கிலியைப் சரிபார்ப்பது விவேகமானதாக இருக்கும். உற்பத்தியாளர்கள் நெறிமுறை யுள்ளவர்களா, அவர்களிடம் வெளிப் படையான விநியோகச் சங்கிலி உள்ளதா, அவர்கள் நியாயமான ஊதியம் வழங்குகிறார்களா மற்றும் அவர்களின் ஊழியர்களுக்கு ஆரோக்கியமான தொழில் சூழலை வழங்குகிறார்களா? என்பதை ஆய்வு செய்யவேண்டும்.

மேலும், அதிக எண்ணிக்கை யிலான துணிகள் பெட்ரோலியத்தை அடிப்படையாகக் கொண்டவை, அவற்றை உற்பத்தி செய்ய புதைபடிவ எரிபொருள் பயன் படுத்தப்படுகிறது. நைலான், பாலியஸ்டர், அக்ரிலிக் துணி உற்பத்தி செய்ய அதிக ஆற்றல் தேவைப்படுகிறது, அதே நேரத்தில் கரிம மற்றும் மறுசுழற்சி செய்யப்பட்ட இழைகள் ஒப்பீட்டளவில் குறைந்த ஆற்றலை பயன்படுத்தும். இந்த காரணிகள் அனைத்தும் ஒரு பொருளின் கார்பன் தடயத்திற்கு பங்களிக்கின்றன. ஆர்கானிக் பருத்தி, சணல், கைத்தறி போன்றவை விலை உயர்ந்தவையாக இருந்தாலும், அவை பெரும்பாலும் மக்கும் தன்மை கொண்டவையாக இருப்பதால், அவை சிறந்தவை. இயற்கையான அல்லது மறுசு ழற்சி செய்யப்பட்ட துணிகளால் செய்யப்பட்ட சுற்றுசூழல் நட்பு பிராண்டுகளையும் நீங்கள் தேடலாம். நம்முடைய சொந்த காதி ஆடைகள் ஒரு நல்ல பசுமையான தேர்வு. இன்று, காதி கடைகள் பரந்த அளவிலான தேர்வுகளை வழங்குகின்றன.

கலைப்பொருட்களும் நுகர் வோருக்கு மிகவும் பிடித்தமானவை. சுற்றுச்சூழலுக்கு உகந்த பரிசுகளைத் தேடும் நுகர்வோருக்கு இங்கு விதிகள் தெளிவாக உள்ளன. மரத்தில் ஆன பரிசு வேண்டுமென்றால், மூங்கிலைத் தேர்ந்தெடுங்கள் — பெரிய மூங்கில் விளக்குகள், தளபாடங்கள், மேஜைகள், மேசை விரிப்புகள், கோஸ்டர்கள் என எந்த பொருள் வேண்டுமென்றாலும் இந்த மிகவும் நிலையான பொருளில் அது கிடைக்கும். அதேபோல், மறுசுழற்சி செய்யக்கூடியதால் உலோகம் மற்றும் கண்ணாடி இரண்டும் மற்றொரு சிறந்த தேர்வாகும்.

தேநீர், காபி, உலர் பழங்கள், தேன், சாக்லேட்டுகள் மற்றும் பிற ஆர்கானிக் உணவுகள் வீட்டில் இருப்பு வைப்பதற்கும் அல்லது பரிசுகளாக வழங்குவதற்கும் பிரபலமாகிவிட்டன. இங்கேயும் விநியோகச் சங்கிலி, பேக்கேஜிங் மற்றும் லேபிளிங் ஆகியவற்றில் கவனம் செலுத்துவது முக்கியம். அவர்கள் உள்ளூர் விவசாயி

களிடமிருந்து வாங்குகிறார்களா, அவர்கள் ஒருமுறை பயன்படுத்தும் பிளாஸ்டிக் கொள்கலன்களுக்குப் பதிலாக இயற்கையான, மக்கும், மறுசுழற்சி செய்யக்கூடிய இழைகளில் பேக்கிங் செய்கிறார்களா? ஒரு தயாரிப்பு இந்த கோட்பாடுகளுக்கு இணங்கினால், அது உங்கள் ஆதரவிற்கு தகுதியானது.

இன்று, சில ஆன்லைன் பசுமை இணையதளங்களும் உங்களுக்கு குற்ற உணர்வு இல்லாத பரிசுத் தீர்வுகளை வழங்குகின்றன. லூப்பிஃபை மற்றும் பாம்பே க்ரீன்ஸ் தங்கள் பசுமை விநியோகச் சங்கிலியை உறுதி செய்யும் பிரபலமானவர்களில் சிலர்.

இருப்பினும், நீங்கள் ஒரு பொருளை வாங்குவதற்கு முன் பார்க்கவோ, தொடவோ அல்லது உணரவோ விரும்புபவராக இருந்தால், தயவுசெய்து மிகுந்த கவனத்துடன் அதைச் செய்யுங்கள். நிச்சயமாக, ஒரு மக்கக்கூடிய, மீண்டும் பயன்படுத்தக்கூடிய ஷாப்பிங் பையை எல்லா நேரத்திலும் பயன்படுத்தவும். இன்று உங்கள் நிலைத்தன்மை கொண்ட வாங்குதல் முடிவு அதே மாதிரியான தயாரிப்பு களுக்கான தேவையை அதிகரிக்கும், மேலும் உலகம் அதற்காக உங்களுக்கு நன்றி தெரிவிக்கும். இனிய ஷாப்பிங் மற்றும் புத்தாண்டு வாழ்த்துக்கள்!

எழுத்தாளர் மூத்த இதழாளர்
சுற்றுச்சூழல் பிரச்சனைகளைப்பற்றி
எழுதிவருகிறார்.

ஆப்பிரிக்க பெண்ணுக்கு முதுகெலும்பு சிதைவு அறுவைச்சிகிச்சை

V முத்துகுமரன்

வறுமை மற்றும் பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவிக்கும் கிழக்கு-மத்திய ஆப்பிரிக்க நாடானா புருண்டியில், ஐந்து வயது சிறுமி மைஸ்ஸாவுக்கு ஸ்கோலியோசிஸ் அறுவைச்சிகிச்சை வெற்றிகரமாக நடத்தப்பட்டது. மும்பை SOBO ரோட்டரி சங்கம் (RID 3141) மற்றும் பெல்ஜியத்தில் உள்ள கிராண்ட் மாரிடைம் ரோட்டரி சங்கம் (RID 2130) கூட்டு முயற்சியுடன் இது நடத்தப்பட்டது. பெல்ஜியத்தில் உள்ள மருத்துவ தன்னார்வ நிறுவனமான HELP இந்த கூட்டு முயற்சிக்கு வித்திட்டது. இந்த ஆண்டு நவம்பரில் மூன்றுபேர் கொண்ட மருத்துவக்குழு இந்தியாவிலிருந்து ஆப்பிரிக்கா செல்ல ஏற்பாடு செய்தது.

ஆப்பிரிக்காவில் வழக்கமாக மருத்துவ முகாம்கள் நடைபெறும் என்றாலும் நவீன மருத்துவ சிகிச்சைகள் என்பது அரிதானது. கடந்த 2022-ம் ஆண்டில் HELP அமைப்பைச் சேர்ந்த ஐவர் கொண்ட மருத்துவக் குழுவினருக்கு புருண்டியின் தலைநகரான புஜம்புராவில் ரூஷோஸா லாலின் மைஸ்ஸாவை சந்திக்கும் வாய்ப்பு கிடைத்தது. அந்த சிறுமி வளைந்த முதுகுத்தண்டுவட நோயால் அவதிப்பட்டு வந்தாள். குழந்தை படும் அவதியை தாய் கரபோனா மார்டினால் தாங்கமுடியவில்லை. கடந்த ஆண்டு அவரின் கணவர் இறந்த நிலையில் ஒற்றைத் தாயாக, தனது இரண்டு மகள்களையும் வளர்ப்பது அவருக்கு சிரமமாக இருந்தது என்று விளக்கினார் மும்பை SOBO ரோட்டரி சங்கத்தின் முன்னாள் தலைவர் எல்ஸ் ரெய்னார்ஸ். ஒவ்வொரு மாதமும் மைஸ்ஸாவின் நிலை மோசமாகிக் கொண்டே வந்தது. இந்த நிலையில் பெல்ஜியம் தன்னார்வ தொண்டு நிறுவனம் கிராண்ட் மாரிடைம் ரோட்டரி சங்கத்தின் உறுப்பினர் பியரே டீ விரிண்டிட்டை தொடர்பு கொண்டு வளைந்த முதுகுத்தண்டுவடத்தை சரி செய்யும் அறுவைச்சிகிச்சைக்கான சாத்தியக்கூறுகளை ஆராய்ந்தது.

ஆப்பிரிக்காவுக்கான இந்திய ரோட்டேரியன்களின் மருத்துவப் பணிகள் மற்றும் அவர்களின் சிறப்பான பணிகள் பற்றி கேள்விப்பட்ட விரிண்டிட் இளம் ஆப்பிரிக்க சிறுமியின் உயிரைக்காப்பாற்ற புருண்டிக்கு அவசர சிகிச்சைக்கான மருத்துவக் குழுவை ஏற்பாடு செய்வது குறித்து எல்ஸை அணுகினார். மும்பையிலுள்ள தி ஸ்பைன் பவுண்டேஷன் (TSF) அறுவைச் சிகிச்சை நிபுணர்களுக்கும் சிறுமியின் தாய் மார்டினுக்கும் இடையே மெய்நிகர் (ஜூம்)

கார்பன் மார்டினெஸ் மகள்கள், ரஷ்யா மைசா (இடது) மற்றும் கைனா மார்லி மற்றும் டாக்டர் ஹர்ஷல் பாம்ப்.

சந்திப்புக்கு நான் ஏற்பாடு செய்தேன். TSF மருத்துவர்கள் சிறுமியிக்கு MRI ஸ்கேன் பரிசோதனை நடத்தி அந்த அறிக்கைகளை மருத்துவ ஆய்வுக்காக அனுப்புமாறு கோரினர் என்றார் எல்ஸ்.

மூன்று உறுப்பினர் குழு

ஸ்பைன் பவுண்டேஷனைச் சேர்ந்த டாக்டர்கள் புஜம்புரா அருகே உள்ள முடோயி அரசு மருத்துவமனையில், நவம்பர் 13-ம் தேதி அறுவைச் சிகிச்சை செய்தனர்.

புருண்டியில் ஒருநாள் தங்கியிருந்த போது மருத்துவர்கள், முடோய் மருத்துவமனை பரிந்துரைத்த 8 நோயாளிகளையும் பரிசோதித்தனர். முதுகெலும்பு சிகிச்சையை பார்வையிட்ட இரண்டு உள்ளூர் மருத்துவர்களுக்கு எதிர்காலத்தில் அவற்றை எப்படி கையாள்வது என்பது குறித்தும் பயிற்சி அளித்தனர். மகள் மைஸ்ஸா மீண்டுவந்து மகிழ்ச்சியுடன் இருப்பதைக் கண்டு வியப்படைந்தார் தாய் மார்டின்.

மும்பை ரோட்டரி சங்கம் இப்போது, ரூ.50 லட்சம் மதிப்பிலான சர்வதேச மானிய உதவித் திட்டத்தின் மூலம் மகாராஷ்டிராவில் பழங்குடியினர் வசிக்கும் பகுதிகளில் TSF அமைப்பைச் சேர்ந்த 12 மருத்துவர்கள் ஆதரவுடன் முதுகெலும்பு அறுவைச்சிகிச்சை திட்டத்தை செயல்படுத்தி வருகிறது. கடந்த ஏப்ரல் 2023 முதல் இதுவரை 44 அறுவைச்சிகிச்சைகள் செய்து முடிக்கப்பட்டுள்ளன என்றார்.■

100 பள்ளி மாணவர்களுக்கு மின் தொடுதிரைக் கணினிகள்

ரோட்டரி செய்திக்குழு

RC மைசூர் பஞ்ச்ஷீல் தலைவர் கிரண் ராபர்ட் (வலமிருந்து நான்காவது) மற்றும் கிளப் உறுப்பினர்கள் மாணவர்களுடன்.

மாணவர்களுடைய டிஜிட்டல் கற்றல் திறன்களை மேம்படுத்தும் நோக்கத்துடன், கர்நாடகத்தின் சாம்ராஜ்நகர் மாவட்டத்தில் 50 அரசுப் பள்ளிகளைச் சேர்ந்த 100 பேருக்கு ரூ.20 லட்சம் மதிப்புள்ள மின் தொடுதிரைக் கணினிகளை வழங்கியது RC பஞ்ச்ஷீல் மைசூர், RID 3181. இந்தத் திட்டம் RC சாம்ராஜ்நகர், இன்ஃபோசிஸ் மற்றும் INTACH-மைசூர் பிரிவுத்தலைவர் பேராசிரியர் ரங்கராஜு ஆதரவுடன் நடைபெற்றது.

மேலும் பள்ளியிலிருந்து நின்றுவிட்ட 43 பழங்குடியின மாணவர்கள் 10ம் வகுப்புத் தேர்வுகளுக்குத் தயாராவதற்கு சங்கம் விரைவுப் பயிற்சி ஒன்றை வழங்கவுள்ளது. பண்பாட்டு மதிப்பு மிக்க இந்தப் பள்ளிக் கட்டடத்தைப் பார்த்த INTACH உறுப்பினர்கள், மாணவர்களுக்கு ஊக்கமூட்டும் கற்றல் சூழலை வழங்கும் வகையில் இதைப் புதுப்பிக்கத் தீர்மானித்துள்ளார்கள்.

சாம்ராஜ்நகர் சிறையில் உள்ளவர்களுடைய அறிவுத் திறன்களை மேம்படுத்தி அவர்களுடைய மறுவாழ்வுக்கு உதவும்வகையில் இன்ஃபோசிஸ் அங்கு ஒரு கணினி ஆய்வகத்தை அமைக்கும்.■

பதற்றம் மற்றும் மனச்சோர்வை சமாளித்தல்

பாரத் - ஷலன் சவுர்

மன அழுத்தம் என்பது நம் வாழ்வின் இயல்பான பகுதியாகும். இது அவசர நிலைகளில் உடல் மற்றும் மனதின் இயற்கையான பதிலாக செயல்படுகிறது. ஆனால் மன அழுத்தம் நீண்ட காலத்திற்கு புறக்கணிக்கப்பட்டால், பதற்றம் அல்லது மனச்சோர்வுக்கு வழிவகுக்கும்.

பதற்றம்: மன அழுத்தத்தைப் போலவே, பதற்றமும் ஒரு இயற்கையான மற்றும் இயல்பான மனித நிகழ்வு. ஆனால் அதில் அதிகப்படியானதுதான் உங்களைத் தொந்தரவு செய்யவேண்டும். அதன் இருப்பைக் கண்டறிய நீங்கள் பயன்படுத்தக்கூடிய முன்கூட்டிய எச்சரிக்கை அமைப்பு உள்ளது. நீங்கள் கவனிக்க வேண்டியவை: நீண்டகால கவலை, பயம் மற்றும் எதிர்காலத்தை பற்றிய வேதனை ஆகியவை உங்கள் வேலையை கெடுக்கும் மற்றும் தூக்கத்தில் உங்களைத் தொந்தரவு செய்யும். ஒருவர் அதன் கட்டுப்பாட்டில் இருப்பதை, அவர் உறவுகளை பராமரிக்க தவறுவதைக் கொண்டு தீர்மானிக்க முடியும். அதன் உடல் வடிவம் இதய படபடப்பு, அதிகமாக வியர்த்தல், தலைச்சுற்றல், தூக்கமின்மை அல்லது பீதியடைதல் ஆகியவையாகும். பதற்றத்தால் தூண்டப்படும் உணர்ச்சிப் பிரச்சனைகளில் வாழ்க்கையின் கட்டுப்பாட்டை இழக்கும் பயம், அச்ச உணர்வுகள் மற்றும் கவனம் செலுத்துவதில் பிரச்சனை ஆகியவை அடங்கும்.

மனச்சோர்வு, நீண்டகால சிகிச்சை அளிக்கப்படாத மன அழுத்தத்தின் ஒரு கிளை விளைவு அல்லது நீட்டிப்பாகும். ஒரு நபர் முன்பு அனுபவித்த செயல்களில் ஆர்வம் அல்லது மகிழ்ச்சியை முற்றிலுமாக இழப்பதன் மூலம் அதன் மோசமான, சோகமான நிலையை இது வெளிப்படுத்துகிறது. சோம்பல், தூக்க முறைகளில் மாற்றம், பாலியல் உறவில் நாட்டமின்மை, மது அல்லது போதைப்பொருட்களுக்கு அடிமையாகுதல் போன்றவையும் மனச்சோர்வின் கவலைக்குரிய பகுதிகளாகும். சிகிச்சை அளிக்கப் படாத மனச்சோர்வு தற்கொலைக்கான மிகப்பெரிய காரணியாகும். எனவே, பதற்றம் மற்றும் மனச் சோர்வு ஆகியவை நிலைமைகள், பலவீனங்கள் அல்ல என்பதைக் கவனத்தில் கொள்வது இரட்டிப்பு முக்கியம். அதற்கான பயனுள்ள சிகிச்சைகள் தற்போது நம் கையில் உள்ளன.

'மன அழுத்தம்' என்ற சொல் பெரும்பாலும் உடல் மற்றும் உணர்ச்சி அல்லது மன நிலையை விவரிக்கப் பயன்படுத்தப்படுகிறது. பதற்றம் உட்பட அனைத்து மன அழுத்தங்களும் எதிர்மறையானவை அல்ல. அவை நம்மிடமிருந்து சிறந்த பதிலை மற்றும் சிறந்த அணுகுமுறை/செயல்பாட்டை தூண்டலாம். தேர்வு, அறிவியல் சோதனைகள், விளையாட்டு, மற்றும் வாழ்க்கையின் ஒவ்வொரு துறையிலும் 'வயிற்றில் பறக்கும் பட்டாம்பூச்சிகள்' நமக்கு உதவுகின்றன.

அவ்வப்போது, நல்ல மன அழுத்தம் கோதுமையிலிருந்து உமியை பிரிப்பது போல், நல்லதை சாதாரணத்திலிருந்து பிரிக்கிறது மற்றும் சிறந்ததை மற்றவற்றிலிருந்து தனிப்படுத்தி உயர்த்துகிறது. நோபல் பரிசு வென்றவர்கள், அகாடமி-விருது வென்றவர்கள், தடகள நிகழ்வுகளில் தங்கப்பதக்கம் வென்றவர்கள் அதன் வாழும் உதாரணங்கள்.

ஆயினும், மன அழுத்தத்தின் நிழலில் வாழ்வது அல்லது மோசமான மன அழுத்தம் இருப்பதை மறுப்பது ஆபத்தானது. நீண்ட காலத்திற்கு மன அழுத்த முற்றுகையின் கீழ் இருப்பவர்கள் சிதைந்துப் போவார்கள். இத்தகைய மன அழுத்தம் இதயம்-இரத்தநாள உடல்நலப் பிரச்சினைகளுக்கு வழிவகுக்கும். ஆஸ்திரேலிய ஆய்வு ஒன்று, சராசரியாக, எட்டு ஆண்களில் ஒருவர் மனச்சோர்வை எதிர்கொள்கிறார் என்றும், ஐந்தில் ஒருவர் தங்கள் வாழ்க்கையின் ஒரு கட்டத்தில் பதற்றத்தை அனுபவிப்பதாகவும் கூறுகிறது. மிக அதிகமான மக்கள்தொகை மற்றும் மிகக் குறைவான மருத்துவ-சமூக அழுத்த முகாம்களைக் கொண்ட இந்தியா, இப்பிரச்சினையால் மிகவும் பாதிக்கப்படக்கூடியதாக இருக்க வேண்டும். உண்மையில், நீங்களோ அல்லது உங்களுக்கு நெருக்கமான ஒருவரோ மன அழுத்தத்தால் பாதிக்கப்படுவதற்கான வாய்ப்புகள் அதிகம். நீண்டகால மன அழுத்தம் பலரை பதற்றம் அல்லது மனச் சோர்விடம் கொண்டு செல்லலாம்.

எதுவாயினும் ஒரு உளவியலாளர் அல்லது மனநல மருத்துவரை அணுகவும். மன அழுத்தத்தைத் தடுப்பதில் மருத்துவத் தலையீடு சமூகக் களங்கத்தை ஏற்படுத்தாது.

நடவடிக்கை நிலையம்

உங்கள் குடும்ப மருத்துவரை இதில் சேர்த்து கொள்ளுங்கள். அவரால் உங்கள் பிரச்சனையை கையாள முடியும். நீங்கள் பதற்றம் அல்லது மனச்சோர்வு நிலையில் இருக்கிறீர்களா என்று அவரால் சொல்லமுடியும். மேலும் தேவைப்பட்டால், உயர் சிகிச்சை க்காக உங்களை உளவியலாளர் அல்லது மனநல மருத்துவரிடம் பரிந்துரைக்க முடியும். கூடுதலாக, உங்கள் வாழ்க்கை முறையை மறுபரிசீலனை செய்யுங்கள். நீங்கள் நம்பும் ஆதரவான நபர்களை (குடும்பம் மற்றும் நண்பர்கள்) நாடுங்கள். மன அழுத்தத்தை இரகசியமாக வைத்திருப்பது உங்களை ஒரு சுழலுக்குள் ஆழமாக இழுக்கும்.

பதற்றத்தை பறக்க விடுங்கள்: எனது நெருங்கிய நண்பர் பாபி இதற்கு ஒரு நல்ல உதாரணம். அவர் பதற்ற நரகத்தில் இருந்தவர், பொது மற்றும் மனநல மருத்துவரான என் சகோதரி தீபிகாவின் உதவியால் அவர் அதிலிருந்து மீண்டு வந்துள்ளார். என் சகோதரி அவருக்கு பொருத்தமான மருந்துகளுடன் சிகிச்சை அளித்து, அவரை சரியான பாதையில் கொண்டு சென்றார். பாடுவதில் என் நண்பனுடைய ஆர்வத்தை அறிந்த அவர் அவரைப் பாடும்படி கூறினார். பாதிக்கப்பட்ட-சிதைக்கப்பட்ட மனதை இசை அமைதிப்படுத்துகிறது.

உறுதியாக இருங்கள்

முதலில், உங்கள் மருத்துவரை அணுகவும். கூட்டாக ஒரு செயல் திட்டத்தை உருவாக்குங்கள். பின்னர், மிக முக்கியமாக, அதை செயல்ப்படுத்துங்கள். உங்களுக்கு பல வழிகள் உள்ளன. உங்களுக்கு ஆர்வமாக உள்ளவற்றை தேர்ந்தெடுக்கவும். நல்ல ஆரோக்கியத்திற்கான பாதை அடிப்படையானது. இயல்பு நிலைக்கு திரும்புவதற்கு நீங்கள் தொடரக் கூடிய பல பாதைகள் உள்ளன. இதோ சில:

ஒரு உடற்பயிற்சி வழக்கத்தை தொடங்குங்கள். சத்தான உணவை உண்ணுங்கள். நல்ல தூக்கத்தைக் பெறுங்கள்.

இயற்கையில் நடக்கவும், இயற்கை அன்னை உங்களுடன் நடப்பாள்.

ஒரு நாட்குறிப்பை பராமரிக்கவும். எழுத்து ஒரு நல்ல வெளியீடு மற்றும் மனதிற்கு நிவாரணம் அளிக்கும்.

தியானம் செய்யுங்கள். இது உங்களுக்கு ஒரு நல்ல மன அமைதியையும், சிறந்த கண்ணோட்டத்தையும் வழங்குகிறது.

சிரிக்க உங்களை ஊக்குவிக்கவும். டிவி சிட்காம்களைப் பார்ப்பது (ஃப்ரெண்ட்ஸ், தி கபில் ஷர்மா ஷோ, ஹவ் ஐ மேட் யுவர் மதர்...) மற்றும் ஸ்டான்ட்-அப் நகைச்சுவை கேட்பது (ஜெர்ரி சைன்ஃபெல்ட் மற்றும் பலர்) நல்ல மனநிலையை ஏற்படுத்துகிறது. சிரிப்பே எப்போதும் சிறந்த மருந்து.

மறுபுறம், யாரேனும் பதற்றம் அல்லது மனச்சோர்வினால் பாதிக்கப்படுவது உங்களுக்குத் தெரிந்தால், அவர் சாய தோள் கொடுங்கள். ஒரு மருத்துவர் அல்லது சுகாதார மையத்தை அணுக அவரைப் பரிந்துரைக்கவும். அடுத்தடுத்த பரிசோதனைக்கு அவருடன் செல்லவும். மேலும், பரஸ்பர நண்பர்கள் மற்றும் குடும்பத்தினரை அவரைப் பார்க்க ஊக்குவிக்கவும்.

இறுதியாக, வாழ்க்கை ஏற்ற தாழ்வுகளைக் கொண்டிருக்கும். யாரும் மற்றும் எதுவும் அதற்கு விதிவிலக்கல்ல. உங்கள் எதிர்க்கொள்ளும் திறனில் வேலை செய்து உங்களை மேம்படுத்துங்கள். நினைவில் கொள்ளுங்கள்: சக்தி உங்களுடன் இல்லை. நீங்கள் தான் சக்தி.

கட்டுரை ஆசிரியர்கள்
இருவரும் Fitness for Life
மற்றும் Simply Spritiual — You Are Naturally Divine
என்ற ஆங்கில நூல்களின்
எழுத்தாளர்கள்.

New members from different groups in our communities bring fresh perspectives and ideas to our clubs and expand Rotary's presence. Invite prospective members from all backgrounds to experience Rotary.

REFER A NEW MEMBER
my.rotary.org/member-center



Use Rotary's free Club Locator and find a meeting wherever you go!

www·rotary·org/clublocator

District Wise TRF Contribution as on October 2023

(in US Dollars)

District Number	Annual Fund	PolioPlus Fund	Endowment Fund	Other Funds	Total Contribution
India					
2981	17,516	501	1,000	0	19,017
2982	19,204	338	7,085	4,488	31,116
3000	44,369	290	0	1,918	46,577
3011	77,647	17,527	26,089	135,273	256,537
3012	8,287	50	0	8,346	16,683
3020	71,926	7,395	20,211	20,500	120,032
3030	27,906	25,108	275	138,163	191,451
3040	1,065	108	0	25	1,198
3053	8,495	0	0	12,439	20,934
3055	33,944	539	30	0	34,513
3056	13,651	100	0	0	13,751
3060	46,876	9,415	100	99,821	156,212
3070	1,840	0	0	0	1,840
3080	21,364	8,829	0	2,600	32,794
3090	30,090	713	0	5,121	35,923
3100	44,247	1,205	0	6,203	51,655
3110	998	0	0	37,045	38,043
3120	7,461	58	0	0	7,519
3131	183,589	4,606	12,098	37,617	237,909
3132	68,507	2,485	10,000	13,718	94,711
3141	170,195	5,271	59,012	345,769	580,246
3142	220,924	4,650	6,500	0	232,073
3150	25,630	30,454	160,411	73,365	289,860
3160	7,219	51	0	0	7,269
3170	33,397	23,370	2,500	59,293	118,560
3181	28,086	1,045	0	50	29,181
3182	5,590	1,337	0	0	6,927
3191	24,278	4,006	60,976	73,464	162,724
3192	22,191	1,610	0	2,100	25,901
3201	54,104	40,483	44,436	909,090	1,048,112
3203	9,606	10,804	1,220	8,725	30,355
3204	7,665	2,662	0	2,962	13,289
3211	21,801	4,124	27,325	41,173	94,424
3212	30,275	7,440	0	14,210	51,925
3231	1,447	796	0	0	2,243
3232	22,161	10,800	8,300	740,946	782,207
3240	34,365	7,683	0	5,342	47,390
3250	11,520	1,673	26	9,247	22,467
3261	9,074	239	0	0	9,312
3262	7,218	2,868	0	2,575	12,662
3291	48,739	1,252	29,205	1,050	80,247
3220 Sri Lanka	24,029	2,060	0	673	26,762
3271 Pakistan	11,535	21,500	0	9,245	42,280
3272 Pakistan	1,342	385	0	25	1,752
3281 Bangladesh	8,812	1,978	2,000	102,976	115,766
3282 Bangladesh	20,411	1,438	0	25	21,875
3292 Nepal	38,972	7,527	0	39,820	86,319

Annual Fund (AF) includes SHARE, AoF and World Fund.
PolioPlus excludes Bill and Melinda Gates Foundation. **Source:** RISAO

சைபர் கிரைம் — சீரும் அச்சுறுத்தல்

ஜெய்ஸ்ரீ

நமது உலகம் பெருகிய முறையில் ஒன்றோடொன்று இணைக்கப்பட்டு அதில் டிஜிட்டல் ஆதிக்கம் செலுத்தப்பட, இருண்ட வலைத்தளங்களிலிருந்து (Dark web) வெளிப்படும் பல்வேறு அச்சுறுத்தல்கள் காரணமாக சைபர் பாதுகாப்பு மற்றும் சைபர் கிரைம் ஆகியவற்றை பற்றிய விவாதம் வெளிச்சத்திற்கு வருங்கின்றன. ஃபிஷிங் தாக்குதல்கள், ரான்சம்வார் ஊடுருவல்கள், தனிப்பட்ட தரவு திருட்டு மற்றும் நிதி மோசடிகள் தனி நபர்கள் மற்றும் நிறுவனங்களுக்கு தனித்துவமான அச்சுறுத்தல்களை ஏற்படுத்துகின்றன.

ரிஸ்வான் ஷேக்

இந்தியா டுடே ஆசிரியரின் குறிப்பின்படி, கடந்த மூன்று நிதியாண்டுகளில் டெபிட் மற்றும் கிரெடிட் கார்டு மோசடிகள் ரூ.119 கோடி, ரூ.155 கோடி மற்றும் ரூ.276 கோடி என ரிசர்வ் வங்கி மதிப் பிட்டுள்ளது. டெல்லி, ஹரியானா, குஜராத், ஆந்திரப்பிரதேசம், உ.பி., பீகார், அசாம், மேற்கு வங்காளம் மற்றும் ஜார்கண்ட் ஆகிய மாநிலங்கள் இந்தியாவின் முதல் பத்து சைபர் கிரைம் ஹாட்ஸ்பாட்கள் என இந்த இதழ் தெரிவிக்கிறது.

RC அகமதாபாத் கிரேட்டர், RID 3055, இன்டராக்டர்களுடன் இணைந்து, சமீபத்தில் ஒரு ஆன்லைன் நிகழ்ச்சியை ஏற்பாடு செய்தது, இதில் ரிஸ்வான் ஷேக், ஒரு எதிகல் ஹேக்கர் மற்றும் சைபர் சட்ட ஆலோசகர், இணைய அச்சுறுத்தல்கள் மற்றும் நம் இணையதள செயல்பாட்டை பாதுகாப் பதற்கான நடவடிக்கைகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தினார்.

உங்கள் நம்பகத்தன்மையும், பேராசையும் தான் இணையதள குற்றவாளிகளுக்கு முதன்மை மூலதனம். தெரியாத லிங்க் அல்லது இணையதளத்தை கிளிக் செய்ய வேண்டாம். அவர்கள் நீங்கள் கடுமையாக உழைத்து சம்பாதித்த பணத்தை கொள்ளையடித்து, உங்கள் டிஜிட்டல் தளத்தை தங்கள் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருவார்கள் என்று ஷேக் கூறினார். ஒரு ஹேக்கரின் இலக்கைப் பற்றிய அனைத்து டிஜிட்டல் தகவல்களையும் பெறுவதற்கு I P (இன்டர் நெட் புரோட்டோகால்) முகவரியின் முக்கியத் துவத்தை அவர் மேற்கோள் காட்டினார். அது கணினி நெட் வொர்க்கைப் பயன்படுத்தும் ஒவ்வொரு பயனருக்கும் ஒதுக்கப் படும் தனித்துவமான அடையாள மாகும். I P முகவரிக்கான அணுகலைப் பெற இலக்குக்கு ஒரு லிங்க் தூண்டிலாக அனுப்பப் படுகிறது, அதற்கு பின் ஹேக்கருக்கு அனைத்தும் எளிதே.

“தவறான லிங்க்கை கிளிக் செய்வதன் மூலம் உங்கள் மொபைல் போன்கள் அல்லது கணினிகளில் தீங்கிழைக்கும் மென்பொருள் (மால்வேர்) மற்றும் வைரஸ்கள் செருகப்படலாம்” என்று அவர் கூறினார். ட்ரோஜன் மால்வேரைப் பற்றி எச்சரித்த அவர், இது ஒரு லிங்கின் மூலம் அனுப்பப்படுகிறது, அதைக் கிளிக் செய்யும் போது உங்கள் தொலைபேசி/கணினியில் பதிந்துவிடும். ட்ரோஜன் Anydesk போன்ற தொலைநிலை அணுகல்/ ஸ்கிரீன்ஷேரிங் பயன்பாட்டை நிறுவி, உங்கள் உரையாடல்களைப் பதிவு செய்யலாம் மற்றும் வீடியோ கேமராவை இயக்கலாம். ரான்சம்வார், கணினியை பூட்டி பயன்படுத்த முடியாதவாறு என்க்ரிப்ட் செய்யும், பின்னர் அதை விடுவிக்க ஹேக்கர் கிரிப்டோகரன்சி அல்லது சைபர் பணம் வடிவில் பணத்தைக் கோருவார். சில லிங்குகள், PIN அல்லது கடவுச்சொல்லை திருட ஆன்லைனில் ஒரு சிறிய பணம் செலுத்துவதற்கு இலக்கை ஈர்க்கின்றன.

ஆன்லைனில் பாதுகாப்பாக இருக்க செய்ய வேண்டியவை மற்றும் செய்யக்கூடாதவைகளின் பட்டியலை அவர் வழங்கினார். சரியான வாடிக்கையாளர் பராமரிப்பு எண்ணுக்கு எப்போதும் வங்கி/ வியாபாரியின் அதிகாரப்பூர்வ இணையதளத்தைப் பார்வையிடவும்; பரிவர்த்தனை செய்திகளைப் பெற, உங்கள் தொடர்பு விவரங்களை வங்கியுடன் புதுப்பிக்கவும்; உங்கள் டெபிட்/கிரெடிட் கார்டுகளைப் பாதுகாக்க, பரிவர்த்தனைகளுக்கு தினசரி வரம்பை அமைக்கவும்; வலுவான கடவுச்சொற்களைப் பயன்படுத்தவும், அங்கீகரிக்கப்படாத பரிவர்த்தனைகளை உடனடியாக உங்கள் வங்கிக்கு புகாரளித்து மேலும் இழப்புகள் ஏற்படாமல் தடுக்கவும்.

கட்டணங்களைப் பெற உங்கள் UPI பின்னை உள்ளிடாதீர்கள் அல்லது QR குறியீட்டை ஸ்கேன் செய்யாதீர்கள்; இணைய ப்ரௌசெர் அல்லது உங்கள் சாதனத்தில் உங்கள் வங்கிப் பயனர்பெயர்/கடவுச் சொல்லைச் சேமிக்காதீர்; உங்கள் வங்கிக் கணக்கு முடக்கப்படுவதாக அச்சுறுத்தும் SMS/மெயில்களில் பகிரப்பட்ட எந்த லிங்கையும் கிளிக் செய்யாதீர்; உங்கள் புகார்களைத் தீர்ப்பதாக உறுதியளிக்கும் மூன்றாம் தரப்பு செயலிகளைப் பதிவிறக்காதீர் அல்லது உங்கள் ID/கடவுச்சொல்/ OTP/CVV-ஐ வங்கிப் பிரதிநிதி என்று கூறும் எவருடனும் பகிர்ந்து கொள்ளாதீர் என்று அவர் விளக்கினார். “கொஞ்சம் பொது அறிவு மற்றும் தர்க்கம் உங்களை பெரும் இழப்புகள் மற்றும் மன அழுத்தத்திலிருந்து காப்பாற்றும்.”

சைபர் தணிக்கையில் பயன்படுத் தப்படும் VAPT (பாதிக்கப்படக்கூடிய வர்களுக்கான உதவி மற்றும் பாதுகாப்பு சோதனை) பற்றி கூறுகையில் இந்தியாவில் VAPT நிபுணர்கள் குறைவு, இது ஒரு முக்கிய துறையாகும், என்றார். நெட்வொர்க் மற்றும் இணையப் பாதுகாப்பு மற்றும் சைபர் சட்ட வழிகாட்டுதல்களில் தொழில்களை ஆராயுமாறு இளைஞர்களை அவர் வலியுறுத்தினார்.■

சிறை அனுபவம்

சந்தியா ராவ்

‘சுதா பரத்வாஜ் எழுதிய எதையும் நான் படிப்பேன், ஏனெனில் அவர் ஒரு அசாதாரணமான பெண் மற்றும் அவர் வாழ்ந்த வாழ்க்கை அசாதாரணமானது’ என்று நம் காலத்தின் அச்சமற்ற வர்ணனையாளர் அருந்ததி ராய், ஃப்ரம் ஃபான்சி யார்ட்: மை இயர் வித் தி வுமன் அஃப் எரவாடாவின் பின் அட்டையில் மேற்கோள் காட்டியுள்ளார். இந்தியா அசாதாரணமான பெண்களின் தேசம் என்பதை இப்புத்தகம் நினைவூட்டுகிறது, அவர்களில் ஏராளமானோர் தங்கள் அசாதார ணத்தை வாழ்வதன் மூலமே வெளிப் படுத்துகிறார்கள். நவம்பர் 2018 முதல் பிப்ரவரி 2020 வரை புனேவில் உள்ள எரவாடா சிறையில் அடைக்கப்பட்டிருந்த போது தான் சந்தித்த சுமார் 70 பெண்களை பற்றிய சுதா பரத்வாஜின் தொகுப்பில், ‘சிறைக்குள், அநீதியை எப்படி சமாளித்து வாழ்வது, எப்படி நம்பிக்கையுடன் இருப்பது, எப்படித் தொடர்ந்து வாழ்வது, நேசிப்பது, போராடுவது, சிரிப்பது’ என்பதை அவர்கள் சுதாவிற்கு கற்றுக் கொடுத்ததை பற்றி எழுதியுள்ளார்.

ஆனால் முதலில், சுதா பரத்வாஜ் யார்? புத்தகத்தில் இருந்து மேற்கோள் காட்டினால்: அவர் ஒரு மரியாதைக்குரிய தொழிற்சங்கவாதி மற்றும் மனித உரிமை வழக்கறிஞர். அவர் சத்தீஸ்கரில் ஏழைகளின் உரிமைகளுக்காக மூன்று தசாப் தங்களாக பணியாற்றி வருகிறார். கல்வியாளர்களான பெற்றோருக்கு பாஸ்டனில் பிறந்த அவர், இந்தியக் குடிமகளாவதற்கு தனது அமெரிக்க குடியுரிமையை விட்டுக்கொடுத்தார். ஐஐடி கான்பூரில் கணிதத்தில் ஐந்தாண்டு முதுகலைப் பட்டம் பெற்ற பிறகு, சத்தீஸ்கரில் தொழிற் சங்கவாதியாகப் பணிபுரிந்தார். 39 வயதில், சுதா வழக்கறிஞராகவும் தகுதி பெற்றார். 2018-ம் ஆண்டில், மகாராஷ்டிராவில் உள்ள பீமா கோரேகான் கிராமத்தில் வன்முறையைத் தூண்டிய குற்றச் சாட்டின் கீழ், சட்ட விரோத நடவடிக்கைகள் (தடுப்பு) சட்டத்தின் UAPA கீழ், பல அறிஞர்கள், வழக்கறிஞர்கள் மற்றும் ஆர்வலர்களுடன் சேர்த்து அவர் கைது செய்யப்பட்டார். டெல்லியில் உள்ள தேசிய சட்டப் பல்கலைக்கழகத்தில் சிறப்பு பேராசிரியராகப் பணியாற்றிய அவர் அப்போது வீட்டுக் காவலில் வைக்கப்பட்டார். அவர் மூன்று ஆண்டுகளுக்கு மேலாக எரவாடா சிறையிலும், பின்னர் மும்பை பைகுல்லா சிறையிலும் கழித்தார். டிசம்பர் 2021-ல் ஜாமீனில் விடுவிக்கப்பட்டார்.

சுதா தனது புத்தகத்தை ‘அநியாய மாக சிறையில் அடைக்கப்பட்ட அனைவருக்கும்’ மற்றும் ‘நான் இல்லாததால் அதிகம் பாதிக்கப்பட்ட’ அவரது மகளுக்கும் அர்பணிக் கிறார். ஒரு நேர்காணல் போல எழுதப்பட்டுள்ள அறிமுகம், ஆசிரியரின் தனிப்பட்ட மற்றும் தொழில்முறை பின்னணியை பற்றி ஒரு பார்வையை வாசகர்களுக்கு அளிக்கிறது. உதாரணமாக, “உங்களை அதிருப்தியாளர் என்று அழைக்கலாமா?” என்ற கேள்விக்கு, சுதா இவ்வாறு பதிலளிக்கிறார்: “கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு எதிராக, அரசாங் கங்களுக்கு எதிராக, அதிகாரம் படைத்தவர்கள் கொடுங்கோலனாக இருக்கும் போது அவர்களுக்கு எதிராகப் பேசத் துணிந்ததால் அதிருப்தியாளர் என்றால், ஆம், நான் அதிருப்தியாளர் தான். ஆனால் நான் அரசியலமைப்பை மதிக்கும் நபர் என்றும் நம்புகிறேன். என்னைச் சுற்றியுள்ள ஒவ்வொரு குடிமகனுக்கும் நீதி, சுதந்திரம், சமத்துவம் மற்றும் சகோதரத்துவத்திற்காக நான் பாடுபட்டேன், தொடர்ந்து பாடுபடுவேன். இது தான் அதிருப்தியா?’



அந்தப் புத்தகம் எப்படி எழுதப் பட்டது என்பதை அவர் நமக்குச் விளக்குகிறார்: “சில கைதிகள் பிரார்த்தனை செய்வார்கள், சிலர் அழுவார்கள், சிலர் தலையைக் குனிந்துகொண்டு சோர்வாகும் வரை வேலை செய்வார்கள். சிலர் ஒரு அங்குலமும் விட்டுக் கொடுக்காமல் சண்டையிடுவார்கள், சிலர் முணு முணுப்பார்கள், சிலர் கிசுகிசுக்களைப் பரப்புவார்கள். சிலர் செய்தித்தாளை முதல் பக்கத்திலிருந்து கடைசி பக்கம் வரை படிப்பார்கள், சிலர் குழந்தைகள் மீது அன்பைப் பொழிவார்கள், சிலர் தங்களையும் மற்றவர்களையும் நினைத்து சிரிப்பார்கள். இது அனைத்தையும் நான் என் சிறை கம்பிகள் வழியாகப் பார்த்தேன், பின் அதைப்பற்றி எழுதினேன். ‘ஜெயில் கேன்டீனில் இருந்து நோட்டுப் புத்தகங்களை எடுத்து வந்து, எரவாடா பெண்கள் சிறையின் ஃபான்சி முற்றத்தில் (மரணத் தண்டனை கைதிகள் பிரிவில்) பத்து அடிக்கு ஆறு அடி சிறிய அறையில் இரவில் எழுதினார். அவரின் பக்கத்து அறையில் பீமா-கோரேகான் வழக்கில் சக குற்றவாளியான பேராசிரியர் ஷோமா சென் இருந்தார். அவர்கள் ஏன் உயர் பாதுகாப்பு மரண தண்டனை பிரிவில் அடைக்கப்பட்டனர் என்று அவர்களிடம் கூறப்பட வில்லை; அவர்கள் கொடுங் கோலான UAPA-ன் கீழ் கைது செய்யப்பட்டதால் சொல்லாமல் இருக்கலாம்.

ஒரு குளிர்காலம் முதல் அடுத்த

குளிர்காலம் வரை, கோடை மற்றும் பருவமழைக்கு இடையில், கைதிகளின் கதைகளின் துணுக்குகள் அவிழ்க்கப்படுவதை சுதா பார்த்தும் கேட்டதும் அவரை வாழ்க்கை, நீதி, சமூகம், அமைப்புகள் மற்றும் பலவற்றைப் பற்றி சிந்திக்க வைத்தது. முதல் கதை, ஆசிரியர் முதலில் கொண்டு செல்லப்பட்ட புனேவில் உள்ள ஃபராஸ்கானா லாக்-அப்பில் சந்தித்த ஒரு மராட்டியப் பெண்ணுடையது. அந்த பெண் ஒரு நவீன, நடுத்தர வர்க்க, உழைக்கும் பெண்ணாகத் தெரிந்தார். அவர் தன் தமிழ் காதலனுடன் எப்படி ஓடிப்போய் திருமணம் செய்துகொண்டார் என்பதைப் பற்றி கலகலப்பாகப் பேசினார். அவர் ஒரு கற்பழிப்பை தூண்டியதற்காக சிறையில் அடைக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

சுதா பாத்வாஜ்

சிறையில் இருக்கும் பெண்களில் பலர் மோசமான திருமண வாழ்க்கையில் இருந்து வந்தவர்கள் என்று தெரிகிறது. உதாரணமாக, இந்த தலித் செவிலியர் ஒரு ராணுவ வீரரின் மகள். அவரை சித்திரவதை செய்த குடிகாரன் கணவர் இறந்த பிறகு, அவர் தனது இரண்டு சிறிய குழந்தைகளுடன், அவரது வளர்ப்பு சகோதரர் மற்றும் அவரது மனைவியின் இல்லத்தில் சென்று வாழ்ந்தார். குடும்பத்தின் வருமானத்தில் பங்களித்தாலும், சகோதரர் மனைவியின் கேலிகளை அவர் சகித்துக் கொள்ள வேண்டியிருந்தது. அவர் ஒரு தனியார் இல்லத்தில் பகல் செவிலியராக பணி புரிந்தார், மேலும் இரவு நேரங்களிலும் வேலை செய்ய அழுத்தம் கொடுக்கப்பட்டது. இறுதியில் ஒரு மருத்துவமனையில் வேலைக்கு சேர்ந்தார். இருப்பினும், அவரது முந்தைய முதலாளிகள் நகைகளை திருடியதாக அவர் மேல் குற்றம் சாட்ட, இங்கே சிறையில் அடைக்கப்பட்டார். தன் மகள் காவல்துறையில் சேர விரும்புவதை நினைத்து அவர் மகிழ்ச்சியுடன் இருந்தார். ஆனால், "காவல்துறைக்குள் எவ்வளவு சாதிப் பாகுபாடு இருக்கிறது என்பதைக் கருத்தில் கொண்டு, அவருக்காக மகிழ்ச்சியடைவதா அல்லது வேதனைப்படுவதா என்று எனக்குத் தெரியவில்லை" என்று ஆசிரியர் கூறுகிறார்.

ஆசிரியர் சிறை வாழ்க்கையின் பல்வேறு அம்சங்களை ஆர்வமுள்ள, ஆனால் புறநிலை நோக்குடன் வாசகர்களுக்கு அறிமுகப்படுத்துகிறார். நாம் சட்ட அமலாக்க அதிகாரிகளைச் சந்திக்கிறோம், கைதிகளுக்குப் பொறுப்பான கடமைகள் வழங்கப்படுவதைப் பார்க்கிறோம், கேண்டீன் எவ்வாறு செயல்படுகிறது, எப்படி உணவு விநியோகிக்கப்படுகிறது, ஆதரவான குடும்பங்கள் சிறையில் உள்ளவர்களுக்கு மாதாந்திர உதவித்தொகையை எவ்வாறு அனுப்புகின்றன, அதே வேளையில் எந்த ஆதரவும் இல்லாதவர்கள் எவ்வாறு வேலைகளைச் செய்து சம்பாதிக்கிறார்கள் அல்லது பிறரது தாராள மனப்பான்மையை நம்புகிறார்கள் என்பதை காண்கின்றோம். சில பெண்களின் கணவர் அண்டை ஆண்கள் சிறையில் இருக்கின்றனர், அச்சிறை வசதிகளின் அடிப்படையில் பெண்களின் சிறையை காட்டிலும் சிறந்தது, இருப்பினும் எரவாடா சிறை ஒட்டுமொத்தமாக சுத்தமாகவும் ஒப்பீட்டளவில் ஒழுங்கமைக்கப்பட்டதாகவும் உள்ளது. இருப்பினும், வெளி உலகில் உள்ளதைப் போலவே, குழுவாதம் மற்றும் கூட்டாளித்துவம், தனிமை மற்றும் பொறாமை, அத்துடன் விரக்தியும் அங்கே உள்ளது.

உயர் வர்க்க பின்னணியில் இருந்து வந்தவர்களும் அங்கே உள்ளனர். அவர்களில் ஒருவர், மோசடி செய்ததற்காக தண்டனை அனுபவிப்பவர். 'சிறைக்கு வந்த பிறகு வாழ்க்கையைப் பற்றி நான் கற்றுக்கொண்டேன் மற்றும் புரிந்து கொண்டேன், இதை வெளியில் நான் பெற்றிருக்க முடியாது என ஆசிரியரிடம் கூறுகிறார்.

நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்த மற்றொரு பெண், தாய்மார்களுடன் இருக்கும் குழந்தைகளுக்கு பாடங்களையும், பெண்களுக்கு யோகாவும் கற்றுக்கொடுக்கிறார். குழந்தைகள் ஒரு குறிப்பிட்ட வயது வரை தங்கள் தாயுடன் வாழ அனுமதிக்கப்படுகிறார்கள், அதன் பிறகு அவர்கள் சன்ஸ்தாக்களுக்கு அனுப்பப்படுகிறார்கள். பொதுவாக அன்பிற்குரியவர்களான அவர்கள் வெளியேறுவது அவர்களின் சொந்த மற்றும் "மற்ற" தாய்மார்களுக்கு கடினமான நேரம். உள்ளே இருக்கும் பெண்களுக்கு சட்டப்பூர்வ சேவைகள் போதுமானதாக இல்லை என்றும், குறிப்பாக 'உயர்நீதிமன்றம் அல்லது உச்சநீதிமன்றத்தில் தங்கள் வழக்கின் மேல்முறையீடு நிலை கூடத் தெரியாத தண்டனைக் கைதிகளின் விஷயத்தில், சீர்திருத்தம் தேவை' என சுதா சுட்டிக் காட்டுகிறார்.

சிறை வாழ்க்கையில் நம்பிக்கை பெரும் பங்கு வகிக்கிறது. வேறுபட்ட மதச்சார்புடையவர்களாக இருந்த போதிலும், பெரும்பான்மையான பெண்கள் ஒருவருக்கொருவர் மற்றவர்களின் மதங்களை மதிக்கிறார்கள். எல்லோரும் ரமதான் நோன்பு எடுக்கிறார்கள், எல்லோரும் தீபாவளியைக் கொண்டாடுகிறார்கள். மகளிர் தினத்தில் பல திறமைகள் வெளிப்படுகின்றன. இப்போது, ஜாமீன் விதிமுறைகளால் மும்பையில் அடைத்து வைக்கப்பட்டுள்ள நிலையில், தன் சக கைதிகளைப் பற்றி அடிக்கடி நினைப்பதாக சுதா கூறுகிறார். சில சமயங்களில் அவருக்கு தெரியாத எண்ணிலிருந்து ஒரு தொலைபேசி அழைப்பு வருகிறது: "ஹலோ ஆன்ட்டி, என்னை ஞாபகம் இருக்கிறதா?" என்று குரல் ஒலிக்க அது அவருடைய நாளை பிரகாசமாக்குகிறது.

கட்டுரையாளர் குழந்தைகள் எழுத்தாளர் மற்றும் மூத்த பத்திரிகையாளர்.

RC நாகப்பட்டினம் — RID 2981

திட்டச்சேரியில் புதிதாகக் கட்டப்பட்ட சுகாதார மையத்துக்கு ரூ.65,000 மதிப்புள்ள இரும்புக் கட்டில்கள், மெத்தைகள், கொடையளிக் கப்பட்டன.

RC குர்காவ்ன் — RID 3011

கீதா பவனில் ரோட்டரி சனாதன் ரசோய் திட்டத்தின்கீழ், Rtn மீனாட்சி குல்லார் அவர்களுடைய தந்தை நினைவாக உணவு வழங்கப் பட்டது.

RC மேட்டூர் டேம் சிட்டி — RID 2982

மேட்டூர் பொது ஜன சேவா சங்கம் தொடக்கப் பள்ளியில் ரூ.2 லட்சம் மதிப்புள்ள டிஜிட்டல் நூலகம் ஒன்றை தொடங்கி வைத்தார் DG S ராகவன்.

RC போபால் ஹில்ஸ் — RID 3040

கணினி, தையல் பயிற்சிக்கான தொழில் சார்ந்த மையத்தை DG ரிது குரோவர் மற்றும் போபால் நகரத் தலைவர் மால்தி ராய் தொடங்கிவைத்தார்கள்.

RC புதுக்கோட்டை சிட்டி — RID 3000

அரசுப் பள்ளிகளைச் சேர்ந்த நலிந்த மாணவர் களுடன் தீபாவளிக் கொண்டாட் டங்கள் நடை பெற்றன.

RC ஆல்வார் — RID 3053

அரசுப் பெண்கள் பள்ளியில் நடைபெற்ற ஒரு கருத்தரங்கத்தில் பேச்சாளர் சரோஜ் குப்தா நலம், தூய்மை, உண்ணும் பழக்கங்கள், நடவடிக்கைபற்றி உரையாற்றினார்.

செய்திகள்

RC காஸ்மோபாலிட்டன் அகமதாபாத் — RID 3055

ஷாகிபௌக் கிர்தர்நகர் உயர்நிலைப் பள்ளியில் நடைபெற்ற 3 நாள் கண் பரிசோதனை முகாமில் 1,960க்கும் மேற்பட்ட மாணவர்கள் பரிசோதிக்கப் பட்டனர்.

RI District 3080

இமாச்சலப் பிரதேசத்தில் சோலான் மாவட்டத்தில் தரம்பூர் கிராமத்தில் வெள்ளத்தால் பாதிக்கப் பட்டவர் களுக்குப் பாதுகாப்புப் பொதிகள் வழங்கப் பட்டன.

RC ஸ்ரீ மாதோபூர் சன்ரைஸ் — RID 3056

ரோட்டரி பவனில் நடைபெற்ற வாராந்திர ஹோமியோபதி முகாமில் டாக்டர் S I சௌத்ரி 95 நோயாளிகளைப் பரிசோதித்தார்.

RC துரி — RID 3090

பென்ரா பல்கலைக்கழகக் கல்லூரி சென்று திரும்பும் இலவசப் பேருந்து வசதியைச் சங்கத் தலைவர் மகன் லால் கார்க் துவக்கி வைத்தார்.

RC சூரத் ஈஸ்ட் — RID 3060

சங்கம், யுனிட்டி மருத்துவ மனையில், பக்வான் கீர்த்தன் பிரகாஷ் பார்கின்சன்'ஸ் நோய் மற்றும் நகர்வுக் குறைபாட்டு அமைப்பின் ஆதரவுடன், இரண்டாவது பார்கின்சன்'ஸ் ஆதரவுச் சிகிச்சை மையம் அமைத்துள்ளது.

RC மொராடாபாத் — RID 3100

கிருஷ்ண பால் வித்யா மந்திர் இன்டர் காலேஜில் நடைபெற்ற POCSO சட்டப் பயிலகத்தில் கூடுதல் மாவட்ட நீதியரசர் மாதவி சிங் குழந்தை உரிமைகள், பாலியல் குற்றங்களைப்பற்றி உரையாற்றினார்.

RC நைனிடால் — RID 3110

நைனிடாலில் மோகன் லால் சாஹ் பாலிகா வித்யா மந்திரில் தேசியப் பயிற்சியாளர் ஜோதி துர்காபால் மாணவர் களுக்குத் தற்காப்பு வகுப்புகளை நடத்தினார்.

RC பனாஜி — RID 3170

பஞ்சிம் தேவாலயத் திலிருந்து DGP ஜஸ்பால் சிங் கொடி அசைத்துத் தொடங்கி வைத்த மன நல விழிப்புணர்வுப் பேரணியில் சுமார் 100 பள்ளி மாணவர்கள்.

RC கொபொலி — RID 3131

சர்சான் கிராமத்தில் ஓர் அங்கன்வாடி தொடக்கப் பள்ளியில், ஃபைப்ரெ ஃபாயில்ஸ் உதவியுடன் கழிப்பறைத் தொகுதி ஒன்று கட்டப்பட்டது.

RC தீர்த்தஹள்ளி — RID 3182

AG K P S சுவாமி, பிற உறுப்பினர்கள் முன்னிலையில் விவசாயிகளை இந்தச் சங்கம் பெருமைப் படுத்தியது.

RC சகுர் — RID 3132

உலக இளம் பிள்ளைவாத நாள் பேரணியில் இளம்பிள்ளை வாதத் தடுப்பு மருந்து பற்றிய வீடியோ படங்கள் பள்ளிகளில் காண்பிக்கப் பட்டன.

RC பெங்களூர் விஜயநகர் — RID 3191

K R சந்தை பேருந்து நிறுத்தத்தில் குடிநீர் வசதி வழங்கப் பட்டது. இது நாள்தோறும் 5,000 மக்களுக்குப் பயன்படும்.

செய்திகள்

RC பவானி கொமாரபாளையம் — RID 3203

தாய்மைத் திட்டத்தின் கீழ், ஒவ்வொரு வாரமும் கர்ப்பிணிப் பெண்களுக்கு சத்தான உணவு, பழங்கள் வழங்கப் படுகின்றன.

RC கரேளா வாலி ஜல்பைகுரி — RID 3240

ரோட்டரி இந்தியா மனிதத்தன்மை அறக்கட்டளை, தி காவ் ஜாங் ஜி அறக்கட்டளை, தாய்பெய் உடன் இணைந்து 15 பேருக்குச் சக்கர நாற்காலிகள் கொடையளிக்கப் பட்டன.

RC கிரேட்டர் ஹரிபாத் — RID 3211

போலியோப்ளஸ் பரப்புரையின் ஒரு பகுதியாக, இளம்பிள்ளை வாதத்தை பற்றி ரோட்டரியின் முன்னெடுப்பு களைப் பற்றி மக்களிடையில் விழிப்புணர்வு ஏற்படுத்தியது.

RC பொகாரோ ஸ்டீல் சிட்டி — RID 3250

சோனாடன்ட் ஆதர்ஷ் உயர்நிலைப் பள்ளியில் பெண் களுக்கான கழிப்பறைத் தொகுதி ஒன்று தொடங்கி வைக்கப் பட்டது.

RC மகிந்திரா இன்டஸ்ட்ரியல் சிட்டி — RID 3231

ஆனந்தவல்லி ஹரிஹரன் ஆதரவில் காட்டாங்குளத்தூர் பஞ்சாயத்து பள்ளியில் எழுப்பப் பட்ட புதிய வகுப்பறைத் தொகுதியை DG P பரணிதரன் தொடங்கிவைத்தார்.

RC பேளூர் — RID 3291

மருத்துவர் குழு ஒன்று கொல்கத்தா அக்ஷர் பள்ளியைச் சேர்ந்த 60 மாணவர்கள், ஆசிரியர்களுக்கு CPR போன்ற உயிர் காக்கும் திறன்களில் பயிற்சியளித்தது.

ஒருங்கிணைப்பு: V முத்துகுமரன்

கிரிக்கெட் ஏன் என்னைக் கவர்கிறது

TCA ஸ்ரீனிவாச ராகவன்

அக்டோபர் மற்றும் நவம்பர் மாதங்கள் எனக்கு மிகவும் கடினமான மாதங்கள். கிரிக்கெட் உலகக் கோப்பை அக்டோபர் 5-ம் தேதி தொடங்கி நவம்பர் 19, 2023 அன்று முடிவடைந்தது. மொத்தம் 45 நாட்கள். ஒரே ஒரு ஆட்டம் இருந்த நாட்களில், போட்டி ஒரு நாளைக்கு எட்டு மணி நேரம் எடுத்துக் கொண்டது. இரண்டு போட்டிகள் இருந்த நாட்களில் அது 12 ஆனது. என்ன ஒரு ஆனந்தமான அனுபவம் அவை. இந்த விளையாட்டை விட வேறு எதையும் நான் பெரிதாக ரசித்ததில்லை. வேறு எந்த விளையாட்டும் அதன் அருகில் கூட நெருங்கமுடியாது - அதற்கு ஒரு நல்ல காரணம் இருக்கிறது. இது கணிதத்தில் நேரியலற்றதன்மை என்று அழைக்கப்படுகிறது.

நேரியலற்றதன்மை என்பது தொடக்க நிலைகளிலிருந்து இறுதி முடிவை உங்களால் கணிக்க முடியாது என்று அர்த்தம். இதற்கு நன்கு அறியப்பட்ட விளக்க உதாரணம் என்னவென்றால், பெரு நாட்டில் ஒரு பட்டாம்பூச்சி அதன் சிறகுகளை அசைப்பது ஜப்பானில் பூகம்பத்தை ஏற்படுத்தும்.

கிரிக்கெட்டும் அப்படித்தான். பந்து வீச்சாளர் பந்தை ஏறிவதற்கும் பேட்ஸ்மேன் விளையாடுவதற்கும் இடையில் ஒரு டஜன் விஷயங்கள் நடக்கும். அவர் பந்தைப் பிடிக்கும் விதம், அவர் உருவாக்கும் வேகம், ஸ்விங் அல்லது சுழல், அது எங்கு தரையில் படுகிறது, எவ்வளவு திரும்புகிறது, பேட்ஸ்மேன் எவ்வாறு பதிலளிக்கிறார், பந்து மட்டையைத் தொடும் இடம், பேட்ஸ்மேனின் கால் மற்றும் தலையின் நிலை... ரன் அடிக்கப்படுகிறதா, இல்லையா, அல்லது பேட்ஸ்மேன் பௌல்ட், கேட்ச், ஸ்டம்ப்டு, ரன் அவுட் அல்லது லெக் பிஃபோர் விக்கெட்டு ஆவது என அவற்றால் ஏற்படும் பல விஷயங்களைப் ஒருவர் பட்டியலிடலாம். பின்னர் கேட்ச் பிடிப்பது அல்லது கோட்டை விடப்படுவது. மேலும் ஒவ்வொரு பந்திலும் சாத்தியமான ரன்களின் எண்ணிக்கை – 6, 4, 3, 2, 1 மற்றும் 0. இப்படி நிகழ்வுகளின் வரிசைமாற்றங்கள் முடிவற்றவை.

இந்த விளையாட்டின் அழகு எங்கே இருக்கிறது என்பதை தங்களுக்கு தற்போது புரியும். வீசப்படும் ஒவ்வொரு பந்தின் முடிவையும் பல்வேறு விஷயங்கள் பாதிக்கலாம். வேறு எந்த விளையாட்டுக்கும் இவ்வளவு பெரிய சாத்தியக்கூறுகள் இல்லை. இன்னும் நான் ஆடுகளம், அவுட்ஃபீல்ட், மழை, பனி, காற்று மற்றும் கூட்டம் ஆகிய வற்றின் நிலையைப் பற்றி குறிப்பிடக் கூட தொடங்கவில்லை. இவை அனைத்தும் என்ன நடக்கிறது என்பதில் ஒரு தாக்கத்தை ஏற்படுத்துகின்றன.

இவை மட்டுமல்லாமல் ஃபில்டிங் அமைப்பதும் உள்ளது. உயர் மட்டத்தில் இந்த விளையாட்டை விளையாடாதவர்கள் இது எவ்வாறு மாற்றத்தை ஏற்படுத்தும் என்பதை உணரமாட்டார்கள். அதாவது, ஒரு போட்டியைப் பார்க்கும் போது, ஒரு பீல்டருக்கு நேராகவே எப்படி இத்தனை ஷாட்கள் செல்கிறது என்று நீங்கள் எப்போதாவது யோசித்திருக்கிறீர்களா? அது அங்கு ஒருவர் வேண்டுமென்றே வைக்கப்பட்டிருப்பதால் தான். அதனால் தான், இடைவெளிகளை பார்த்து அடிப்பது' பேட்ஸ்மேனின் திறமையின் குறிகாட்டியாகிறது.

மிகக் குறைவாக மதிப் பிடப்படும் மற்றொரு திறமை என்னவென்றால், ஒரு பேட்ஸ்மேன் ஆடுகளத்தின் அந்த 22 யார்டுகளை எவ்வளவு நன்றாக ஓட முடியும் என்பதாகும். இது எளிமையானதாக தெரியும். ஆனால் அதை நீங்கள் முயற்சிக்க வேண்டும், தனியாக அல்ல, எதிர் திசையில் ஒரு கூட்டாளருடன் ஓட வேண்டும். நெருக்கடியான தருணங்களில் இந்தத் திறமை முக்கியமானதாக இருக்கும். ஒரு நொடி கூட வித்தியாசத்தை ஏற்படுத்தும், குறிப்பாக மற்றொரு ரன் ஓட திரும்புவதற்கு எடுக்கும் நேரத்தை நீங்கள் சேர்க்கும்போது. பந்தின் சமநிலை மற்றும் அதன் தையலில் உயரம் கூட வித்தியா சத்தை ஏற்படுத்தும். ஒரு போட்டி தொடங்கும் முன், பீல்டிங் தரப்புக்கு 12 பந்துகள் கொண்ட ஒரு பெட்டி கொடுக்கப்படும், பொதுவாக மூத்த மற்றும் அனுபவம் வாய்ந்த வீரர் ஒருவர் அதில் இருந்து பந்தை தேர்வு செய்வார். சரியான தேர்வு, துல்லியம் மற்றும் பந்து வீச்சாளர் என்ன செய்ய விரும்புகிறார் என்பதில் அனைத்து வித்தியாசங்களையும் ஏற்படுத்தலாம்.

இறுதியாக பழைய நாட்களில் நடுவர்களும் கூட ஆட்டத்தின் முடிவிற்கு காரணிகளாக இருந்தனர். அவர்கள் தவறு செய்தனர் என்பதைக் காட்ட எந்த தொழில்நுட்பமும் அப்போது இல்லை, மேலும் பெரும்பாலும் சொந்த அணியின் நடுவர்கள் தங்கள் நாட்டிற்கு பாரபட்சமாக செயல்பட்டனர். அதனால் தான் நடுநிலை நடுவர்கள் வரவழைக்கப்பட்டனர்.■

ADVT.

Rotary
A Project by
Rotary Club of
Virudhunagar
Dist- 3212

CREATE HOPE
in the WORLD

PROJECT PUNCH

A 3-Day
Spoken English
Programme for
Student Teachers

As on
November, 2023
No. of Occurrences
63
No. of Beneficiaries
7037

What is Project Punch?

Project Punch is a 3-day Spoken English training programme by Rotary Club of Virudhunagar for student teachers (B.Ed. students) to improve their Communicative English and Public Speaking skills.

The programme has been designed in such a way that the participants get the fundamentals to start their journey of communication skills development and that the top performers receive special attention and booster sessions for further improvements.

Contact:
Project Chairman
Rtn.A.Shyamraj
97502 07464

IDHAYAM
PROMISE OF HEALTH AND HAPPINESS

LEKHA ads/Dec 23/ Rotary/2

Registered No. TN/CCN/677/2022-2024 | Total number of pages in this monthly
Licensed to post WPP No.TN/PMG(CCR)/WPP-611/2022-24 | issue, including cover, 84. Price: ₹40
Regd with RNI TNTAM/2018/76372. Rotary News Tamil Published 1st week of every month. Posted at Egmore RMS Patrika Channel. Date of posting: 9–15 every month.

ADVT.

Excel maritime

YOUR GLOBAL LOGISTICS PARTNER

GET IN TOUCH WITH US FOR COMPREHENSIVE

EXIM LEGAL SERVICES

We serve as a one - stop solution to assist you with all the legal requirements in logistics.

Our Services

License schemes - Exemption and Remission,
Promotional / Incentive Schemes,
Value added services - DGFT & Customs,
Customs Refunds & all other services.

For enquiries contact:

+91 93827 50004 | +91 93827 50001
+91 95970 86258

Mail us at: excel@excelgroup.co.in

EXCEL GROUP OF COMPANIES

An Entity of
Excel group
www.excelgroup.co.in

CONTACT

Corporate Office

Old No. 52, New No. 8, Dr. BN Road (Opp. Singapore Embassy), Chennai - 17 PH: +91 44 49166999

www.excelgroup.co.in | / excelgroup